
ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கோயிலொழுகு



ஸ்ரீமத் பரமஹம்ஸ

ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியால்

ஸ்தா2பிக்கப்பட்ட

ஸ்ரீ வைஷ்ணவ க்3ரந்த2 ப்ரகாசந ஸமிதி வெளியீடு.

விலை ரூ. 3-00]   1976   [தபால் 50பை.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கோயிலொழுகு

பதிப்பாசிரியர்:

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி,
ஆசிரியர், "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்"
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620017.

ஸ்ரீமத் பரமஹம்ஸ
ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியால்
ஸ்தா2பிக்கப்பட்ட
ஸ்ரீ வைஷ்ணவ க்3ரந்த2 ப்ரகாசந ஸமிதி
வெளியீடு.

விலை ரூ. 3-00] 1976 [தபால் 50பை.

ஸ்ரீநிவாஸம் பிரஸ், 8, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

முன்னுரை

[ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
ஆசிரியர், 'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்', திருச்சி-17.]

"கோயில் ஒழுகு" என்னும் நூல், "கோயில்" என்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவராலும் வழங்கப்படும் ஸ்ரீரங்கம் கோயில் வரலாற்றை, இதிஹாஸபுராண காலத்திலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை கூறுவதாகும். ஸ்ரீரங்கம் கோவில் அதிகாரிகளால் செவிவழிச்செய்திகளையும், கல்வெட்டுகளையுங்கொண்டு அவ்வப்போது தொகுக்கப்பட்டு உருவான நூல் இது. இதேபோல் திருமலையின் வரலாற்றைக் கூறும் "திருமலை ஒழுகு" என்னும் நூலும் திருப்பதியில் அச்சிடப்பட்டுள்ளது.

எம்பெருமானார் ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாஹத்தை ஒழுங்குபடுத்தியவர் என்பது பிரஸித்$_3$த$_4$ம். **"ராமாநுஜார்ய தி$_3$வ்யாஜ்ஞா வர்த்த$_4$தாம் அபி$_4$வர்த்த$_4$தாம்...ஸ்ரீமந் ஸ்ரீரங்க$_3$ ஸ்ரீயமநுபத்$_3$ரவாம் அநுதி$_3$நம் ஸம்வர்த்த$_4$ய"** [ராமாநுஜாசார்யருடைய சிறந்த ஆணை மேன்மேலும் வளரட்டும்; ஸ்ரீய:பதியே! திருவரங்கச் செல்வத்தை இடையூறில்லாமல் தினந்தோறும் வளர்த்தருள்வாய்] என்று ஸ்ரீ வைஷ்ணவவுலகம் முழுதும் இன்றும் எல்லாக்கோயில்களிலும் வீடுகளிலும் தினந்தோறும் அநுஸந்தி$_4$த்து வருவது இதை வலியுறுத்தும். எம்பெருமானார் ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாஹத்தை ஒழுங்குபடுத்திய முறை கு$_3$ருபரம்பரை நூல்களிலும் காணக்கிடைக்கிறதானாலும், கோயிலொழுகிலேயே அது விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதிஹாஸ புராணகால வரலாறுகளும், ஆழ்வார்கள் எம்பெருமானார்க்கு முந்திய ஆசார்யர்கள் கால வரலாறுகளும் இதில் சுருக்கமாகவே குறிக்கப்பட்டு, எம்பெருமானார் கால வரலாறுகள் மிக விரிவாகக் குறிக்கப்பட்டிருப்பதால், இக்கோயிலொழுகு எம்பெருமானார் காலத்திலோ அல்லது அதை ஒட்டியோ எழுதத் தொடங்கப்பட்டிருக்கவேண்டும் என விளங்குகிறது.

1888-ம் வருஷமும், 1909-ம் வருஷமும் அச்சிடப்பெற்ற இரு பதிப்புகளை ஆதாரமாகக்கொண்டு இப்பதிப்பு அச்சிடப்

பட்டுள்ளது. இதில் 1888-ம் ௵ பதிப்பே சரியான முறையில் அமைந்துள்ளது என்பதை இப்பதிப்பில் 25, 72-ம் பக்கங்களிலுள்ள அடிக்குறிப்புகளிலிருந்து காணலாம்.

திருப்பதி ஸ்ரீ வேங்கடேஶ்வரா பல்கலைக்கழகத்தில் சரித்திரப் பேராசிரியராயிருந்த (டாக்டர்) V. N. ஹரிராவ் அவர்களால், 1961ல் "கோயில் ஒழுகு" பற்றி விரிவான ஆராய்ச்சிநூல் ஒன்று ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்றது. அதில் அவர் "கோயில் ஒழுகு"க்கு ஆங்கிலமொழிபெயர்ப் பொன்றையும் இணைத்துள்ளார். [இந்நூல் ராக்ஹௌஸ் & ஸன்ஸ்(பி)லிமிடெட், 3, சுங்குராமசெட்டிதெரு, சென்னை-1 என்னும் விலாசத்தில் கிடைக்கிறது.] அதில் அச்சிடப் படாத ஓலைச்சுவடியொன்றையும், கையெழுத்துப் பிரதி யொன்றையும்கொண்டு (180 முதல் 204 ஈருக) 25பக்கங்கள் மொழிபெயர்ப்பைச் சேர்த்திருக்கிறார். இப்பகுதி நமக்குக் கிடைக்கவில்லை. எவராவது உதவினால் மறுபதிப்பில் சேர்ப்போம்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நூல் இப்போது கிடைக்காமலிருப்பது கண்டு ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி இதை அச்சிடும்படி நியமித்தருளினர். அவரால் ஸ்தாபிக்கப்பெற்ற க்ரந்த₂ ப்ரகாஶந ஸமிதி, எந்தையாரால் ஸ்தாபிக்கப்பெற்ற S. R. S. K. S. டிரஸ்ட் ஆகிய இரண்டு நிறுவனங்களின் உதவியால் இந்நூல் இப்போது வெளிவருகிறது. ஸ்ரீ வைஷ்ணவர்களும், சரித்திர ஆசிரியர்களும் இந்நூலின் உதவிகொண்டு ஸ்ரீரங்கம் கோயில்பற்றியும், வைணவம் பற்றியும், பல சரித்திர உண்மைகளை அறியலாம். இத்தகைய நூல்களை ஆஸ்திகவுலகம் ஆதரித்தால், ஜீயர் ஸ்வாமியும், நாமும் மேலும் பல நூல்களை வெளியிட உதவியாயிருக்கும்.

நள-௵
விஜயதசமி
(3—10—76)

ஸ்ரீ வைஷ்ணவ தா₃ஸன்,
S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
"ஆசிரியர்" ஸ்ரீ வைஷ்ணவ ஸுத₃ர்ஶனம்.

விஷயஸூசிகை

எண்	விஷயம்	பக்கம்
1.	த$_4$ர்மவர்மாவின் கைங்கர்யம்	1
2.	இளிசோழன் கைங்கர்யம்	2
3.	ராஜமஹேந்திர சோழன் கைங்கர்யம்	3
4.	நந்தசோழன் கைங்கர்யம்	3
5.	குலசேகரப்பெருமாள் கைங்கர்யம்	5
6.	ஆரியபட்டாள்வாசல்	5
7.	திருமங்கையாழ்வார் ப்ரபாவம்	6
8.	சோளேந்திரஸிம்ஹன் கைங்கர்யம்	10
9.	கங்கைதேவர் சிங்கணன் தண்டநாயக்கர் கைங்கர்யம்	11
10.	விக்ரமசோழனான அகளங்கன் கைங்கர்யம்	11
11.	சுந்தரபாண்டியதேவர் கைங்கர்யம்	11
12.	எம்மண்டலங்கொண்டு கோயில் பொன்மேய்ந்த பெருமாள் சுந்தரபாண்டியதேவர் கைங்கர்யம்	12
13.	குலோத்துங்கசோழன் கைங்கர்யம்	15
14.	கம்பயதண்டயநாயக்கர் கைங்கர்யம்	15
15.	கரியமாணிக்கத்தண்டயநாயக்கர் கைங்கர்யம்	15
16.	மலைப்பெருமாள் கைங்கர்யம்	15
17.	வீரநரசிங்கதேவர் கைங்கர்யம்	16
18.	ஆகுளூர் வரநாதராயர் கைங்கர்யம்	16
19.	தேவப்பெருமாள் கைங்கர்யம்	16
20.	வாலநாதராயர் கைங்கர்யம்	16
21.	திருவிக்கிரமசோழன் கைங்கர்யம்	16
22.	பள்ளிகொண்டான்சோழன் கைங்கர்யம்	17
23.	கலியுகராமன் கைங்கர்யம்	17
24.	திருக்குறளப்பன் ஸந்நிதி	17
25.	வல்லபதேவன் கைங்கர்யம்	18
26.	திருமங்கைமன்னன் கைங்கர்யம்	18
27.	காட்டழகியசிங்கர்	19
28.	சோழன் பிரதிஷ்ட்டை$_2$	19
29.	டில்லீசுவரன் அழகியமணவாளனைக் கொண்டுபோனது	19
30.	ஸ்த$_2$லத்தார் அழகியமணவாளனை எழுந்தருளப்பண்ணிக் கொண்டுவந்தது	20
31.	ஸூரதாணி பெருமாளைத் தேடிக்காணாமல் சரீரம்விட்டது	21
32.	கொடவர் அழகியமணவாளனைக் காத்தது	22

33. டில்லீசுவரன் ஆச்சரியப்பட்டது 23
34. திருவரங்க மாளிகையாரையும் வேறே
நாச்சியாரையும் கோயிலில் ப்ரதிஷ்ட்டி₂ப்பித்தது 23
35. அழகியமணவாளனையும் கொடவரையும்
இருளர் கண்டது 24
36. பெருமாளையும் கொடவரையும் சந்திரகிரிப்ரபு
வெளிப்படுத்தினது 25
37. கொடவர் பெருமாளுடன் கோயிலில் எழுந்தருள,
பரிஜநங்கள் தகைந்தது 25
*38. கோபண உடையார், அழகியமணவாளனை
சிங்கபுரத்தில் ஆதரித்து எழுந்தருளப்பண்ணினது 25
*39. கோபணவுடையார், குண்டுஸாளுவயர்,
விருப்பண உடையார் கைங்கர்யம் 27
40. வண்ணுனலே அழகியமணவாளனென்று தெளிந்த
ராஜேந்திரசோழன் கைங்கர்யம் 28
41. திருத்தாழ்வரைதாஸர், ஈரங்கொல்லி,
பஞ்சுகொண்டான், இசையறியும் பெருமாள்
கூட்டத்தார் என்னும் அருளப்பாடு 30
42. ஸ்ரீமந்நாத₂முனிகள் கல்பித்த கட்டளை 30
43. க₃ாயகஸார்வபெ₄ளமனுன அழகியமணவாளன்,
பாடுவார்க்கு அரையர் என்னும் திருநாமமும்
குல்லாவும், தொங்கல்பட்டும் ஸாதி₃த்தது 34
44. உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி,
ஆளவந்தார் வைப₄வம் 34
45. ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் வைப₄வம் 35
46 உடையவர் வைப₄வம் 36
47. உடையவர்-ஸந்நிதி₄ பரிகரங்களுக்குக்
கைங்கர்யம் நியமித்தல் 42
48. ப₄ட்டர் வைப₄வம் 58
49. சீராமப்பிள்ளை வைப₄வம் 59
50. கூரநாராயணஜீயர் வைப₄வம் 59
51. பெரியாயி, சிறியாயி வைப₄வம் 67

* 38, 39-விஷயங்கள்-பக்கம் 72 அடிக்குறிப்பில் கண்டபடி அங்கு இருக்கவேண்டியவை.

52. ஈயான் ராமாநுஜாசார்யர் வைப₄வம் 68
53. எம்பெருமானடியாள் கோயிலைக்காத்தது 68
54. அழகியமணவாளப்பெருமாள், ஜோதிஷ்குடி, திருமாலிருஞ்சோலை, கோழிக்கூடு, புங்கனூர் வழியாகத் திருநாராயணபுரத்துக்கு எழுந்தருளினது 71
55. பெருமாள் திருவேங்கடத்துக்கு எழுந்தருளியது 72
56. எம்பெருமானடியாளுக்குக் கட்டளையிட்டது 72
57. திருவாழிக்கல் பொகட்டது 74
58. பெரியகிருஷ்ணராயர் உத்தமநம்பி கைங்கர்யம் 75
*59. நாக மங்க₃லம் அண்ணப்பவுடையார் கைங்கர்யம் 75
60. திம்ம ராகுத்தர் கைங்கர்யம் 75
61. ஹரிஹர ராயர் கைங்கர்யம் 76
62. வேத₃ார்ய ப₄ட்டர் ஸ்ரீ கார்யம் நிர்வஹித்தது 76
63. கந்தாடையார் அதீ₄நமாயிருந்த உடையவர் ஸந்நிதி₄யை வேத₃ாசார்யபட்டர் உடன்படிக்கை கொடுத்துத் தன் வசமாக்கினது 76
64. பெரியகிருஷ்ணராயருத்தமநம்பி, பெரியநம்பி வம்ஶஸ்த₂ர் திருவடிகளில் ஆஶ்ரயித்தது 78
65. கஜவேட்டை ப்ரதாபதே₃வமஹாராயர் காலத்தில், உத்தமநம்பி சக்ரராயருடன் ஸ்ரீகார்யம் நிர்வஹித்தது 78
66. வழியடிமைநிலையிட்ட பெருமாளுத்தமநம்பி பிள்ளை கைங்கர்யம் 79
67. உத்தமர்கோயில் ஸ்ரீரங்க₃ராஜர் கைங்கர்யம் 80
68. விருப்பண்ணவுடையார் கைங்கர்யம் 80
69. பெரியஜீயர், உத்தமநம்பியைக்கொண்டு கந்தாடை அண்ணனுக்கு ஏற்படுத்தின மரியாதைகள் 81
70. சக்ரராயர் கைங்கர்யம் 82
71. தென்னயக்கர் கைங்கர்யம் 83
72. சாத்தாத நரசிங்கத₃ாஸர் கைங்கர்யம் 83
73. நம்பெருமாள் 'ஸ்ரீஶைலேஶ த₃யாபாத்ரம்' என்னும் தனியன் ஸாதி₃த்தது 83
74. எல்லைக்கரைமதில் கட்டினது 84

* 59, 60, 61, 74 to 77, 80 to 84, 89 to 95 தலைப்புகள் 1888-ம் வருஷ பதிப்பில் மாத்திரம் உள்ளன. 1909-ம் வருஷ பதிப்பில் தலைப்புகளில்லாமல் விஷயங்கள் உள்ளன.

75. அண்ண ஆண்டப்ப உடையார்
திருமலைதந்தான் கைங்கர்யம் 84
76. அண்ணப்ப உடையார் கைங்கர்யம் 84
77. பராசர் கைங்கர்யம் 84
78. புத்தூர் அழகியமணவாளப்பெருமாள் கைங்கர்யம் 84
79. உத்தமநம்பி, சக்ரராயர் நிர்வஹித்தது 84
80. கருட₃வாஹநபண்டி₃தர் கைங்கர்யம் 85
81. அண்ணப்பருடையார் கைங்கர்யம் 85
82. நாகராஜ உடையார் கைங்கர்யம் 85
83. வழியடிமைநிலையிட்ட உத்தமநம்பி கைங்கர்யம் 85
84. பெரிய சக்ரராயர் கைங்கர்யம் 85
85. மூவெந்திறையார் தீராவினைதீர்த்தார்,
திருவேங்கடமுடையான் கைங்கர்யம் 87
86. திருமலைநாதவுத்தமநம்பி கைங்கர்யம் 87
87. க்ருஷ்ணராய உத்தமநம்பி கைங்கர்யம் 89
88. குடல்சாரவாளநயினார் கைங்கர்யம் 89
89. கோ₃விந்த₃ராஜர் கைங்கர்யம் 89
90. கம்பராஜாமல்லர் கைங்கர்யம் 90
91. ஜங்நயநாயக்கர் கைங்கர்யம் 90
92. அப்புள்ளார் ப்ரதிஷ்டை 90
93. கம்பயராஜா கைங்கர்யம் 90
94. ஆழ்வார்ஜீயர் கைங்கர்யம் 90
95. அழகர் கைங்கர்யம் 90
96. ஸாளுவதிருமலைராஜா கைங்கர்யம் 91
97. கந்தாடை ராமாநுஜத₃ாஸர் கைங்கர்யம் 92
98. தே₃வத₃ாயம் ராயரதீ₄நமானது 96
99. உடையவர் கல்பித்த கட்டுக்கொலைந்தது 97
100. நம்பெருமாள் கோயிலிலேயே எழுந்தருளியிருந்தது 97
101. விசுவநாதநாயக்கரைக்கொண்டு,
நரஸிம்ஹாசார்யர் பண்ணின கைங்கர்யம் 97
102. க்ருஷ்ணப்பநாயக்கர் கைங்கர்யம் 98
103. குமாரக்ருஷ்ணப்பநாயக்கர் கைங்கர்யம் 98
104. உத்தமநம்பிக்கும் ப₄ட்டர் திருமலாசார்யருக்கும்
உண்டான கலஹம் 99

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கோயிலொழுகு

"மாடமாளிகைசூழ் திருவீதியும் மன்னுசேர்திருவிக்கிரமன் வீதியும்
ஆடல்மாறனகங்கன்வீதியும் ஆலிநாடனமர்ந்துறைவீதியும்
கூடல்வாழ்குலசேகரன்வீதியும் குலவிராசமகேந்திரன்வீதியும்
தேடரியதர்மவர்மாவின்வீதியும் தென்னரங்கர் திருவாவரணமே"

என்று பூர்வர்கள் திருவரங்கந் திருப்பதியை அநுப$_4$வித்தபடியே, பூர்வர்கள் பண்ணின திருப்பணி கைங்கர்யத்துக்கு விவரம்:—

ஆதிப்$_3$ரஹ்மா ஸ்ரீரங்க$_3$விமாநத்தை லபி$_4$த்து ஸத்யலோகத்திலே அநேகநாள் ஆராதி$_4$த்தவநந்தரம், அந்த தி$_3$வ்ய விமாநத்தை இக்ஷ்வாகு லபி$_4$த்து, அயோத்$_4$யா பட்டணத்தில் நெடுங்காலம் திருவாராத$_4$நம் கண்டருளி, தத்$_3$வம்ஶ்யராய் ஆராதி$_4$த்து சக்ரவர்த்தித்திருமகன், தம்முடைய க்ருபையினாலே ஸ்ரீரங்க$_3$விமாநத்தை ஸ்ரீவிபீ$_4$ஷணாழ்வானுக்குக் கொடுக்க, அவனும் அந்த விமாநத்தை ஶிரஸா வஹித்துக்கொண்டு, இரண்டு திருக்காவேரி நடுவிலே ஸ்ரீசந்த்$_3$ரபுஷ்கரிணிக் கரையிலே கொண்டுவந்து அவ்விமாநத்தை த$_4$ர்மவர்மா லபி$_4$த்துப்போர;

த$_4$ர்மவர்மாவின் கைங்கர்யம்

திருவாசலும், அமுதுமண்டபமும், கோயிலாழ்வாரைச் சூழ்ந்த திருவெண்ணாழியும், திருவணுக்கன் திருவாசல் திருமதிளும், திருநடைமாளிகை, அழகியமணவாளன் திருமண்டபம் முதலான பல திருமண்டபங்களும், பல

திருமதிள்களும், பல கோபுரங்களும், சேனைமுதலியார் கோயிலும், விமானமும், அதுக்கு வடமேல்புறத்திலே இரண்டாம் திருமதிளில் வடக்கு வாசலுக்குமேலே திருக் கோபுரநயினாரும், திருக்கோபுரமும். சந்த்₃ர புஷ்கரிணிக் கரை ஆஸ்தா₂ந மண்டபமும் கட்டிவைக்கையில் **த₄ர்ம வர்மாவின் கைங்கர்யம்.**

கிளிசோழன் கைங்கர்யம்

அதன்பின், அநேககாலத்துக்குப் பிற்பாடு திருக்காவேரி ஸ்தூபிபர்யந்தம் மணல்கொழித்து ப₃ஹுகாலமாய்க் காடு மூடிப்போன வநந்தரம், யாத்₃ருச்சி₂கமாக த₄ர்மவர்மாவின் வகையில் சோழன் அந்தவிடத்திலே ஒருமரத்தின் நிழலிலே யிருக்க, அந்த மரத்தின் மேலே ஒரு * ஶுகமிருந்து

காவேரீ விரஜா ஸேயம் வைகுண்ட₂ம் ரங்க₃மந்தி₃ரம் |
ஸ வாஸுதே₃வோ ரங்கே₃ஶ: ப்ரத்யக்ஷம் பரமம் பத₃ம் || (1)

விமாநம் ப்ரணவாகாரம் வேத₃ஶ்ருங்க₃ம் மஹாத்₃பு₄தம் |
ஸ்ரீரங்க₃ஶாயீ ப₄க₃வாந் ப்ரணவார்த்த₂ப்ரகாஶக: || (2)

என்று இரண்டு ஶ்லோகத்தையும் அநேகாவ்ருத்தி சொல்லக் கேட்டு, சோழனும் ஆஶ்சர்யப்பட்டு, "இந்தக் கிளி புராணவசநம் சொல்லிற்றே! இதென்ன?" என்று விசாரித்து, தெரியாதபடியினாலே, ஸ்ரீரங்க₃விமாநத்தை உண்டு பண்ணுகிறதுக்கு, அந்த மரத்துக்கு மேற்கே திருமுடிக்கு நடுவிலே அஸ்திவாரம் பறித்து அரையளவு தலைவரையும் ஏறினவளவிலே, அவன் ஸ்வப்நத்திலே "நாம் அந்த மரத்தின் கீழே இருக்கிறோம்" என்று சொல்ல; அவனும் அந்த மரத்தின்கீழே ஸ்ரீரங்க₃ விமாநம் இருக்கக்கண்டு ஸந்தோஷித்து, அந்தக் காடுவெட்டி மணலையும் பறிப்பித்து, கோயிலாழ்வார் விமாநம் முதலாகத் திருவீதியுட்பட பூர்வப்ராகாரம் எல்லாவற்றையும் தென்னுறு வடவாறுகளும் கட்டி வைத்து, பல திருநந்தவநங்களையும் உண்டாக்கி, திருப்

* ஶுகம் - கிளி.

பணித் திருவாராத₄நங்களும் கண்டருளப்பண்ணி, **திருவரங்கம் திருப்பதி** என்று விளங்கினது, த₄ர்மவர்மாவின் வகையில் கிளிசோழன் கைங்கர்யம்.

ராஜமஹேந்திர சோழன் கைங்கர்யம்

ததநந்தரம், ராஜமஹேந்த்₃ரன், ப்ரதிஸம்வத்ஸரமும் திருக்காவேரி பெருகிவந்தால் திருவணுக்கன் திருவாசலுக்குள்ளே ஊற்றூறலாயிருக்கையில், அத்தைத்துறப்பித்து, திருவனந்தாழ்வான் கண்வளர்ந்தருளுகிறவிடமும் முதலாகத் தளவரிசை பண்ணுவித்து, கோயிலாழ்வாரைச்சூழ எழுந்தருளியிருக்கிற நாராயணர், நாபி₄களிநர், நாக₃ஶயநர், நாரஸிம்ஹர் இருக்கிற தளவரிசை மட்டத்துக்கு மேலேயும் எடுத்துக்கட்டி, தூணும் எழவீசிக் கட்டிவைத்துத் தளவரிசையும் படுப்பித்து, இரண்டாம் ஆவரணத்துத் திருமதிள்களும், தெற்குத் திருவாசல் கோபுரமும், வடவண்டைத் திருவாசலும், த₄ர்மவர்மாவின்வகை கைங்கர்யமான திருக்கோபுரநயினார் சேனைமுதலியார் கோவில் தவிரத் திருக்கோபுரமும் தளவரிசையும் ராஜமஹேந்த்ரசோழன் கைங்கர்யமாகையாலே, **ராஜமஹேந்த்₃ரன் திருவீதி** என்று வ்யவஹாரம் நடந்துவந்தது.

நந்தசோழன் கைங்கர்யம்

அநந்தரம், நிசுளாபுரியிலே த₄ர்மவர்மாவின் வம்ஶயரான நந்தசோழன் ராஜ்யம் பண்ணுகிறகாலத்தில், பூ₃ஹுகாலம் (க) அநபத்யனாயிருந்து ஸ்ரீரங்க₃நாயகரிடத்திலே அதிப்ரவணராய் தபஸ்ஸைப்பண்ணி, அந்த தபோப₃லத்தினாலே ஒரு நாள் தாமரைஓடையில் தாமரைப்பூவிலே ஒரு ஶிஶுவாக, ஸ்த்ரீப்ரஜையிருக்கக்கண்டு, அந்த ராஜா ஹ்ருஷ்டராய் அந்தக் குழந்தையைத் தம்முடைய க்₃ருஹத்திலே கொண்டு வந்து, **கமலவல்லி** என்று நாமகரணம்பண்ணி வளர்க்குமிடத்தில், அந்தக் குழந்தையும் வளர்ந்து பெரியவளாய்,

---

(க) அநபத்யன் - குழந்தையில்லாத மலடன்.

ஒத்த பெண்களுடனே விளையாடும் காலத்திலே, ஒருநாள் தோழிகளுடனே லீலோத்₃யாநத்தில் புஷ்பசயம் பண்ணுகிற ஏகஸமயத்திலே, ஸ்ரீரங்க₃ராஜர் குதிரைநம்பிரான்மேலே ஏறியருளி, பலாஶதீர்த்த₂த்துக்கு வேட்டையாட எழுந்தருளுகிறவர், அந்தக் கமலவல்லிக்கு அதிஸௌந்த₃ரராய் விப₄வாவதாரமாக ஸேவைஸாதி₂க்க; கமலவல்லியும் கண்டு மோகித்து, மஹாப்ரயத்நத்திலுலே தோழிமார் தேற்றத் தெளிந்து,தன் வீதியிலே வந்து (3)உந்மத்தை போலேயிருக்க. அந்த ராஜாவும், கமலவல்லியைக் கண்டு, மந்மத₂விகாரம் என்று கணிசித்து, "உனக்கு ஆர்மேலே மநஸ்ஸு இருக்கிறது" என்று கேட்க; கமலவல்லி—தனக்கு ஸ்ரீரங்க₃நாயகரன்றியிலே ஒருத்தரிடத்திலேயும் மநஸ்ஸு இல்லை; தன்னை ஸ்ரீரங்க₃ராஜருக்கு பாணிக்₃ரஹணம் பண்ணுவியும்—என்று சொல்ல; ராஜாவும் ஸந்துஷ்டராய், தன் மந்திரிகளுடனே ஆலோசித்து, தம்முடைய குமாரத்தி கமலவல்லியை ஸ்ரீரங்க₃ராஜருக்குக் கன்னிகாப்ரதா₃நம்பண்ணி, அதிவிஸ்மிதமாகத் திருக்கல்யாண மஹோத்ஸவத்தைப் பண்ணுவித்து, பெண்ணைக் கோயிலுக்கு அனுப்பும்போது ஸ்த்ரீத₄னமாக முந்நூற்றறுபதின்கலம் தங்க அமுதுபடியும், அதுக்கு வேண்டின பருப்பமுதும், கொம்பஞ்சு கொடியஞ்சு கறியமுதும், அவைகளுக்கு வேண்டின சம்பாரங்களெல்லாம் தங்கத்தாலே பண்ணுவித்து அவைகளையும், ஸ்த்ரீகளுக்கு ஸமங்களான நூறு பரிசாரிகைகளையும் கொடுத்தனுப்பிவைக்க; அந்தக் கமலவல்லியும் கோவிலிலே வந்து திருமண்ணுக்குள்ளே புகுந்து அத்₃ருஶ்யையாக; அத்தைக் கண்டு ராஜாவும் அதிஸந்துஷ்டராய், அநபத்யராகையாலே தம்முடைய ஸர்வஸ்வத்தையும் பெருமாளதீ₄னம்பண்ணி, திருமாமணி மண்டபங்களும், திருமதிள்களும், திருக்கோபுரங்களும், திருநந்தவநங்கள் முதலானவைகளையும் கட்டிவைத்து, தம்முடைய பட்டணமான உறையூரிலேயும் தம்முடைய குமாரத்தியையும் அதிஸௌந்த₃ர ரூபத்திலுலே

(3) உந்மத்தை - பைத்தியம் பிடித்தவள்.

வஶீகரித்தபடியாலே அழகியமணவாளப் பெருமாளையும் ப்ரதிஷ்டி₂ப்பித்து, விமானகோ₃புர மண்டப ப்ராகாராதி₃களையும் விஸ்த்ருதமாகக் கட்டிவைத்து, அனைத்தழகும் கொண்டருளப் பண்ணுவித்துக்கொண்டிருந்தார். இந்தப்படி உறையூரிலே ப₃ஹுகாலம் நடந்தபின்பு, கலியுக₃த்திலே ப₃ஹுகாலம் சென்ற வநந்தரம் ஒருகால விஶேஷத்திலே ஒரு சோழனுடைய பாபவிஶேஷத்தினாலே மண்மாரிபெய்து பட்டணம் முழுகிப்போயிற்று. அநந்தரம், அதுமுதலாக சோழ தே₃ஶாதி₄பதிகள் கங்கைகொண்டானிலே வாஸம் பண்ணுகையில், காலவிஶேஷத்திலே உறையூரிலே கொஞ்சமாகக் கோயில்கட்டி, பெருமாளையும் நாச்சியாரையும் ஒரு சோழன் ப்ரதிஷ்டி₂ப்பித்தான். கமலவல்லியைத் திருமணம் புணர்ந்தது முதலாக, "**அழகியமணவாள ராஜ மஹேந்த்₃ரன் திருவீதி**" என்று திருநாமமாய்த்து.

குலசேகரப்பெருமாள் கைங்கர்யம்

கல்யப்₃த₃ம் ஐம்பது வருஷத்துக்குமேல் குலஶேக₂ரப் பெருமாள், சேர சோழ பாண்டிய மண்ட₃லங்களுக்கு ப்ரபு₄வாய், உறையூர், மதுரை, கொல்லிநகர்களிலே திருமாளிகை கட்டி ராஜ்யப₄ாரம் பண்ணுகிற காலத்திலே, நீளாம்ஶையான தம்முடைய புத்ரி சோழவல்லியை அழகிய மணவாளப்பெருமாளுக்குத் திருமணம் புணர்ப்பித்து, தம்முடைய த₄நத்தையும் ஸ்த்ரீத₄னமாகப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து, மூன்றும் ஆவரணத்தின் தென்மேற்கிலே சேனைவென்றான் திருமண்டபமும் கட்டி, அந்தத் திருச்சுற்று ஜீர்ணோத்₃த₄ாரணம் பண்ணுகையில், அந்தத் திருவீதிக்கு **குலசேகரன் திருவீதி** என்று திருநாமமாய்த்து.

ஆரியபட்டாள்வாசல்

அதன்பின்பு, கல்யப்₃த₃ம் முந்நூற்றறுபது வருஷத்துக்குமேல், வடக்கேயிருந்து கௌ₃ட₃தே₃ஶத்துக்கு ப்ரபு₄வானவன், அநேகம் ஸேனையுடனே ப₃ஹுத்₃ரவ்யத்தை

துலாபுருஷம் தூக்கிக்கொண்டுவந்து பெருமாளுக்கு ஸமர்ப்பிக்குமிடத்தில், அந்த த்₃ரவ்யத்தை அங்கீ₃காரம் பண்ணுமல் ப₃ஹுநாள் வெளியிலே கிடக்க; அதுக்குக் காவலாகவும் தன் மநுஷ்யர்களைக் கோவில் வாசலிலே காவலாகவிருக்கவும், ஆரியதே₃ஶத்தில் ப்₃ராஹ்மணரை வைத்துப்போன படியினலே, அந்த ப்₃ராஹ்மணர் பெருமாள் திருவுள்ளமிரங்கும்படி நடந்துகொண்டபடியினலே பெருமாளும் அவர்களைக் கடாக்ஷித்துத் திருப்பவளம் திறந்து வார்த்தையருளிச்செய்து, அவர்களுக்காக ப்ரபு₄வை அநுக்₃ரஹித்து, கோயிலிலும் புறப்பட்டருளும்போதெல்லாம் மூன்றும் வாசலிலே தாம் அவர்களுக்கு அர்ச்சாவதார மர்யாதை₃யை அளித்துத் திருப்பவளம் திறந்து வார்த்தையருளும்படி:— '**அருளப்பாடு செம்பொன்மாளிகை திருவரங்கேசனர் திருவாய் மலர்ந்தருளித் திருகூறுசெய்வார்**'. அவர்களுக்காக அந்த வகுப்பான கௌட₃தே₃ஶாதி₄பதிக்கும் '**அருளப்பாடு செம் பொன்மாளிகை யருள்செய்தார்**' என்று சாதித்தெழுந்தருளுவர். அதுமுதலாக அந்தத் திருவாசலுக்கு ஆரிய பட்டாள் வாசல் என்று திருநாமமாய்த்து.

திருமங்கையாழ்வார் ப்ரபாவம்

கல்யப்₃த₃ம் நானூற்றுநாற்பத்தஞ்சு வருஷத்துக்குமேல் (ஆழ்வார்) திருமங்கையாழ்வார் தினம் திருவரங்கந் திருப்பதியிலே நித்யவாஸம் பண்ணிக்கொண்டு திருமொழி முதலான ப்ரப₃ந்த₄ங்களையும் அருளிச்செய்துகொண்டு பல திருப்பணிகளையும் பண்ணிக்கொண்டு எழுந்தருளும் காலத்திலே, திருவிளக்குப் பிச்சனைப் பெருமாள் கடாக்ஷித்து, அவனுடனே நித்யமாக வினவியருளும் காலத்திலே, ஒருநாள் திருவிளக்குப் பிச்சனைச் சேதி கேட்டருள, பிச்சனும் திருமங்கைமன்னன் விஷயமாக, 'ப்ரப₃ந்த₄முக₂த்தாலே தேவரைப்பாட நினைத்துத் தன்னைத்தானே துதித்தான்' என்று விண்ணப்பஞ்செய்யக் கேட்டருளி, 'திருமங்கை மன்னன் சேதியை நினைக்கவேண்டாம்' என்று நியமித்து,

ஆழ்வாரிடத்திலே மிகவும் கிருபையுடனே எழுந்தருளியிருக்கும் காலத்திலே; மதுரகவியாழ்வார், திருநகரியிலே ஶட₂கோபனை அர்ச்சாவிக்₃ரஹமாக ப்ரதிஷ்டி₂ப்பித்து, கம்பனையும் ஆழ்வார் ஸூக்தியாலே * சங்கப்பலகையிலே ப்ரத்யக்ஷமாக ஜயித்து, ஆழ்வாருக்கும் அனைத்தழகு கொண்டருளப் பண்ணிக்கொண்டு, திருவரங்கந் திருப்பதியிலே அடிக்கடி வந்து ஸ்ரீகார்யம் ஆராய்ந்துகொண்டிருக்கிற காலத்திலே; ஒரு திருக்கார்த்திகை தி₃வ்ய மஹோத்ஸவத்திலே பெருமாளும் நாய்ச்சிமார்களும் திருமஞ்சனம் கண்டருளி, உடுத்துப் பூசி முடித்து ஒப்பித்திருக்க; திருமங்கையாழ்வாரும் 'திருநெடுந்தாண்டகம்' என்று ஆறு ப்ரப₃ந்த₄த்தை யிட்டருளி, பெருமாள் திருச்செவி சாத்தும்படி தே₃வகா₃னத்திலே ஏறிட்டு அபி₄நயித்து அநுஸந்தி₄க்க—பெருமாளும் போரவுகந்தருளி, ஆழ்வாருக்கு ஸகலவரிசைகளும் சாதிக்கத் திருவுள்ளம்பற்றி, 'ஆழ்வார்! நாமுமக்குச் செய்ய வேண்டுவதென்?' என்று சொல்ல; திருமங்கைமன்னனும், 'நாயன்தே! ஸம்ஸாரியாய்ப்போந்த அடியேனை இப்படி விஷயீகரித்தபின்பு அடியேனுக்கு ஒரு குறையுமில்லை; ஆகிலும், / மார்கழி மாசத்திலே ஶுக்லபக்ஷத்தில் ஏகாதசியினன்று அத்₄யயனோத்ஸவம் கொண்டருளும்போது ஶட₂கோபன் சொல்லான திருவாய்மொழியை வேத₃ங்களுடனே கேட்டருளி, வேத₃ஸாம்யமாக அநுக்₃ரஹித்தருள வேணும்' என்று விண்ணப்பஞ் செய்ய; பெருமாளும் மிகவும உகந்தருளி, அப்பொழுதே ஶட₂கோபன் திருவாய்மொழிக்கு வேத₃ஸாம்யம் அநுக்₃ரஹித்து, 'அத்₄யயனோத்

---

* நம்மாழ்வார் பெருமையைக்கண்டு சங்கத்தலைவர் பாடிய செய்யுள்:—

ஈயாடுவதோ கெருடற்கெதிரே? இரவிக்கெதிர் மின்மினியாடுவதோ?
நாயோடுவதோ வுறுப்புலிமுன்? நரி கேசரிமுன் நடையாடுவதோ?
பேயாடுவதோ வழகூர்வசிமுன்? பெருமானடிசேர் வகுளாபரணன்
ஓராயிரமாமறையின் தமிழின் ஒருசொற்பொருமோ வுலகிற்கவியே.

/ இந்த விருத்தாந்தத்தை பெரியவாச்சான்பிள்ளையின் "கலியனருள் பாடு" என்னும் க்ரந்தத்தில் பரக்கக் காணலாம்.

ஸவத்திலே வேதங்களுடனே திருவாய்மொழியும் கேட டருளுகிறதாகத் திருவுள்ளமானோம்' என்று திருமுகட பட்டயமும் ஸகலவரிசைகளையும் நம் § தளையிடுவான் கையிலே அனுப்பியருள ; 'இக்கலியன் தேவகானத்தி னாலே மிகவும் பாடுகையாலே அவர் மிடறுநொந்தது: இன்று நாம் சாத்தியிருந்த தைலக்காப்பை அவர் மிடற் றிலே தடவுங்கோள்' என்று பரிஜநங்களை நியமிக்க; பரிகரமும் அப்படியே செய்ய ; திருமங்கைமன்னன் க்ருதார்த்தராய், தம்மிடத்துக்கு எழுந்தருளினார். § தளை யிடுவானும் திருமுகப்பட்டையம் முதலான ப்ரஸாதங்களை யும் கொண்டுவருகிற சேதியைக் கேட்டு ஶடகோபனும், மதுரகவிகளுடனே புறப்பட்டருளி, §தளையிடுவாரையெதிர் கொண்டு ப்ரஸாதமும்கூடித் திருமுகப்பட்டையத்தையும் ஶிரஸாவஹித்துத் தளையிடுவாரை ஆதரித்து, மறுநாள் திருநகரியிலும் புறப்பட்டு மார்கஶீர்ஷமாஸத்து சுக்ல தஶமியினன்று கோயில்வர எழுந்தருள ; அச்சேதியைக் கேட்டுத் திருமங்கைமன்னனும் எதிர்கொண்டு ஆழ்வாரை ஸேவித்து, மதுரகவிகளுடனே பெரியபெருமாள் ஸந்நிதி யிலே எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவர, பெருமாளும் ஆழ்வாரைக் கடாக்ஷித்து '**நம்மாழ்வார்**' என்று திருநாமம் சாத்தி, ஸகலவரிசையும் ப்ரஸாதித்து. ஸந்த்யாமடமான திருக்குறளப்பன் கோயிலிலே விடுதியாக விடச்சொல்லி நியமிக்க, அந்தப்படியே திருமங்கைமன்னனும் மதுரகவி களும், பரிஜநங்களுடன் ஆழ்வாரைத் திருக்குறளப்பன் ஸந்நிதியிலே எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய், மற்றைநாள் விடிவோறே திருவத்யயந உத்ஸவம் ஆரம் பித்து வேதாதிகள் தொடங்கி நடந்தவநந்தரம், ராத்ரி அழகியமணவாளன் திருமண்டபத்தில் ஆழ்வார் எழுந் தருள, பெருமாளும் '**அருளப்பாடு திருவாய்மொழி விண் ணப்பம் செய்வார்**' என்று அருளப்பாடு முதலான ஸகல வரி சைகளும் ஸாதிக்க, மதுரகவிகளும் ஆழ்வாருக்குக் கரண

§ **தளையிடுவான் - திருப்பணிசெய்வான்.**

பூ$_4$தராயிருந்து, திருவாய்மொழியைத் தொடங்கி, தே$_3$வ கா$_3$நத்தினாலே அபி$_4$நயத்துடனே ஸேவித்து, பத்தாம் திருநாளில் வேத$_3$ாதி$_3$கள் சாற்றினவுடனே, ராத்ரி திருவாய்மொழியும் சாற்றி, ஆழ்வார்முன்பு திருவாய்மொழியைத் தலைக்கட்டினவாறே திருவடிகளைச் சேர்ந்தபடியை அநுகரித்து, பெருமாள் திருவடிகளைச் சார்ந்தவுடனே பெருமாளும் ஆழ்வாரை ஏகாஸநத்திலே வைத்துக்கொண்டு, திருமாலைகள், ப்ரஸாத$_3$ம், கஸ்தூரித் திருமண்காப்பு முதலான அனைத்துகளை ப்ரஸாதி$_3$த்துத் திருநகரிக்கு விடைசாதித்து, தம்முடைய வரிசைகளெல்லாம் சாதித்து அனுப்பியருள; நம்மாழ்வார் உடனே, கலியன் பின்செல்ல, மது$_4$ரகவிகளுடன் புறப்பட்டருளி, திருநகரிக்கு எழுந்தருளி, ப்ரதிஸம்வத்ஸரம் இந்தப் பிரகாரம் நடக்க; திருமங்கை மன்னனுக்குமாக த$_3$ர்ஶந ப்ரப$_3$ந்த$_4$ம் அருளினதினாலே, ஷட்கைங்கர்யமும் செய்தருளுவதாக, ராஜமகேந்திரன் திருவீதியில் வடகிழக்கிலே நூற்றுக்கால் மண்டபமாகத் திருமாமணி மண்டபம் கட்டி, அதிலே பிரதிஸம்வத்ஸரமும் அத்$_4$யயநோத்ஸவம் நடத்தி, குலசேகரன் திருவீதியைச் சூழ்ந்த திருமதிளும் அதுக்குத் தெற்கு வடக்கு திருவாசல் கோபுரங்களும், அத்திருவீதியில் தென்மேல்மூலைத் திருமண்டபமும் திருநடைமாளிகையும், தென்கிழக்கிலே பெரிய திருமடைப்பள்ளியும், நாலாந்திருச்சுற்றைச்சூழ்ந்த திருமதிளும், அதில் தெற்கு வடக்குக் கோபுரங்களும் கட்டிவைக்குமிடத்தில் வடக்குத் திருகோபுரத்திலே எடுத்தகை அழகிய சிங்கநயினார் ஸாந்நித்$_4$யம் செய்தருளினபடியினாலே அவருக்கு எடுத்துக்கட்டியும் ஸ்தூபியும் கட்டிவைத்து, அதுக்குக் கிழக்கே சந்திரபுஷ்கரிணிக்கரையிலே தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலைப்பலகையிருக்கிறபடியினாலே அத்தைவிட்டு மதிள்கட்டுகையாலே ஆழ்வாரும் ஸந்துஷ்டராய், தம்முடைய கையில் திருத்துகிற ஆயுத$_4$த்துக்கு க்ருதஜ்ஞதையினாலே "அருள்மாரி" என்று ஆழ்வார்

திருநாமம் சாத்தினதைக் கண்டு களித்து; பூர்வம் தென் மேல்புறத்திலே நிசுளாபுரியான உறையூருக்கு ப்ரபு₄ வானவன் சோழன் ராஜ்யப₄ாரம் வஹிக்கச்செய்தே, திருக் காவேரிக் கரையிலே தாமரை ஓடையில் தாமரைப்பூவிலே ஒரு கன்னிகா ஶிஶுவைக் கண்டு எடுத்துக்கொண்டுவந்து ஸ்வஸ்த்ரீயின் கையிலே கொடுத்து "கமலவல்லி" என்று திருநாமஞ் சாத்தி, வளர்ந்தவுடனே ஸ்ரீரங்க₃ராஜர் திருக் கல்யாணம் செய்தருளி "அழகியமணவாளர்" என்கிற திருநாமம் பெற்றபின்பு, அந்த நந்த₃சோழனும் தன் குமாரத் தியான உறையூர் வல்லியாருக்கு ஸ்த்ரீத₄நமாக ப₃ஹு த்₃ரவ்யத்தைத் தங்கத்தாலே ஒருநாளையில் படித்தனமாக முந்நூற்றறுபதின்கலம் அமுதுபடி முதலான ஸாமக்₃ரி களும் ததிகளும் கொடுத்து, நாலாம்சுற்றுத் தென்மேல் மூலையிலே *கருவுகலம் கட்டிவைத்து, அதிலே வந்த பதா₃ர்த்த₂ங்களை க்ஷேமித்துவைத்து. அந்தக் கருவுகலத்துக்கு வடக்கு — வடக்குத் திருக்கொட்டாரமும், தெற்கு வடக்காகப் பெரிய திருநடைமாளிகையும் கட்டிவைக்கும் காலத்திலே; ஒருகால் பெருமாள், மஞ்சனக்குளி உத்ஸவத்துக்கெழுந் தருளக்கூடாமல், பரிஜநங்களுக்கு அருளப்பாடிட்டு, "நம் கலியனை மஞ்சனக்குளி உத்ஸவம் பண்ணிவைத்துக் கொண்டு வாருங்கோள்" என்று திருவுள்ளமாக; அந்தப் படியே நடத்தினபின்பு, அதுமுதலாக ப்ரதிஸம்வத்ஸரம் அந்த உத்ஸவம் திருமங்கைமன்னனுக்கே நடந்துவர, திருமங்கைமன்னனும், சந்த்₃ரபுஷ்கரிணிக்கரை தொடங்கி வெளியழகியானிலும் திருநடைமாளிகை கட்டிவைத்து, தளவரிசையும்பண்ணி மிதிக்கையில், திருவீதி "**ஆலிநாடன் திருவீதி**" என்று திருநாமமாய்த்து.

சோளேந்திரஸிம்ஹன் கைங்கர்யம்

அத்திருவீதியில் சந்த்ரபுஷ்கரிணிக்குக் கிழக்கு சோளேந்திரஸிம்ஹன் கைங்கர்யமான திருமண்டபம்.

---

* கருவுகலம் - சரக்கறை; நற்சரக்கையிட்டுவைக்கும் அறை; ஸ்ரீ ப₄ண்டா₃ரமென்றபடி.

கங்கைதேவர் சிங்கணன் தண்டநாயக்கர் கைங்கர்யம்

ஆரோக்₃யசாலையும், திருநடைமாளிகையும், ப்ரதாப சர்க்ரவர்த்தி கார்யப்பேரில் கங்கைதேவர் சிங்கணன் தண்டநாயக்கர் கைங்கரியம்.

விக்ரமசோழனுன அகளங்கன் கைங்கர்யம்

அத்தைச் சூழ்ந்த **அஞ்சாம் திருச்சுற்றுத்திருமதிளும்,** அதில் நாலுகோபுரமும், திருவாசலும், வடகிழக்கிலே கே₃ாஶாலையும், அதில் குழகர் ஸந்நிதி₄யும், தத்ப்ரதிஷ்ட்டை₂யும், தென்மேற்கிலே விமாநத்துடன் கோவிலும், அதிலே சக்கரவர்த்தித் திருமகன் ப்ரதிஷ்ட்டை₂யும், வடமேற்கில் நாச்சியார்கோவிலும், ஆலிநாடன் திருவீதியில் பெரிய திருமண்டபத்தில் பெரியதிருவடியும், அத்திருமண்டபத்தில் அடிப்பாரமும், குறடும் கட்டுவித்தது, விக்ரம சோழனுன **அகளங்கன்** கைங்கர்யம்.

சுந்தரபாண்டியதேவர் கைங்கர்யம்

சுந்த₃ரபாண்டியதேவர், சேரன் சோழன் வல்லான் தேவன் முதலானுரை ஜயித்து "எம்மண்டலங் கொண்ட பெருமாள்" என்று விருது செலுத்தி, அந்த த்₃ரவ்யங்களாலே **ராஜமஹேந்த்ரன் திருவீதி** முதலாக இந்நாலு வீதியும் இருபத்துநாலு துலாபுருஷமண்டபங்கட்டி துலாப₄ாரந் தூக்கி, திருமுகத்துறையிலே ஒருநிறையாக இரண்டு ஓடங் கட்டி, அதில் ஒரு ஓடத்திலே தச்சுமுழத்திலே ஏழுமுழமிருக்கிற பட்டத்தானையின் மேலே தானும் தன்னுடைய ஆயுத₄ங்களுடனேயிருந்து, ஒரு ஓடத்திலே அந்த மட்டத்துக்குச் சரியாக ஸ்வர்ணம் முத்து முதலான நவரத்நங்களும் ஏற்றி, ஆனை துலாபுருஷந்தூக்கி, இது நீங்கலாக வேறே த₄னங்கள் அழைப்பித்து, கல்போக்தப்ரகாரம் த₃ானத₄ர்மங்களும் பண்ணிவைத்து, அந்த த்₃ரவ்யத்தை கைங்கர்யம்பண்ண உத்₃யோகி₃க்குமளவில்; அந்த த்₃ரவ்யம், ஸபரிகரரான ஸ்வாமிக்குத் திருவுள்ளமாகாத

படியினாலே இரண்டு வருஷம் மறிபட்டுக் கிடந்தது; அநந்தரம், அவனுடைய ஆர்த்தியாலேயும் அனுஸரணத்தினாலேயும் ஸபரிகரரான பெருமாள் திருவுள்ளமான வநந்தரம் அந்த த்₃ரவ்யத்தைக் கருவுகலத்திலே முதலிட்டுப்பண்ணின கைங்கர்யத்துக்கு விவரம்:—

திருவணுக்கன் திருவாசல் திருமதிளுக்கு மேலே சூழச் சூழ்ச்சியாக எடுத்துக் கட்டுவித்து, திருவணுக்கன் திருவாசலுக்கும் த₄ர்மவர்மாவின் கைங்கர்யமான அழகிய மணவாளன் திருமண்டபத்துக்கும் நடுவிலே ஒரு பத்தி வெளியாய் திருவணுக்கன் திருவாசலிலே சுருளும் படியும் கட்டியிருக்கையில், அந்த வெளியை அந்தத் திருமண்டபத்துடனே சேர்த்துப் பாவுகல்லும் போட்டு வெளியையடைத்து, நடுவில் பள்ளமும் துறப்பித்து, தளவரிசையும் கட்டுவித்து, மேல்புறமும் கீழ்ப்புறமும் சுருளும் படியும் கட்டுவித்து, அந்தத் திருமண்டபத்துக்குத் தெற்கு பெரிய திருவடி ஸங்நிதி₄க்குக் கிழக்கும் மேற்கும் கல்லறைகளைக் கட்டுவித்து, மேல்புறம் வெளியையடைப்பித்து, சேனை முதலியார் திருச்சுற்றான ராஜமஹேந்த்ரன் திருவீதியில் தெற்குத் திருவாசல் முதலாக, சுற்றுத்திருநடை மாளிகைகளும், துலாபுருஷமண்டபங்களும், திருப்பூமண்டபமும், யாக₃சாலையும், வடக்குத் திருவாசலுக்குக் கிழக்கு முதலாகத் திருநடைமாளிகைகளும், துலாபுருஷமண்டபங்களும், அழகிய மணவாளன் திருமண்டபத்துக்கு நேர்கிழக்காக திருவீதிக்குக் கீழ்புறத்திலே கொறட்டின்மேலே திருக்காவணப்பத்தித் திருமண்டபமும், சுந்தரபாண்டியதேவர் காரியப்பேரில், பாண்டிமண்டலத்தில் பல்லவன் விழுப்பரையன் கரியமாணிக்கத்தின் கைங்கர்யம்.

எம்மண்டலங்கொண்டு கோயில் பொன்மேய்ந்த பெருமாள் சுந்தரபாண்டியதேவர் கைங்கர்யம்

இம்மூன்றும் திருச்சுற்றான குலசேகரன் திருவீதியில் ஆர்யப₄ட்டாள் காவலான தெற்குத் திருவாசலுக்கு மேற்கு,

சேனையென்றான் திருமண்டபத்துக்கு மேற்குத் துலாபுருஷ மண்டபமும், அந்தத் திருவாசலுக்குக் கிழக்குத் துலா புருஷமண்டபமும், வடக்கு திருவாசலுக்குக் கிழக்குத் துலா புருஷமண்டபமும், முன் கம்பர் தண்டயநாயக்காதி$_4$காரியாய் ஆயிரக்கால் மண்டபம் கட்டிவைத்த பெருமாள்தேவன் கைங்கர்யமான சுற்றுச்சூழ்ந்த திருக்காவணமுள்பட பெரு மாள் தேவன் திருமண்டபத்தை அறைகுறையும் தீர்த்துக் கொண்டு, திருநாளும் சுந்தரபாண்டியன் கட்டளையாக நடந்தது. இதுவும், இத்திருச்சுற்றில் தளவரிசையும், திருநடைமாளிகை திருமண்டபமும், நாலாந்திருச்சுற்றான வெளியழகியானில் திருநடைமாளிகையில் துலாபுருஷ மண்டபங்களும் கட்டிவைத்து, தன்னை விக்$_3$ரஹமாகப் பண்ணுவிக்கிறதுக்கு பெருமாள் பரிகரங்கள் சம்மதியாத படியினாலே தன்பேரிலே 'பொன்மேய்ந்த பெருமாள்' என்று ப$_4$க$_3$வத்$_3$விக்$_3$ரஹமும், அழகியமணவாளன் திருமண்டபத் தில் பெரியதிருவடிநயினாரையும், நீளாம்சையான சேர குலவல்லியாரையும் தங்கத்தாலே ஏறியருளப்பண்ணி வைத்து. சந்தனமண்டபத்தில் பெரியதிருவடி ஸந்நிதி$_4$க்கு அடுத்தாப்போலே கீழ்ப்புறத்தில் கல்லறையில் பொன் மேய்ந்த பெருமாளையும், திருப்பூமண்டபத்தில் தென்புறத் தறையிலே சேரகுலவல்லியாரையும் ப்ரதிஷ்ட்டி$_2$ப்பித்து, பெரியபெருமாளுக்கும் அழகிய மணவாளப்பெருமாளுக்கும் ரத்நதிருவபி$_4$ஷேகங்களும், ரத்நாங்கி$_3$களும், திருவனந்தாழ் வானுக்கு ரத்நாங்கி$_3$யும், பெரியபெருமாளுக்கு மாணிக்கத் திருவபி$_4$ஷேகமும், வயிரத்திருவபி$_4$ஷேகமும், ரத்ந அங்கி$_3$, ரத்நதிருப்பாகையும், மாணிக்கமாலை, கமலப்ரமாணம் கண்ட$_2$மாலை, ஸ்வர்ணச் செண்பகமாலை, ரத்நக்கழுநீர்மாலை களும், பலவகைத் திருவாப$_4$ரணங்களும், பொன்னாலே உத்தரீயமும், கோவிலாழ்வாரும், விமானமும், பொன்னின் மேலே முத்துக்கட்டின ரத்நப்ரபை$_4$ ஸிம்ஹாஸநமும், திருமுத்தின் பந்தலும், செம்பொன் திருவாசலும், அமுது மண்டபமும், திருவண்ணாழி திருமதிள்கள் முதலானவை

களும், பொன் தகடுபோட்ட திருவணுக்கன் திருவாசலும், கல்தோரணமும், ரத்நத்தாலே பண்ணுவித்து; அழகிய மணவாளன் திருமண்டபமும், பெரியதிருவடி விமாநமும், திருக்கோபுரநயினார் விமானமும், ராஜமகேந்திரன் திருவீதியும், மதிள் கொடுங்கை தூண் முதலானவைகளும், பொன் தகடு போடுவித்து, குலசேகரன் திருவீதியும் அந்தந்தப் படியே பொன்செய்வித்து, அணியரங்கன் திருமுற்றத்திலே கொடிக்கம்பம் பொன்னாலே நாட்டுவித்து, இதுவும் தங்கக்கொப்பரைகளும், தங்கத்தளிகைகளும், வட்டில் வேதிகை திருக்குத்துப் பணிவிளக்கு திருமஞ்சனத்தாழி திருமஞ்சனக்கொடிகளும் பண்ணுவித்து, மேற்படியார் திருநாளான சித்திரைத் திருநாளுக்குத் திருக்காவேரியிலே பெரியதாக ஊறணி வெட்டுவித்து, அதுக்குத் திருக்காவேரி நீர் பாய்ச்சி, முத்தும் பவளமும் கட்டின திருக்காவணமும் கட்டுவித்து, ஊறணியிலே திருப்பள்ள ஓடம் பொன்னாலேபண்ணி நிறுத்தி, அதிலே நாய்ச்சிமார்களுடனே பெருமாளெழுந்தருளிச் சிறப்புக் கட்டளையும் பண்ணி, ஒருநாள் படித்தனமாக முந்நூற்று அறுபதின்கல அமுதுபடியும், பொன்னாலே கொம்பஞ்சு கொடியஞ்சு கறியமுது வகைகளும், அதுக்குத்தக்கதாகப் பண்ணுவித்து, வடக்குமாடத் திருவீதியில் திருத்தேர் திருநாள் மேற்படியார் கைங்கர்யமாக நடக்கையாலே அந்தத் திருத்தேரிலே ஸிம்ஹாஸநத்தளவாக முகபத்ரத்துக்குப் பொன் தகடும், பொன்னாலே பெரியதிருவடி குதிரைநம்பிரான் ஆனைநம்பிரான் இருந்த பீடமும் சேனைவென்றான் திருச்சுற்றிலே எழுந்தருளும்படி செம்பொன் திருத்தேரும் கட்டுவித்தது. ஆக, நடைப்பொன் பதினெட்டு லக்ஷமும், கோயில் பொன் மேய்ந்தது பதினெட்டு லக்ஷமும், எம்மண்டலங்கொண்டு கோயில் பொன்மேய்ந்த பெருமாள் சுந்தரபாண்டியதேவர் கைங்கர்யம்.

குலோத்துங்கசோழன் கைங்கர்யம்

பெருமாள்தேவன் மண்டபத்துக்குக் கிழக்கு நாலு காலிலே ராமலக்ஷ்மண ஸுக்₃ரீவ ஹநுமாருடன்கூடின நாலுகால் மண்டபமும், குலோத்துங்கசோழன் கைங்கர்யம்.

கம்பயதண்டயநாயக்கர் கைங்கர்யம்

ஆலிநாடன் திருவீதி மேல்வடக்குமூலை பரவாசுதேவர் ஸந்நிதி₄யும், அகளங்கன் திருவீதியில் மேல்புறத்து ஸுத₃ர்ஶநப் பெருமாள் கோவிலும், நாய்ச்சியார் ஸந்நிதி₄ மண்டபமும், இந்தத் திருச்சுற்றிலே ஆயிரக்கால் மண்டபமும், வடகிழக்கில் கோ₃ஶாலையையழித்து கௌத்தியாகக் கட்டின கொறட்டின்மேலே பத்திக்கொறடும் கட்டி, லக்ஷ்மீநாராயணப் பெருமாள் கோயிலும், இவர் ஸந்நிதிக்குத் தெற்கு நாயகப்பத்தியும், தேவராஜன் கொறட்டுப்பத்தியும், சூழையறு கணி வெளிக்கும் படிக்கு மடுத்த மதிளும், பட்டத்துயானை பூண்ட புரவியில் குறடும், குதிரை பூண்ட புரவியில் குறடும், சுருளும் படியும், மேல்கொடுங்கையும் கட்டிவைத்தது, வள்ளாளதேவன் வகையில் ப்ரதாபசக்ரவர்த்தி ராமனுக தேவனுடைய ப்ரத₄ாநி கம்பயதண்டயநாயக்கர் கைங்கர்யம்.

திருவாழியாழ்வான் கோயில்வாசல் நாலுகால் மண்டபம், கம்பயதண்டயநாயக்கர் கைங்கர்யம்.

கரியமாணிக்கத்தண்டயநாயக்கர் கைங்கர்யம்

அதுவும், இதுக்குக்கீழில் திருக்காவணப்பத்தியும், நாயகபத்தியும், கொறட்டில் சித்திரப்பணியும், தேவாஸநமும், படியும், மேலில் கொடுங்கையுட்படக் கட்டுவித்தது, கம்பயதண்டயநாயக்கர் தமையனார் கரியமாணிக்கத் தண்டயநாயக்கர் கைங்கர்யம்.

மலைப்பெருமாள் கைங்கர்யம்

எடுத்தகை அழகியநயினார் கோவிலுக்கு விவரம்:— திருமங்கையாழ்வார், ஆலிநாடன் திருவீதியில் வடக்குத்

திருக்கோபுரத்திலே எடுத்தகை அழகியநயினர் ஏறியருளப் பண்ணினவிடத்திலே அவர் ஸாங்நித்₄யம் செய்தருளின படியினலே, மலையாள ராசாவான சேரன், எடுத்துக் கட்டியும் விமாநமும் கட்டுவித்தார்; அநந்தரம், முன்னடிப் பாரமுள்ளது, மலைப்பெருமாள் கைங்கர்யம்.

வீரநரசிங்கதேவர் கைங்கர்யம்

இதில், திருமண்டபமும், மேலெடுத்துக்கட்டியும், மதிளும், கன்னடியராசா வீரநரசிங்கதேவர் கைங்கர்யம்.

ஆகுளூர் வரநாதராயர் கைங்கர்யம்

இந்தக் கோயில் முகப்புக்கொறடு திருமண்டபமும், சுருளும் படியும், ஆளூர் வரநாதராயர் கைங்கர்யம். இந்தக் கோயில் திருமடைப்பள்ளியும், அவர் கைங்கர்யம்.

தேவப்பெருமாள் கைங்கர்யம்

இதுக்கு வடக்கு அகளங்கன்வாசல் நிலைகாலும், வடபுறத்தில் திருமதிளும் பழகிச்சரிந்துபோகையில், நிலைகாலும் நிறுத்தித் திருமதிளும் கட்டிவைத்தது—ஆகுளூர் வரநாதராயர் குமாரர் தேவப்பெருமாள் கைங்கர்யம்.

வாலநாதராயர் கைங்கர்யம்

பெரிய திருமண்டபத்தில் பெரியதிருவடி கோயில் சூழ்ந்த பரமன்மண்டபம், ஆகுளூர் வரநாதராயர் ராஜ்யம் பண்ணின காலத்தில் தச்சன் பரமனைக்கொண்டு நாலு புறத்திலும் நாலாணி நாலோட்டுக்காலும், எட்டு கும்ப சரக்காலுட்பட்டது நேர்த்தியாகப் பண்ணுவித்து, பெரிய திருவடி மண்டபமும் கட்டுவித்து, **பரமன் மண்டபம்** என்று பேரிடுவித்தது, வாலநாதராயர் கைங்கர்யம்.

திருவிக்கிரமசோழன் கைங்கர்யம்

இந்த அகளங்கன்திருமதிளைச் சூழ்ந்த திங்களும் விழாவருத திருவீதியைச்சூழ்ந்த திருமதிளும், நாலு திருக்

கோபுரங்களும் திருவிக்கிரமசோழன் கைங்கர்யமாகையாலே, இத்திருவீதிக்கு **திருவிக்கிரமன் திருவீதி** என்று திருநாமமாய்த்து.

பள்ளிகொண்டசோழன் கைங்கர்யம்

இதில் கீழ்மாடத்திருவீதியிலே பாடுவார் திருமாளிகை வாசலிலேயிருந்து பெருமாள் ஆயிரக்கால் திருமண்டபத்தின் மேலே கொடை கண்டருளும்போது, இசை சேவிப்பார்கள். தெற்குமாடத் திருவீதியிலே கீழ்க்கண்டத்திலே பல்லவராயன் மடமும், வடக்குமாடத் திருவீதியிலே மேல்கண்டத்திலே இலங்கேசுவரன் மடமும், திருத்தேர் கீழ்க்கண்டத்திலே சேரன்மடமும், அதுக்குக் கிழக்கே மண்டபமும், மடமும், அவர்கள் ததீ$_3$யாராத$_4$நமும் நடந்தது. அத்தைச் சூழ்ந்த **மாடமாளிகைசூழ் திருவீதி** திருமதிள் நாலு திருக்கோபுரவாசலும், பள்ளிகொண்டசோழன் கைங்கர்யம்.

கலியுகராமன் கைங்கர்யம்

அந்தத் திருவீதியில் வடவண்டை மேல்கண்டத்திலே, திருமங்கையாழ்வார் மடமும் கட்டிவைத்தார்; மற்றும் அநேக மடங்களுமுண்டு. ஆக, திருவீதிகளெழுந்தது வரையிலே அவரவர் பண்ணின ஜீர்ணோத்தாரணத்தினாலே அவரவர் பேர் வழியிலே வ்யவஹாரம் நடந்துசெல்லுகிறது; அத்தைச் சூழ்ந்த திருவீதி கலியுகராமன் கைங்கர்யம்.

திருக்குறளப்பன் ஸந்நிதி

சுற்றுக்கோவில்களில் திருக்குறளப்பன்கேயில், அநாதியாய், தென் திருக்காவேரிக்கு வடகரையாய், ஸந்த்$_4$யா மட$_2$மாயிருந்தது. கல்யப்$_3$த$_3$ம் நானூற்று நாற்பத்தஞ்சுக்கு மேல், மது$_4$ரகவியாழ்வார் நம்மாழ்வாரைத் திருநகரியிலும் பெருமாள் நியமநத்தினாலே எழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டுவர, பெருமாளும் நம்மாழ்வாருக்கு ஸந்த்$_4$யா மட$_2$த்தை விடுதியாக ஸாதித்தருளினபடியினாலே, அது

முதலாக, திருக்குறளப்பன் ஸந்நிதி$_4$யிலே நம்மாழ்வார் எழுந்தருளியிருக்கிறார். திருக்குறளப்பன் புராண ஸித்$_3$த$_4$ம்.

வல்லபதேவன் கைங்கர்யம்

கல்யப்$_3$த$_3$ம் நூற்றஞ்சுக்குமேல், ஸ்ரீவில்லிபுத்தூரிலே அழகியமணவாளன் ரங்கமன்னாராக எழுந்தருளி, சூடிக்கொடுத்த கோதையைத் திருமணம் புணர்ந்து, நாய்ச்சியாருடன் கோவிலுக்கெழுந்தருளும்போது, பெரியாழ்வார் சிஷ்யனான வல்லபதேவன் கோதைக்கு ஸ்த்ரீத$_4$நம் அநேகமாகக் கொடுத்து, திருப்பல்லக்கிலே சூடிக்கொடுத்தவளையும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, தென் திருக்காவேரி வடகரையிலேயிறங்கி நீராட்டம் முதலான அலங்காராதி$_3$களைப் பண்ணிக்கொண்டு, அனைவரும் எதிர்கொள்ளத் திருப்பல்லக்குடனே கோயிலிலே புகுந்து அத்$_3$ருஶ்யையானபடியினாலே, அந்தத் திருத்தோப்பிலே சூடிக்கொடுத்த நாய்ச்சியார் கோயில்கட்டி ப்ரதிஷ்டி$_2$ப்பித்தது வல்லப$_4$தேவன் கைங்கர்யம். * (இது வெளி ஆண்டாள் ஸந்நிதி$_4$ என்று வழங்கிவருகிறது.)

திருமங்கைமன்னன் கைங்கர்யம்

கல்யப்$_3$த$_3$ம் நானூற்றெண்பதுக்குமேல் திருமங்கையாழ்வார் த$_3$ஶாவதாரக் கோயிலைக்கட்டி ப்ரதிஷ்டி$_2$ப்பித்து, தம்மையும் விக்$_3$ரஹமாக மூலோத்ஸவ விக்$_3$ரஹங்களை ஏறியருளப்பண்ணி ப்ரதிஷ்டி$_2$ப்பித்து, அதற்கு வடபுறமாக$_3$த் தாம் வாள்கடைதூரம் நிலங்கொண்டு, ஸ்ரீப$_4$ண்டா$_3$ரத்திலே த்$_3$ரவ்யத்தை முதலிட்டு, **பாடியவாளன்துறை** என்று அதுக்குத் திருநாமம்சாற்றி, அவ்விடத்திலே ஸம்ஸ்க்ருதரான பேருக்கு பரமபத$_3$முண்டாகத்தக்கதாக அந்த ப்ரதே$_3$ஶத்துக்கு ஸ்ப்ருஷ்டியில்லாதபடி பெருமாள் ஸந்நிதி$_4$யிலே வரம்பெற்றபடியினாலே, இவைகள் திருமங்கைமன்னன் கைங்கர்யம். * (இதற்குப் பெயர் திருமங்கைமன்னன் படித்துறை.)

---

* அடைப்பினுள் உள்ளவை சில பிரதிகளிலேயே உள்ளன.

காட்டழகியசிங்கர்

கிழக்கில் காட்டழகியசிங்கர் புராணஸித்₃த₄ம்.

சோழன் பிரதிஷ்டை₂

தெய்வப்புள்ளேறி வருவாரும், பலமண்டபப்பெருமாளும், மேல்புறம் அழகிய சிங்கரும், ஆதிகேசவப்பெருமாளும், சோளாதி₄பதி ப்ரதிஷ்டை₂; பன்றியாழ்வானும் சோழன் ப்ரதிஷ்டை₂.

டில்லீசுவரன் அழகியமணவாளனைக் கொண்டுபோனது

இப்படி திருவரங்கப் பெருநகரிலே பெருமாள் பரிஜனங்களுடன் வாழ்ந்திருக்கிற காலத்திலே, டில்லீசுவரனை துலுக்கன் ப்ரதாபருத்₃ரனை ஜயித்து தொண்டைமண்டலம் சோழமண்டலம், முதலான ப்ரதே₃ஶங்களிலே பரவி முற்றிலும் வ்யாபித்து, திவ்யதேசங்களில் பெருமாள்களையும் எடுத்துக்கொண்டு போமளவில்; திருவரங்கந் திருப்பதியிலேயும் வந்துபுகுந்து, கோயிலிலே ப்ரவேஶித்து, வடக்குவாசலிலே புகுந்து, ஆரியபட்டாள் காவலான வடக்குவாசலிலே புகுரவர; அவ்விடத்திலே **பஞ்சுகொண்டான்** என்கிறவரிருந்து படைபண்ணி அவர்களை நிறுத்த, ப₃ஹுஜனங்களாகையாலே பத்துபேர்விழுந்து பஞ்சுகொண்டானை சரிப்பிடித்து உள்ளே புகுந்து கருவுகலம் முதலானவைகளையும் கொள்ளையிட்டு, அழகியமணவாளப்பெருமாள், சேரகுலவல்லியார் முதலான விக்₃ரஹங்களையும் எடுத்துக்கொண்டு, ஸர்வஸ்வத்தையும் கொண்டுபோகையில்; கரம்பனூரிலே ஒரு அம்மையார் "நித்யமாக அழகிய மணவாளப் பெருமாளை ஸேவியாமல் சாப்பிடுகிறதில்லை" என்று வ்ரதத்தை உடையவளாயிருக்கிறவள், பெருமாளெழுந்தருளினவுடனே உபவாஸத்துடனே, ஸம்ஸாரத்தை விட்டு டில்லீசுவரன் பாளையத்திலே ப்ரவேஶித்து தே₃ஹ த₄ாரணம் ப₂லாஹாரமாகப் பண்ணிக்கொண்டு அந்தத் துலுக்கனுடனேகூடப் புறப்பட்டு, திருநாராயணபுரத்திலே

ராமப்ரியரையும் கொண்டுபோகிறதைக்கண்டு, டில்லியி லேயும் போய் வேஷத₄ாரியாய் துலுக்கன் வீட்டிலே புகுந்து, பெண்டுகளையும் மருவி, இந்தத் துலுக்கனரண் மனையிலே உக்₃ராணத்திலே வைக்க; அதிலே அழகிய மணவாளப்பெருமாளை அந்த டில்லீசுவரன் குமாரத்தி கண்டு, தனக்கு விளையாட வேண்டுமென்று எடுத்துக் கொண்டு, தன்னுடைய ஶயநக்₃ருஹத்திலே வைத்துக் கொண்டிருக்கையில், அழகியமணவாளப்பெருமாள் திரு மேனிக்கு ஸ(ப₃?)ாத₄கமில்லையென்று அந்த அம்மையார் நிஶ்சயித்து,இந்தச் சேதியை ஸ்த₂லத்திலே அறிவிக்கவேணு மென்று, திருவரங்கந் திருப்பதியேறவந்து அச்சேதியை விண்ணப்பஞ்செய்ய; பெரியபெருமாளும், ஸபாகரராய்க் கொண்டு மிகவும் உகந்தருளி, அந்த அம்மையாருக்குப் **பின்சென்றவல்லி** என்று திருநாமம்சாற்றி ஸகலவரிசை களும் ப்ரஸாதி₃க்க;

ஸ்த₂லத்தார் அழகியமணவாளனை எழுந்தருளப்பண்ணிக் கொண்டுவந்தது

அநந்தரம், ஸ்த₂லத்தாரனைவரும் அந்த வ்ருத்தாந்தத் தைக் கேட்டு நன்றாக ஆலோசனைபண்ணி, ஸ்ரீரங்கநாய்ச்சி யாரை வில்வமூலத்தடியிலே எழுந்தருளப்பண்ணி, பெரிய கோயில் திருவணுக்கன் திருவாசலைக் கல்திரைபரிமாறி, கோயிலைப் பாழ்போட்டு, பரிஜநங்களனைவரும் அறுபது திருநாமம் பின்தொடர்ந்தவல்லியை முன்னிட்டுக்கொண்டு டில்லியிலே போக; பின்தொடர்ந்தவல்லியும் முன்புபோலே வேஷத்தை த₄ரித்து வேஷத₄ாரியாய் அரண்மனையிலே புகுந்து, பெண்டுகளை அநுவர்த்தித்து, அழகியமணவாளப் பெருமாள் அந்தத் துலுக்கன் குமாரத்தி **ஸுரதாணியுடனே** பகல் அர்ச்சாவிக்₃ரஹமாயும் ராத்ரி விப₄வாவதாரமாயும் ஸகலஸம்ப்₄ரமத்துடனே விஹரித்துக்கொண்டிருக்கிறபடி யைக் கண்டு, பரிஜநங்களுக்குச் சொல்ல; அவர்களும், பாடுவாரரை முன்னிட்டுக்கொண்டு, டில்லீசுவரனைக் கண்டு

ஜக்கிந்திநாட்யத்திலே அந்த ப்ரபு₄வை நன்றாக வஶீக ரித்து, டில்லிபதியும் ஸந்தோஷப்பட்டு ப₃ஹூத்₃ரவ்யங்களைக் கொடுக்க; பாடுவாரும், அத்தை வாங்காமல் "நம்முடைய அழகிய மணவாளப் பெருமாளைத் தரவேண்டும்" என்று கேட்க; டில்லீசுவரனும் தன் மனுஷ்யனைக்கூட்டி, "உக்ரா ணத்திலே இவருக்கு வேண்டின விக்₂ரஹத்தை எடுத்துக் கொள்ளட்டும்" என்று உத்தரவுமிட; இவர்களும் உக்ரா ணத்திலே சோதிக்குமளவில், அங்கே அழகியமணவாளப் பெருமாளைக் காணாமையாலே கேவலம் விஷண்ணராய், அந்த அம்மையாரைக் கேட்டுக்கொண்டு, டில்லீசுவர னுடனே, "உங்களுடைய குமாரத்தி எங்கள் பெருமாளை வைத்துக்கொண்டிருக்கிறாள்" என்று சொல்லுமிடத்தில்; அவனும் "உங்கள் தெய்வத்தை நீங்களே அழைப்பித்துக் கொள்ளுங்கோள்" என்று சொல்ல; பாடுவானும், தே₃வ கா₃நத்திலே அழகியமணவாளப் பெருமாளை நன்றாக ஏத்தி ஆகர்ஷிக்க; பே₄ாக₃சிந்ஹங்களுடனே அந்தப் பெண்ணைத் தூங்கப்பண்ணி தாமெழுந்தருளக்கண்டு, பாடு வாரும் ஸூல்தானுடனே சொல்ல; அவனும் ஆச்சர்யப் பட்டு, "உங்கள் தெய்வத்தைக் கொண்டுபோங்கோள்" என்று உத்தரங்கொடுக்க; அப்பொழுதே பரிஜநங்களனை வரும் பெருமாளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு அதி ஶீக்₄ரமாக அந்த ராத்திரியிலே எண்காதவழி ஓடி வந்தார்கள்.

ஸூரதாணி பெருமாளைத் தேடிக்காணாமல் சரீரம்விட்டது

மற்றைநாள் விடிவோறே டில்லீசுவரன் பெண் எழுந் திருந்து, பக்கத்திலே பெருமாளைக் காணாமல் திடுக்கென்று விஸநாக்ராந்தையாய் அந்த:புரமெல்லாம் தேடிக் காணாமல், உக்ராணம் முதலான வெளிகளிலும் காணாமல், விரஹத் திலே து₃:க்கி₂தையாய், ப்ராணஸம்ஶயம் வந்தவளவிலே; தத்பிதாவான டில்லீசுவரன் இந்தச் சேதியறிந்து, தன் பட்டணத்திலே அந்தப் பரிஜநங்களை விசாரிக்குமளவில்;

அவர்கள் முதல்நாள் ராத்திரியே புறப்பட்டுப்போனார்கள் என்கிற சேதியும் கேட்டு, "அவர்கள் கொண்டுபோகிற விக்3ரஹத்தை அழைப்பிக்கிற பர்யந்தம் பெண் த4ரிக்க மாட்டாள்" என்று அறிந்து, பெண்ணைத்தானே பயணமாக ஸேனைகளையும் கூடக்கூட்டி, வழியிலே கண்டவிடத்திலே விக்3ரஹத்தைக் கொண்டுவரச் சொல்லியனுப்ப; இவர்கள் புறப்பட்ட மூன்றும்நாள் ஸேனையுடன் டில்லீசுவரன் புத்ரியான ஸுரதாணியும் புறப்பட்டு, பெருமாளைக் காணுமாசையாலே ப்ராணன் த4ரித்து, பயணகூ3தியிலே திருவேங்கடத்தின் ஸமீபத்திலே சந்த்3ரகி3ரிபர்யந்தம் வர; பெருமாள் பரிஜநங்களும் அவர்கள் கிட்டின சேதியைக் கேட்டு, "இனி மோசம் வந்தது, நாம் கூடிப்போனோமாகில் அவர்கள் பெருமாளைக் கொண்டுபோவார்கள்; ஆனபடியினாலே அவரவர்கள் தனித்து யதே2ச்ச2மாகப் போவோம்" என்று நினைத்து, கொடவர் மூன்று திருநாமம்—மைத்துனனும், மாப்பிள்ளையும், மருமகனுமாக மூன்றுபேரும் பெருமாளை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு திருமலையிலே ஏறினார்கள்; மற்ற அன்பத்தேழு பேரும் தனித்து யதே2ச்ச2மாகப் போனார்கள். அந்தத் துலுக்கரும் வழியிலே இவர்களைக் காணமல், பயணகூ3தியிலே திருவரங்கந் திருப்பதியேறச் சென்று, அங்கே பெருமாள் எழுந்தருளாத சேதியையும் கேட்டு, கோயில் திருவாசல் கல்திரையிட்டிருக்கிறபடியும் கண்டவுடனே, டில்லீசுவரன் புத்ரியான ஸுரதாணி, சிந்தயந்தியைப்போல விரஹாதிஶயத்தாலே ஶரீரத்தை விட்டாள்.

கொடவர் அழகியமணவாளனைக் காத்தது

அதன்பின்பு, வந்த ஸேனை திருமலைபர்யந்தம் போமளவில், அங்கே, பெருமாள் திருமலையேறி எழுந்தருளின சேதிகேட்டு, அந்தத் துலுக்கர் அடிவாரத்திலே யிருந்து கொண்டு ஆளைவிட்டுத் திருமலையெல்லாம் தேடுவிக்குமளவில், பெருமாளுக்கு அந்த தே3ஶத்திலே ரஹஸ்யமாயும்

இருக்கப் போகாமலிருக்கையில், கொடவர் ஆலோசனை பண்ணி, மைத்துனனையும் குமாரனையும் உயரவைத்து, தாம் பெருமாள் திருமேனியை அணைத்துக்கொண்டு * ஓஷதி₄ப₃ந்த₄ம் பண்ணிவைத்து, திருமலையில் தலையான † ப₂ணாக்ருதியாயிருக்கிற சரிவிலே, பெரிய கொடியைக் கட்டி மைத்துனனும் குமாரரும் உயரவிருந்து விட, கொடவர் திருமேனி தீய்ந்து பெருமாள் அதின் கீழே எழுந்தருளியிருக்க, அந்தக் கொடவரான அம்மானும் மருமகனும் கொடிகளைப் பிடித்துக்கொண்டு அந்தச்சரிவிலே யிறங்கிப் பெருமாளை ஸேவித்து, அவர் திருமேனியையும் ஸம்ஸ்கரித்து, அஜ்ஞாதமாக அலர்மேல்மங்கை புரத்துக்கு வடக்குச்சரிவிலே ப₃ஹூகாலமிருக்க; அம்மானும் பரமபத₃த்துக்குப்போய், மருமகன்மாத்திரம் அநேககாலம் கந்த₃மூலாஶநராய், பெருமாளுடன்கூட அஜ்ஞாதமாக இருந்தார்.

டில்லீசுவரன் ஆச்சரியப்பட்டது

அந்தத் துலுக்கன்சேனையும் பெருமாளைத் தேடிக்காணாமல் டில்லிக்குப் போய், டில்லீசுவரனுடனே நடந்த சேதியைச்சொல்ல; டில்லீசுவரனும் ஶோகஹர்ஷாஶ்சர்யங்களுடனே யிருந்தான். பரிஜநங்களும், க்ரமேண திருவரங்கத்திலே வந்து சேர்ந்தது.

திருவரங்கமாளிகையாரையும் வேறே நாய்ச்சியாரையும் கோயிலில் ப்ரதிஷ்டி₂ப்பித்தது

தத்₃தே₃ஶாதி₄பதியான சோழனநுமதியாலே கோயிலைத் திருக்காப்பையும் நீக்கி, அழகியமணவாளப்பெருமாளை நாநாதே₃ஶத்திலேயும் நாநாப்ரகாரத்தாலும் தேடுமளவில், பெருமாளையும் கொடவரையும் காணாமல், தத₃ாக₃மந நிர்க்க₃மாதி₃களும் காணாமையாலே, தன்னுடைச் சோதிக்

* ஓஷதி₄-பச்சிலை மூலிகை.

† ப₂ணாக்ருதியாயிருக்கிற-பாம்பின் படம்போன்ற.

கெழுந்தருளினதாகத் திருவரங்கமாளிகையாரை தத்ஸ்தா2நத்திலே ப்ரதிஷ்டி2ப்பித்து, பி3ல்வமூலத்திலே எழுந்தருளப் பண்ணியிருந்த ஸ்ரீரங்கநாய்ச்சியாரையும் ப்ரதிஷ்டி2ப்பதாக பி3ல்வமூலத்தை சோதிக்குமளவில், நாய்ச்சியார் அத்3ருஶ்யராய், காணப்படாமையாலே, வேறே நாய்ச்சியாரை ஏறியருளப்பண்ணுவித்து ப்ரதிஷ்டி2ப்பித்து, பூர்வப்ரகாரம் போல ஸகல உத்ஸவங்களும் பெருமாளுக்கு நடப்பித்துக் கொண்டு போந்தார்கள்.

அழகியமணவாளனையும் கொடவரையும் இருளர் கண்டது

இந்தப்படி அழகியமணவாளப்பெருமாள் கோயிலும் புறப்பட்டருளி, டில்லீசுவரன் வீட்டிலே இரண்டு வருஷம் இருந்து, குறைநாள் காட்டிலேயுமாக அறுபது வருஷத்துக்கு ஆறுமாசம் குறைவாயிருக்கிற காலத்திலே, இரண்டு இருளர், திருமலையடிவாரத்துச் சுனையில் ஒரு தி3வ்ய மங்க3ள விக்3ரஹத்தையும், ததா3ராத4கராய் தலையும் வளர்த்துக் கொண்டு ஒரு கொடியை அரையிலே கட்டிக்கொண்டு கமுகம் பட்டையாலே கௌபீநமும், தேக்குமடலாலே ஆச்சா2த3நமும் த4ரித்துக்கொண்டு கொத்தான்கொடியை யஜ்ஞோபவீதமாக த4ரித்துக்கொண்டு எண்பது வயஸ்ஸு வ்ருத்3த4ராக ஒரு ப்3ராஹ்மணரும் இருக்கக்கண்டு; அந்த இருளரிருவரும், அந்த வ்ருத்3த4ரண்டையிலே வந்து, பூர்வோத்தர வ்ருத்தாந்தங்களைக் கேட்க; அந்த வ்ருத்3த4ரும், திருவரங்கந் திருப்பதியிலும் பெருமாள் புறப்பட்டருளினது முதலாக அற்றைவரைக்கும் நடந்த வ்ருத்தாந்தங்களைச் சொல்லி, "நாமும் வ்ருத்3த4ரானோம்; இந்தச் சேதியை நாட்டிலே அறிவித்துப் பெருமாளைக் கோயில் சேரும்படி பண்ணவேணும்" என்று அந்த இருளரை ஶரணம் புகுர;

பெருமாளையும் கொடவரையும் சந்திரகிரிப்ரபு வெளிப்படுத்தினது

அந்த இருளரும், சந்த்$_3$ரகி$_3$ரி பட்டணத்தில்போய் அவ்விடத்தில் ப்ரபு$_4$வினுடனே இச்சேதியைச் சொல்லி, அந்த ப்ரபு$_4$வை து$_3$ஷ்ப்ரவேஶமான ப்ரதேசத்திலே கூட்டிக்கொண்டுவந்து, பெருமாளேயும் அந்த வ்ருத்$_3$த$_4$ ரையும் ஸேவிக்கப்பண்ண; அந்த ப்ரபு$_4$வும் ஆச்சர்யப் பட்டு, வ்ருத்$_3$த$_4$ரையும் பெருமாளேயும் வெளிப்படுத்தி நாட்டிலே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வர;

கொடவர் பெருமாளுடன் கோயிலில் எழுந்தருள பரிஜநங்கள் தகைந்தது

அந்த வ்ருத்$_3$த$_4$ரும், தம்முடைய பிதாமாதுலருக்கு மந்த்ரஸம்ஸ்காராதி$_3$ கர்மங்களேப் பண்ணி நிறைவேற்றி, அந்த ப்ரபு$_4$ ஸமர்ப்பித்த த$_4$நங்களேயும் / பெற்றுக்கொண்டு பெருமாளுடன் சந்திரகி$_3$ரியிலே எழுந்தருளி யிருந்தார்.

கோபண உடையார், அழகியமணவாளனே சிங்கபுரத்தில் ஆதரித்து எழுந்தருளப்பண்ணினது

இந்தப்படி அங்கே எழுந்தருளியிருக்குங் காலத்திலே; துலுக்கன் பாண்டியமண்டலபர்யந்தம் வ்யாபித்திருக்க; வித்$_3$யாரண்யனாலே ஆனேக்கொந்திப்பட்டணம் ப்ரப$_3$லமாய், அங்கே ராய ஸம்ஸ்த$_2$ாநமுண்டாய், ஹரிஹரராயர் ராஜ்யம் பண்ணி, தொண்டைமண்டலமளவாகக் கட்டி, அவர் காரியக்காரர் கோபணஉடையார் செஞ்சியிலேயிருந்து திருவேங்கடமுடையானே ஸேவிக்கிறதுக்குத் திருமலேக்கு வந்து, திருவேங்கடமுடையானேத் திருவடி தொழுது,

/ 1909-ம் ஆு அச்சிடப்பெற்ற பிரதியில் உள்ள பாடம் மேலே அச்சிடப் பட்டுள்ளது. 1888-ம் ஆு அச்சிடப்பெற்ற பிரதியில் "பெற்றுக்கொண்டு...... எழுந்தருளியிருந்தார்" என்பதற்கு பதிலாக "கொண்டு பெருமாளே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு" என்று உள்ளது. அதற்குப்பின் 27-ம் பக்கத்தில் "திருநாளும் கண்டருளினர்" என்னும் முதல் பாரா ஈறுக உள்ள பகுதி அப்பழைய பதிப்பில் இல்லே. "**பரிஜநங்கள் தகைந்தது**" என்னும் தலேப்புக்கு பழைய பிரதிப் பாடமே பொருந்தியுள்ளது.

அழகியமணவாளப்பெருமாள் எழுந்தருளியிருக்கிற பூர்வோத்தரத்தை விசாரித்து, அவ்விடத்தில் பெரியபெருமாள் எழுந்தருளியிருக்கிற சேதியைக் கேள்விப்பட, சந்திரகிரிப்ரபுவும் கோபணஉடையார் வந்திருக்கிற சங்கதியைத் தெரிந்து அவரை சந்திரகிரிக்கு வரும்படியாய் நியமிக்க, கோபண உடையாரும் சந்திரகிரிக்குவர, சந்திரகிரிப்ரபுவும் இவரை அழைத்துக்கொண்டுபோய்ப் பெருமாளை ஸேவிக்கச்செய்ய, சிலநாள் அவ்விடத்தில் எழுந்தருளியிருந்து, பெருமாளைக் கூட எழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டுவந்து சிங்கபுரத்திலே எழுந்தருளப்பண்ணி, அங்கே அனைத்தழகும் அத்யயன உத்ஸவமும் கண்டருளப் பண்ணிக்கொண்டிருக்க; இந்தச் சேதியை அழகியமணவாளன் காணியாளரான சிங்கப்பிரான் புத்ரன் **திருமணத்தூண்நம்பி** அறிந்து, உத்தமநம்பியை செஞ்சிக்கு அனுப்பிவைத்து, ஒரு காலவிஶேஷத்திலே இவ்விடத்தில் துலுக்கன் மயத்தை உளவாகி அனுப்பிவைக்கையில்; கோபண உடையாரும் நிரவதிகபலத்துடனே வந்து, துலுக்கரை நிஶ்ஶேஷமாக அழித்து; சிங்கபுரத்திலும் ஶகாப்தம் ஆயிரத்திருநூற்றுத்தொண்ணூற்றுமூன்றில் செல்லாநின்ற பரிதாபி-ஸு வைகாசி-மீ பதினேழாந்தேதி திருவரங்கந் திருப்பதியிலே பெருமாளை நாய்ச்சியாருடனே எழுந்தருளப்பண்ணி கோயில் திருக்காப்பைநீக்கி, பெரியபெருமாளுடன் சேர்த்து ப்ரதிஷ்டிப்பித்து, திருவாராதநமும் பண்ணுவித்து, தர்மவர்மாவின் திருமதிளில் கீழண்டை வெளிப்புறத்திலே அவருக்குத் தனியன் கொடுத்த வ்ருத்தாந்தத்தை வெளியிட்டருளினர்.

3. "ஆநீயாநீலஶ்ருங்கத்யுதிரசித ஜகத்ரஞ்ஜநாதஞ்ஜநாத்ரேஶ் செஞ்ஜ்யாமாராத்ய கஞ்சித் ஸமயமத நிஹத்யோத்

தநுஷ்காம்ஸ்துலுஷ்காந் ।

லக்ஷ்மீக்ஷ்மாப்யாமுபாப்யாம் ஸஹ நிஜநிலயே ஸ்தாபயந்

ரங்கநாதம்

ஸம்யக்வர்யாம் ஸபர்யாம் குருத நிஜயஶோதர்ப்பணோ

என்று ஶிலாலிகிதம் பண்ணுவித்தான். கோபணார்ய: ॥"

கோபணவுடையார், குண்டுஸாளுவயர், விருப்பண உடையார் கைங்கர்யம்

கோபண உடையார், ஆனி-மீ பதினேழாந்தேதி, உத்தம நம்பி கையிலே, த₄ாராபூர்வமாக, பதினேழாயிரம் பொன்னுக்குத் திருவிடையாட்டமாக, ஐம்பத்திரண்டு க்₃ராமங்கள் ஸமர்ப்பித்தார்; அவருடன் வந்த **குண்டுஸாளுவயர்** பூர்வம் அணியரங்கன் திருமுற்றத்திலே பாண்டியன் கைங்கர்யமான பொன்னின் திருக்கொடித்தட்டு துலுக்கனழிக்கையில், வெண்கலவார்ப்பாகத் திருக்கொடித் தட்டு பண்ணி நாட்டுவித்தார்; அதற்குப்பின்பு, பெரிய கிருஷ்ணராயர் உத்தம நம்பி, விஜயநகரத்துக்குப்போய் ராயரைக் கண்டு, அந்த ஹரிஹரராயர் குமாரன் உத்தரவின்படி, அணியரங்கன் திருமுற்றத்தில் திருக்கொடித்தட்டுக்குக் கிழக்கே துலாபுருஷ மண்டபமும் கட்டிவைக்க, அந்த ராயர் குமாரர் **விருப்பண உடையாரும்** வந்து, துலாபுருஷமேறி, அந்த வகைப்பொன்னும் ஹரிஹரராயர் துலாபுருஷங்கட்டி த₄ாரைவார்க்கையில், பொன்னும், குட்டிக்கோயில் விமானமும் பொன்மேய்ந்து, இந்த ராயர் காணிக்கை இரண்டு பொற்குடமும் உள்பட ஒன்பது பொற்குடமும் வைப்பித்து, பெருமாள் பு₃ஹாரனாளைக்காக எழுந்தருளினபடியினாலே நாநாதே₃ஶத்திலும் வந்த பரிஜநங்களுக்கு ஸேவிக்கும்படி, விருப்பண உடையார் பேரிலே சித்திரைத்திருநாள் த்₄வஜாரோஹணத்திருநாள் நடத்துகையில், திருமணத்தூண்நம்பி பண்ணின உபகாரம் திருவுள்ளத்திலே ஓடுகிறபடியினாலே, அழகியமணவாளன் குத்தகைப் பட்டயம் எழுதி வைத்து,வரிசையுடன் ஸாதித்து,திருநாளும் கண்டருளினார்.

திருவரங்கந் திருப்பதியிலே வந்து கோயிலிலே எழுந்தருளுமளவில்; கோயில் பரிஜநங்கள், பு₃ஹாரகாலம் அதிக்ரமித்தபடியினாலேயும், பூர்வீகரான வ்ருத்₃த₄ரெல்லாரும் மரித்துப்போய், இருக்கிறபேர் இந்தப் பெருமாளை ஸேவித்தறியாதவர்களாகையாலே,கோயிலிலே இந்தப்பெருமாளை உள்ளே எழுந்தருளவொட்டாமல் தகைந்தார்கள்.

வண்ணானாலே அழகியமணவாளனென்று தெளிந்த ராஜேந்திரசோழன் கைங்கர்யம்

வ்ருத்₃த₄ரும் ஆரியபட்டாள் வாசலுக்குள்ளே சேனை வென்றான் திருமண்டபத்தில் திருமங்கைமன்னன் திரு மண்டபத்திலே எழுந்தருளப்பண்ணிக் கொண்டிருந்தார்; அந்த வ்ருத்₃த₄ரான கொடவரிடத்திலேயும் பெருமாளிடத் திலேயும், போயிருக்கிற பரிஜனங்கள் அதிஶங்கை பண்ணிக் கொண்டிருக்க; * (முன்னர் பெருமாள் டில்லிக்கு எழுந் தருளுகிற காலத்திலே, நாய்ச்சியாரை வில்வமரத்தடியிலே எழுந்தருளப் பண்ணுவித்துப் போனார்கள். பெருமாள் எழுந்தருளின) மற்றைநாள் உத₃யகாலத்திலே நாய்ச்சியார் கோயில் வில்வமரத்தடியிலே ஸ்ரீரங்க நாய்ச்சியாருடைய கிரீடத்தில் மகுடமாத்திரம் வெளியாகக் காண்பிக்க, அதைக் கண்டவுடனே அதைச் சேர்தித்து ஸ்ரீரங்கநாய்ச்சியாரை வெளியிலே எழுந்தருளப்பண்ணி இந்த அத்₃பு₄தத்தை ப்ரபு₄வான சோழனுக்கு எழுதியனுப்பி, அதுமுதலாக அந்த வ்ருத்₃த₄ரான கொடவரிடத்திலே ஶங்கையை விட்டு, இவரை **அழகியமணவாளப்பெருமாள்** என்று ஸம்ஶயப்பட்டுக் கொண்டிருக்குமளவில்; சோழனும் கோவிலுக்குவந்து பெரு மாளையும் ஸேவித்து, இந்த வ்ருத்தாந்தங்களையும் கேட்டு, திருவரங்கந் திருப்பதியில் பூர்வீகரைத் தேடுமளவில்; கோயில் வண்ணானொருவன் தொண்ணூற்றுமூன்று வயஸ் ஸில் வர்ணகாயத₃ார்ட்₄யமும் ப்ரஜ்ஞா பாடவமுமிருக்க, வயோதிஶயத்தாலே த்₃ருஷ்டிஸௌகர்யமில்லாமல் அந்த₄ கனாய் இருக்கக்கண்டு, அவனைப் பூர்வோத்தரங்களைக் கேட்கு மளவில்; அவன் சொல்லுகிற பூர்வோத்தரமும், இந்த வ்ருத்₃த₄ரான கொடவர் சொல்லுகிற உத்தரமும் ஒத் திருந்தபடியினாலே அந்த வண்ணானை 'அப்புறம் இந்த தி₃வ்யமங்க₃ள விக்₃ரஹத்தை நிர்த்த₄ாரணம் பண்ணுகிறது

---

*( ) இவ்வடைப்பினுள் உள்ளவை பழைய பிரதியில் இல்லை.

எப்படி?' என்று கேட்க; அந்த வண்ணானும், தனக்கு த்₃ருஷ்டி தெரியாதபடியினாலே கண்டறியக் கூடாது, ஆனால், தான் பூ₄ர்வகாலமாக அழகியமணவாளப்பெருமாள் சாத்தியருளின கைலியில் ஈரவாடை தீர்த்த₂ம் ஸாப்பிட்டுக் கைங்கர்யமும் பண்ணிப் பழகியிருக்கிறபடியாலே இப்போது இந்தப் பெருமாள் திருமஞ்சன தீர்த்த₂ம் அப்படியிருக்கவில்லை, ஆனபடியினாலே, பெருமாளுக்கும், நாய்ச்சியாருக்கும் திருமஞ்சனம் பண்ணி ஈரவாடை கைலியைக்கொண்டுவந்து தனக்குத் தீர்த்த₂ம் ஸாதி₃க்கச் சொல்ல; அந்தப்படியே இருவரையும் திருமஞ்சனம் பண்ணி ஈரவாடை தீர்த்த₂ம் ஸாதி₃க்க; அந்த வண்ணானும், அழகியமணவாளப் பெருமாள் ஈரவாடை தீர்த்த₂த்தை சாப்பிட்டு, 'இவரே நம்முடைய ஆண்டவன் அழகியமணவாளப் பெருமாள்!' என்று கண்ணும் கண்ணீருமாக மோகித்திருந்து, அநேகம் போதைக்கப்புறம் மோகம் தெளிந்தது கண்டு, சோழன் முதலான பேர்கள் அவனுடைய ப₄க்திக்கு ஆச்சர்யப்பட்டிருக்குமளவில்; அன்று ராத்திரி அந்த ப்ரபு₄வான சோழன் ஸ்வப்நத்திலே இந்த வ்ருத்தாந்தங்களை அழகியமணவாளப்பெருமாள் ஸ்வப்நம் ஸாதி₃த்ததினாலே, ஸ்ரீரங்கநாய்ச்சியாரையும் அழகியமணவாளப் பெருமாளையும் பூர்வப்ரகாரமாக ப்ரதிஷ்டி₂ப்பித்து, பெருமாள் நியமநத்தினாலே, ராஜமஹேந்திரன் திருவீதியில் வடகீழ் மூலையிலே திருநடைமாளிகையிலே அறையாகத் தடுத்து, அந்த டில்லீசுவரன் புத்ரியான ஸுரதாணியை சித்ரரூபமாக எழுதிவைத்து ப்ரதிஷ்டி₂ப்பித்து, பெருமாள் நியமநத்தினாலே, நித்யமாக ப்ராத:காலத்திலே டில்லியில் நடந்தபடிக்கு கோதுமை ரொட்டியும் மது₄ரப்பருப்பும் கிச்சிடியான பொங்கலும் பெருமாளமுதுசெய்தருளி, *(பூ₄மி நாய்ச்சியார் என்று பெயர்கொண்ட) சாந்து நாய்ச்சியார் அமுதுசெய்தருளும்படி பண்ணி. அதற்காகக் கொற நாட்டிலே இரண்டு க்₃ராமம் ஸமர்ப்பித்தது ராஜேந்த்₃ரசோழன் கைங்கர்யம்.

திருத்தாழ்வரைதாஸர், ஈரங்கொல்லி, பஞ்சுகொண்டான் இசையறியும் பெருமாள்கூட்டத்தார் என்னும் அருளப்பாடு

அழகிய மணவாளப் பெருமாளும், சேரபாண்டியன் சிங்காசநத்திலே ஏறியருளி, அந்த வ்ருத்$_3$த$_4$ரான கொட வரை அழைப்பித்து, '**திருத்தாழ்வரை தாஸர்**' என்று அருளப்பாடிட்டு, ஸகல வரிசைகளும் ஸாதித்தருளி, அந்த வ்ருத்$_3$த$_4$னை வண்ணானையும் '**ஈரங்கொல்லி**' என்று அழைத்து ப$_3$ஹுமாநம் சாதித்தருளினார். அது முதலாக, கொடவருக்கு 'திருத்தாழ்வரை த$_3$ாஸர் என்று பட்டப் பேரும், 'ஈரங்கொல்லி' என்று கோயில் ஸந்நிதி$_4$ வண்ணானுக்கு பட்டப்பேரும் நடந்துவருகிறது. குலசேகரன் திருவீதியில் வடக்கு வாசலிலே, **பஞ்சு கொண்டான்** துலுக்கருடன் படைபண்ணி ஶரீரத்தை உபேக்ஷித்தபடியினாலே, அந்த வாசலிலே தாமெழுந்தருளுகிறபோது அந்தப் பஞ்சு கொண்டானுக்கு அருளப்பாடு சாதிக்கத் திருவுள்ளமானார். இந்த வ்ருத்தாந்தங்களெல்லாம், சாந்து நாய்ச்சியார் ஸந்நிதி$_4$யில் வெளிப்புறத்துச் சுவரிலே ஶிலாலிகி$_2$தம் பண்ணியிருந்தது. சித்ர மண்டபம் ஜீர்ணோத்$_3$த$_4$ாரணத்திலே விஶகலிதமாய்த்து. அழகிய மணவாளப்பெருமாள், பாடுவாருடைய க$_3$ாநரஸத்திலே ஈடுபட்டு ஸௌரதாணியை விட்டு வருகையாலே, அதுமுதலாக, பாடுவாருக்கு '**இசையறியும் பெருமாள் கூட்டத்தார்**" என்று அருளப்பாடு நடந்துவருகிறது.

ஸ்ரீமந்நாத$_2$முனிகள் கல்பித்த கட்டளை

அநந்தரம், பெருமாள் திருவரங்கந் திருப்பதியிலே ஸுப்ரதிஷ்டி$_2$ராய் பூர்வப்ரகாரமாக நித்யோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவாதி$_3$களும் கண்டருளுமிடத்தில், மார்கழி மாஸத்திலே, பூர்வப்ரகாரம் திருவத்$_4$யயநோத்ஸவத்திலே திருமங்கைமன்னனுக்காகத் திருவாய்மொழிக்கு

வேத3ஸாம்யமநுக்3ரஹித்து ப3ஹுநாள் திருவாய்மொழி கேட்குமிடத்தில், காலதோ3ஷத்தினாலே ப்ரப3ந்த4ங்களும் திரோஹிதங்களாய் அத்4யயநாத்4யாபகங்களும் இல்லாமல், அதினாலே ஆழ்வாரும் கோயிலுக்கு எழுந்தருளாம லிருக்குங்காலத்திலே ; கல்யப்3த3ம் மூவாயிரத்துத் தொள்ளாயிரத்திருபத்து நாலுக்குமேல் ஸ்ரீமந்நாத2முனிகள் அவதரித்தருளி, மன்னனார் ஸந்நிதி4யிலும் திவ்யதேச ஸேவா நிமித்தமாக எழுந்தருளி, திருக்குடந்தையிலே வர, அங்கே " ஆராவமுது " பத்துபாட்டுமாத்ரம் நம்மாழ்வார் பாடலிலேயிருக்கக்கேட்டு, திருநகரியிலே எழுந்தருளி, மது4ரகவி ஸம்ப்ரத3ாயஸ்த2ரான ஸ்ரீபராங்குசநம்பி ஸந்நிதி4 யிலே ஆழ்வார்விஷயமான " கண்ணிநுண்சிறுத்தாம்பு " என்கிற பத்துபாட்டு லபி4த்து, யோக3த3சையிலே ஆழ்வாரை ஸாக்ஷாத்கரித்து, தந்முக2மாக ஆழ்வார்கள் பதின்மரும் ஆண்டாளும் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங் களை லபி4த்து க்ருதார்த்த2ராய், திருவரங்கந்திருப்பதியேற எழுந்தருளி, ஸ்ரீகார்யம் நிர்வஹிக்குமளவில்; பெருமாள் திருமங்கை மன்னனுக்காகத் திருவாய்மொழிக்குப் பண்ணின அனுக்3ரஹாதிசயத்தையும் நம்மாழ்வார் திறத் தில் பண்ணின க்ருபையையும் கேட்டருளி மிகவும் உகந்து, ஸ்வசிஷ்ய ப்ரசிஷ்ய முக2த்தாலே அநேகம் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்தியான திவ்யப்ரபந்தங்களை அத்4யயநாத்4யாபகங்களைப் பண்ணு வித்துக்கொண்டு, பெருமாள் திருவாய்மொழிக்கு வேத3 ஸாம்யம் அநுக்3ரஹித்தபடியினாலே வேத3த்தைப்போல திருவாய்மொழிக்கும் உபக்ரமோத்ஸர்ஜநகாலத்தை, திருக் கார்த்திகை தி3வ்யமஹோத்ஸவத்திலே உத்ஸர்ஜநகால மென்றும், மார்கழி மாஸத்தில் சுக்ல ஏகாத3சி அத்4யய நோத்ஸவத்திலே உபக்ரமகாலமென்றும் நிர்ணயம்பண்ணி, திருக்கார்த்திகையிலே உத்ஸர்ஜநம்பண்ணின அநந்தரம், திருவத்4யயநோத்ஸவத்திலே உபக்ரமிக்குமளவும் ஸ்ரீ வைஷ் ணவர்கள் அனைவரும் நெஞ்சினால் நினைந்து வாயினால் மொழி

யாமலிருக்கும்படி பண்ணி; முன்புபோலே ப்ரதிஸம்வத்ஸரமும், பெருமாள் ஆழ்வாருக்குத் திருமுகப்பட்டயம் முதலான வரிசையும், திருக்கார்த்திகை மஹோத்ஸவத்திலே திருநெடுந்தாண்டகம் திருமுன்பே பாடின இளைப்புத் தீரும்படி தாம் சாத்தின மிச்சமான எண்ணெய்க்காப்பைத் திருமங்கைமன்னன் மிடற்றிலே சாத்துவித்த கட்டளையை, ஆழ்வார்களுக்குத் தலைவரான நம்மாழ்வாருக்குச் சாத்தி, தச்சேஷமான எண்ணெய்க்காப்பை ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமிடற்றிலே சாத்திக்கொள்ளும்படி பண்ணிவைத்து; ரிகாதிபேதந சதுர்விதமான வேதங்களுக்கு ஶீக்ஷாதிகளும் இதிஹாஸ புராணங்களும் அங்கோபாங்கமாயிருக்குமாபோலே, நம்மாழ்வாரருளிச் செய்த ப்ரபந்தங்கள் நாலும் சதுர்வேத ஸ்தாநங்களாகவும்; இவைகளுக்கு மற்ற ஆழ்வார்களும் ஆண்டாளுமருளிச்செய்த ப்ரபந்தங்களும் அங்கோபாங்கங்களாகவும், திருவாய்மொழி த்வயார்த்த விவரணமென்றும்; திருப்பல்லாண்டுமுதல் பெரியாழ்வார் திருமொழி, திருப்பாவை, நாய்ச்சியார் திருமொழி, பெருமாள்திருமொழி, திருச்சந்த விருத்தம், திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனாதிபிரான், ஆக இப்ரபந்தங்கள் ப்ரணவார்த்த ப்ரகாஶகமாகையாலே முதலாயிரமென்றும், கண்ணிநுண் சிறுத்தாம்பு நமஶ்ஶப்தார்த்த விவரணமென்றும், திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், முதலாழ்வாரருளிச்செய்த ப்ரபந்தங்கள் மூன்றும், நான்முகன் திருவந்தாதி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல், இவை மந்த்ரஶேஷவிவரணமென்றும்; முதல் திருவந்தாதிமுதல் திருமடலீறாக, ஶப்தரஸ ப்ரதாநமாகையாலே, இயற்பா என்றும்; இருபத்துமூன்று ப்ரபந்தமும் திருமந்த்ரார்த்த விவரணமாகையாலே, திருப்பல்லாண்டுமுதல் திருநெடுந்தாண்டகமீறாக, அத்யயநோத்ஸவத்துக்கு முன்பு பத்து நாளாக பெருமாள் கேட்டருளும்படிக்கும்; அத்யயநோத்

ஸவமான மற்றுநாள்முதல், திருமடலீருக இயற்பா ஆயிர மும் கேட்டருளும்படிக்கும்; ஆழ்வார்கள் பதின்மரும் ஆண்டாளும் மது₄ரகவியும் ஆக பன்னிரண்டு திருநாம மருளிச்செய்த இருபத்துநாலு ப்ரப₃ந்த₄ங்களில் பாட்டு நாலாயிரமென்றும்; ப்₃ராஹ்மணனுக்கு வேத₃வேதா₃ந்த இதிஹாஸ புராணாதி₃கள் அதி₄கரிக்க வேண்டினாற்போலே, முமுக்ஷுவான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இப்ரப₃ந்த₄ங்கள் அவஶ்யம் அதி₄கரிக்கவேணுமென்றும்; இதில், திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி, நித்யம் ப்ராத:காலத்திலே அநுஸந் தே₄யமென்றும்; திருவாய்மொழிக்கு ஆத்₃யந்தத்திலே, ஆழ்வார் விஷயமான "கண்ணிநுண்சிறுதாம்பு" அநுஸந் தே₄யமென்றும்; இப்படி ஸமயவ்யவஸ்தை₂ செய்தருளி; ப்ரதிஸம்வத்ஸரம், தாம் திருக்கார்த்திகை மஹோத்ஸவத் திலே, திருமங்கை மன்னனைப்போலே திருநெடுந்தாண்ட கத்தையும், தாமுண்டுபண்ணின திருமொழித்திருநாளில் முதலாயிரத்தையும் திருமொழியையும், அத்₄யயநோத்ஸ வத்திலே திருவாய்மொழியையும், தே₃வகா₃னத்திலே ஏறியிட்டு, மது₄ரகவிகளைப்போலே அபி₄நயத்துடன் ஸேவித்து, மற்றைநாள் இயற்பாவை இயலாகஸேவித்துக் கொண்டு, ப்ரதிஸம்வத்ஸரமும் அநேககாலம் ஸேவித்து, தம்முடைய ப₄ாகி₃நேயரான கீழையகத்தாழ்வான் மேலை யகத்தாழ்வானுக்கு ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்களை இசையுடனே ஸாதி₃த்து, தம்மைப்போலே திருமொழி திருவாய்மொழித் திருநாளிலே ஸேவிக்கச்சொல்லி நியமித்து, தாம் மன்னனார்கோயிலுக்கெழுந்தருளி; கீழை யகத்தாழ்வானும் மேலையகத்தாழ்வானும் ஸ்ரீமந்நாத₂முனிகள் கல்பித்த கட்டளை.

க₃ாயகஸார்வபௌ₄ளமனென அழகியமணவாளன், பாடுவார்க்கு அரையர் என்னும் திருநாமமும், குல்லாவும், தொங்கல்பட்டும் ஸாதி₃த்தது

திருமொழி திருவாய்மொழித் திருநாளிலே நன்ருக ஸேவித்து, அழகியமணவாளப்பெருமாளை மிகவும் உகப்பிக்க, பெருமாளும் உகந்தருளி, ஒருத்தருக்கு **"மதியாத தெய்வங்கள் மனமுறைவாணப் பெருமாளரையர்"** என்றும், ஒருத்தருக்கு **"நாத₃விநோத₃ அரையர்"** என்றும் திருநாமம் ஸாதி₃த்து, ஆழ்வாருக்கு ஸாதி₃த்த கட்டளையிலே குல்லாவும், தொங்கல் பரியட்டமாகப் பட்டும், பருத்தியும், சாத்திக் களைந்த திருமாலைகள் இவை ப்ரஸாத₃ங்களும் ஸாதி₃த்து; நம்மாழ்வாருக்கு விடை ஸாதி₃த்தவுடனே யாத்ராநுகு₃ணமாகத் தம் வரிசைகளையெல்லாம் ஸாதி₃த்தாப்போலே, அரையர்களுக்கு தம் வரிசைகளை ஸாதி₃த்து, "நம் பாடுவானை வீட்டிலே விட்டு வா" என்று தன் ஸேநாதி₄பதியை நியமிக்க; நியமநப்படியே ஸகல பரிஜநங்களுடன் ஸேநாபதியும் அரையரை வீட்டிலே விட்டு வந்தார். அது முதலாக, பாடுவாருக்கு அந்த இரண்டு பட்டப்பேரும் **அரையர்** என்கிற வியவகாரமும் நடந்துவருகின்றது. கா₃நரஸத்திலே துவக்குண்டு **க₃ாயகஸார்வபௌ₄ளமன்** என்கிற மேன்மைதோன்ற "அரையர்" என்கிற திருநாமமும, அந்த ப்ரபு₄த்வ ஸூசகமான குல்லாவும், தொங்கல் பரிவட்டமும் ஸாதி₃த்தருளினது பாடுவார்க்கேயல்லாமல் மற்ற பரிஜநங்களுக்கில்லை.

உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி, ஆளவந்தார் வைபவம்

ததந₃ந்தரம், உய்யக்கொண்டாரும், மணக்கால்நம்பியும் த₃ர்ஶநத்தையும் ஸ்ரீகார்யத்தையும் நிர்வஹித்துக்கொண்டு வருங்காலத்திலே; ஒட்டியதே₃ஶத்து ப்ரபு₄ கரைபுரண்டு வருமளவில், அச்சேதியைக் கேட்டு அழகியமணவாளப் பெருமாள் வலசை எழுந்தருளி, அழகர் திருமாலிருஞ்

சோலையிலே ஒரு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து, திரும்பி எழுந்தருளினவிடத்திலே, ஸ்தூ2லத்திலே சில பரிஜநங்கள் ரங்க3த்3ரோஹிகளாய் அதில் அர்ச்சகரும் அநுப்ரவிஷ்டராய் மெய்தீய்ந்து போகையில், ஸ்ரீவைக2ாநஸ ஶாஸ்த்ரஜ்ஞரான நம்பிமார் ஆராத4னம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். இதர மதஸ்தூ2ரான ஷட் ஸமயத்தாரும் திருவரங்கந் திருப்பதியிலே வீடு கட்டிக்கொண்டு ஸ்வதந்த்ரராயிருந்தார்கள். இப்படியிருக்கும் காலத்திலே, மணக்கால்நம்பியும், யமுனைத்துறைவரான ஆளவந்தாரைத் திருத்தி, பெரிய பெருமாளை ஸேவிக்கப் பண்ணுவிக்க; ஆளவந்தாரும், பெருமாளுடைய கடாக்ஷத்தினலே பரமவிரக்தராய், தம்முடைய ஐஶ்வர்யாதி3களைப் பரித்யஜித்து ஆஶ்ரமஸ்வீகாரம் பண்ணி பெரியபெருமாள் ஸாம்ராஜ்யத்தில் உள்புகுந்து, ஸ்ரீகார்யம் நிர்வஹிக்கிற காலத்திலே; ஆக3மப்ரமாணம் செய்தருளி, இதர ஸமயிகளை நிரஸித்து, திருவரங்கந் திருப்பதியிலே அவர்களிருப்பு அறிவித்து, ப3ஹுக்3ரந்த2முக3த்தாலே த3ர்ஶநநிர்வாஹம் செய்தருளியிருக்கும் காலத்திலே;

ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் வைப4வம்

ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் ப்ரபு3த்3த4ராய், கா3நாதி3வித்3யைகளிலும் ப4க3வத்ப்ராவண்யத்திலும் மிகுந்தவராய், திருமொழி திருவாய்மொழித் திருநாள்களிலே அழகிய மணவாளப்பெருமாள் விப4வாவதாரத்தில் செய்தருளின அபதா3நங்களை நாடகமாகத் திருக்கோலமடுக்குச்சாத்தி அபி4நயித்து மிகவும் உகப்பிக்க; பெருமாளும் போரவுகந்தருளி, **"கோயிலுடைய பெருமாளரையர்"** என்று திருநாமம் சாத்தி, ஸகலவரிசைகளையும் ஸாதி3த்தருளினர். ஒரு காலவிஶேஷத்திலே, திருவூறல் மஹோத்ஸவத்திலே, திருக்காவேரியிலும் நடைக்குப் பரியாயமான தோளுக்கினியான் மேலே புறப்பட்டருளி, அரையரை அழைத்து, "நம் நடையழகுக்கீடாகப் பாடும்"

என்று அருளப்பாடு ஸாதி₃க்க; அவரும், இசையிலே ஏத்திக்கொண்டுவர, கோயிலிலே எழுந்தருளினர். ஒரு கால விஶேஷத்திலே, பங்குனி உத்திரத்தில் நாய்ச்சியார் கொலுக்குளிர் சோலையிலே, நாய்ச்சியாரும் தாமுமாய்க் குமிழிநீருண்டு வவ்வலிட்டு, அந்த அரையரைக் கடாக்ஷித்து வஸந்தனுக்கு அருளப்பாடு ஸாதி₃க்க; கோயிலுடைய பெருமாளரையரும், திருவுள்ளமறிந்து ரஸிக்க; பெருமாளும் போர உகந்தருளினர். அந்த அரையர் தொட்டு **"கோயிலுடைய பெருமாளரையர்"** என்கிற பட்டப் பேரும், அடுக்குச்சாத்திக்கொண்டு அந்தந்த திருக்கோலத்துடனே த₃ஶாவதாராதி₃ விப₄வாவதாராபத₃ாநாபி₄நயங்களும், திருவூறலுத்ஸவத்திலே திருக்காவேரிக்கெழுந்தருளித் திரும்பியெழுந்தருளும்போது இசையுடனே எழுந்தருளுகிறதும், பங்குனி உத்திரத்திலும் நாய்ச்சியார் சேர்த்தியிலே வஸந்தனுக்கு அருளப்பாடிட்டு கா₃நம் கேட்டருளுகிறதும் நடந்துவருகிறது.

உடையவர் வைப₄வம்

இந்தப்படி அநேககாலம் ஆளவந்தார் ஸ்ரீ கார்யம் விசாரித்து, தமக்குப் பின்பு உப₄யகைங்கர்ய நிர்வாஹகரார்? என்று திருவுள்ளத்திலே நினைத்திருக்க; ஸ்ரீபெரும்பூதூரிலே இளையாழ்வாரவதரித்து, பெருமாள்கோயிலிலே யாத₃வப்ரகாஶனண்டையிலே வித்₃யாப்₄யாஸம் பண்ணுகிற சேதியைக் கேட்டருளி, ஆளவந்தார் பெருமாள்கோயிலுக் கெழுந்தருளி, இளையாழ்வாரைக் கடாக்ஷித்து, "உப₄ய கைங்கர்ய நிர்வாஹகராகவேணும்" என்று அநுக்₃ரஹித்து, பேரருளாளர் ஸந்நிதி₄யிலேயும் ப்ரார்த்தி₂த்துக்கொண்டு கோயிலேற வெழுந்தருளி, இளையாழ்வார் யாத₃வப்ரகாஶனை விட்டுத் தேவப்பெருமாளுக்கு சாலைக்கிணற்றிலே திருமஞ்சன கைங்கர்யம் பண்ணிக்கொண்டிருக்கிற சேதியைக் கேட்டு, ஆளவந்தார் தேவப்பெருமாள் விஷயமாக ஸ்தோத்ரத்தைப் பண்ணியருளி, பெரியநம்பியைப் பெருமாள்

கோயிலுக்கு அனுப்பியருள ; பெரியநம்பியும் பெருமாள் கோயிலுக்கெழுந்தருளி, தேவப்பெருமாள் ஸந்நிதி$_4$யிலே ஆளவந்தார் ஸ்தோத்ரத்தை விண்ணப்பஞ்செய்ய, இளையாழ்வார் கேட்டு, கேவலம் ஈடுபட்டு, ஆளவந்தாரை ஸேவிப்பதாகப் பெரியநம்பியுடனே திருக்கரம்பனூரிலே யெழுந்தருளி, இக்கரை கோலாஹலத்தை விசாரித்து, ஆளவந்தாரைத் திருப்பள்ளி படுக்கிறதைக் கேட்டு மிகவும் ஶோகித்து, பெரியநம்பியுடனே ஆளவந்தாருடைய தி$_3$வ்ய மங்க$_3$ள விக்$_3$ரஹத்தை ஸேவித்து, அவருடைய மநோ ப$_4$ாவத்தையறிந்து ப்ரதிஜ்ஞைபண்ணி, தாம் வந்த வரத்து நிஷ்ப$_2$லமாகையாலே பெருமாளையும் ஸேவியாமல் பெருமாள்கோயிலுக்கெழுந்தருளி, தேவப்பெருமாளுக்கு முன் போலே திருமஞ்சன கைங்கர்யம் பண்ணிக்கொண்டிருந்து, பேரருளாளப்பெருமாள் திருக்கச்சிநம்பியுடனே ஆறு வார்த்தை அருளிச்செய்தபடியினாலே 'பெரியநம்பி திருவடிகளிலே ஆஶ்ரயிக்கவேணும்' என்று புறப்பட்டருளின ஸமயத்திலே ; அழகியமணவாளப்பெருமாளும் பெரியநம்பியை நியமிக்க, பெரியநம்பியும் புறப்பட்டருளி, பயணகூ$_3$தியிலே வர, இவரும் ஸ்ரீமது$_4$ராந்தகத்திலே ஸந்தித்து, தாம் வந்த காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு, இருவரும் பெருமாள் கோயிலுக்கெழுந்தருளி, சிலகாலமிருந்து, பெரியநம்பி கோயிலேற எழுந்தருளினவநந்தரம், இளையாழ்வார் ஆஶ்ரம ஸ்வீகாரம் செய்தருளின சேதியை ஸ்ரீரங்க$_3$ தி$_3$வ்யநக$_3$ரவாஸிகளும் பெருமாளும் கேட்டருளி, அழகியமணவாளப்பெருமாள் நியமநத்தினாலே திருவரங்கப் பெருமாளரையரை ஸ்த$_2$லத்தார் பெருமாள்கோயிலுக்குப் பயணம்பண்ணி, இராமாநுசனை அழைத்துக்கொண்டு வரச்சொல்லியனுப்ப; அரையரும் புறப்பட்டுப் பெருமாள்கோயிலுக்கெழுந்தருளி, தேவப்பெருமாளை கா$_3$நரஸத்தினாலே மயங்கும்படிபண்ணி, இராமாநுசனைப் பாரிதோஷிகமாக வாங்கிக்கொண்டு கோயிலுக்கெழுந்தருளுகிற சேதி கேட்டருளின அழகியமணவாளப்பெருமாள் நியமநத்தினாலே, ஸபரிகரராய் ஸேனை

முதலியார் புறப்பட்டருளி, பன்றியாழ்வான் கோயிலளவாக எழுந்தருளி, இராமானுசனை எதிர்கொண்டு கோயிலிலே அழைத்துக்கொண்டுவர ; அழகியமணவாளப்பெருமாளும், திருவணுக்கன் திருவாசலளவாக திருக்கைத்தலத்திலே எழுந்தருளி எதிர்கொள்ள ; இராமானுசனும், பெரியநம்பியை முன்னிட்டுக்கொண்டு ஸந்நிதி₄யிலே புகுந்து ஸேவிக்க ; பெரியபெருமாளும் குளிரக்கடாக்ஷித்து: பரிவட்டம் முதலான வரிசைகளையும் செங்கோலையும் ப்ரஸாதி₃த்து, "நம் உப₄யவிபூ₄தியும் உமக்கு இஷ்ட விநியோகா₃ர்ஹமாம்படி தந்தோம், நீர் உப₄யவிபூ₄தியையும் **உடையவராய்** நம் காரியத்தை ஆராய்ந்து கொண்டுபோரும்" என்று அருளப்பாடு ஸாதி₃த்து, திருவிக்ரமன் திருவீதியில் வடக்கு மாடத் திருவீதியில் கீழ்க்கண்டத்தில் முதல்மனையான சேரன் மடத்திலே, உடையவரை விட்டுவாருங்கோள்" என்று பரிஜநங்களை நியமிக்க, அந்தப்படியே உடையவரும், மடத்திலே,ஆழ்வான் ஆண்டானுடனே எழுந்தருளி, பரிஜநங்களையும் பெரியநம்பியையும் க்ஷாமணம் பண்ணிக்கொண்டெழுந்தருளியிருந்து, மற்றைநாள் முதலாக ஸ்ரீகார்யம் நிர்வஹித்தருளின விவரம்:—ஆழ்வானை து₃ர்ஶந நிர்வாஹத்துக்குத் தமக்கு உசாத்துணையாக நியமித்து, முதலியாண்டானை உள்துறை கைங்கர்யத்திலே நியமித்து, தாம் திருக்கொட்டார வாசலுக்குத் தென்புறத்திலே உமிக் கட்டில் குறட்டிலேயிருந்து திருவிடையாட்டப்பரிப₄வமும்,மேல்முகம் கீழ்முகங்களான திருத்தோப்புகளில் விஶேஷங்களும், திருக்கொட்டாரத்தில் மரியாதைகளும் அறிவறியாக விசாரித்து படித்தனம் முதலானதுகளும் திட்டம்பண்ணி, நாள்தோறும் படித்தனம் முதலான கணக்குகளைப் பெருமாள் பெரிய வஸரம் அமுதுசெய்தருளினபின்பு ஏகாந்தமாக ஸந்நிதி₄யிலே விண்ணப்பஞ் செய்துகொண்டு, இந்தப்படி ஸ்ரீகார்யம் விசாரித்து, கருவுகலம் முதலானவைகளையும் விசாரித்து, ப₃ஹு அவந்தரையாயிருந்தபடியினாலே, அந்தந்தத் துறைகளைத் திட்டம் பண்ணவேணுமென்று திருவுள்ளத்

திலே நினைத்திருக்க; இப்படி அறிவறியாய் விசாரிக்கிறது பரிஜநங்களுக்கு நிர்ப3ந்த4மாய், காலதோ3ஷத்தாலே பரிஜநங்கள் விஷப்ரயோகா3தி3 ஈதிபா3தை4களைப் பண்ணின படியினாலே, உடையவரும் திருவரங்கந் திருப்பதியை விட்டு, இரண்டு வருஷம் திருவெள்ளறையிலே எழுந்தருளியிருந்து, அவ்விடத்திலே அழகியமணவாளப்பெருமாளை எழுந்தருளப்பண்ணி, ஏரியுங்கட்டி, பங்கயச்செல்வி ஸ்ரீகார்யத்தையும் து3ர்ஶந நிர்வாஹத்தையும் செய்துகொண்டு எழுந்தருளியிருக்க; பெருமாள் நியமநத்தினாலே பரிஜநங்கள் பு3ஹூதப்தராய், உடையவரை எழுந்தருளப்பண்ணுவித்துக் கொண்டுவரச்சொல்லித் திருவரங்கப் பெருமாளரையரை அனுப்ப; அரையரும் உடையவரை அழைத்துக்கொண்டு வர; உடையவரும் ஸ்ரீகார்யம் விசாரிக்குமளவில், அகளங்க நாட்டாழ்வான் உடையவர் திருவடிகளை ஆஶ்ரயிக்க; அவர் ஸமர்த்த2ராகையாலே திருவிடையாட்டம் விசாரிக்கிற கைங்கர்யத்தை அவருக்கு நியமித்தருளி; பூர்வம் திருவிக்கிரமசோழன் கைங்கர்யமான ஆலிநாடன் திருவீதியில் பெரிய திருமண்டபத்தில் குறட்டின்மேலே மரக்கோப்பாகத் திருமண்டபங் கட்டிவைத்து, ஒருநாள் ஆண்டான் த3த்4யோத3நத்துடனே நல்ல நாவல்பழத்தை அமுது செய்யப் பண்ணுவிக்க; பின்பு, உடையவர், அழகிய மணவாளப்பெருமாள் ஸந்நிதி4யிலேவர, திருமுகமண்டலம் வாடியிருக்கக் கண்டு, அமுதுசெய்த பதா3ர்த்த2த்தை விசாரித்து, "த3த்4யோத3நத்துடனே நாவல்பழம் அமுது செய்த படியினாலே இப்படியாய்த்து" என்று ஆண்டானை நிக்3ரஹித்து, தம் ஶிஷ்யரான க3ருட3வாஹந பண்டி3தரைக் கொண்டு பெருமாளுக்கு சிகித்ஸிப்பித்து, பூர்வம் புராண ஸித்3த4மாய் ஜீர்ணமாயிருந்த த4ந்வந்த்ரியை ப்ரதிஷ்டி2ப்பித்து, அந்தக் கோயிலை க3ருட3வாஹந பண்டி3தருக்குக் கட்டளையிட்டு, அவரிடத்திலும் நித்யமாக ராத்ரி திருக்காப்புச் சேர்க்கிறதுக்கு முன்பாக, குடிநீர் பால் அலங்காரமாக வந்து அமுதுசெய்தருளும்படி திட்டம்பண்ணி,

"திருவரங்கந் திருப்பதி ஸ்ரீபாஞ்சராத்ரம் என்று ஶாஸ்த்ர ஸித்₃த₄மாயிருக்க, ஸ்ரீவைக₂ாநஸமாயிருக்கலாகாது" என்று வைக₂ாநஸநம்பியாரை நிக்₃ரஹித்து, ஏகாயநருக்கு அஞ்சு பேருக்கு தீ₃க்ஷை ஸாதி₃த்து மண்டலநாமமென்று இவர்க்குப் பட்டப்பேராக அஞ்சு திருநாமமும் ஸாதி₃த்து, "**ப₄ாக₃வத நம்பிமார்**" என்று ஶாஸ்த்ர ஸித்₃த₄வ்யவஹாரமும் நடத்திவைத்து, ஸ்ரீபாஞ்சராத்ரத்தில் பரமேஶ்வர ஸம்ஹிதாக்ரமத்திலே திருவாராத₄நம் நடத்திவைத்து, கருவுகலம் முதலானவைகளுக்கு * தோதவத்தித் தூய் மறையோரான கொடுவாளெடுப்பார் கையிலே பூட்டும் திறவுகோலும், தளிகையிடுவாருடைய முத்₃ரை—தாங்கள் பக்ஷிராஜ பரிகரமாகையாலே தங்கள் கைங்கர்யத்துக்கு யஜமாநரான க₃ருட₃ முத்₃ரையும், ஆரிய பட்டாள் காவலும், பல்லவன் விழுப்பரையன் கணக்குமாக நடந்துவர; அதில் ப₃ஹு அவந்தரையாக இருந்தபடியினலே, திருவாழியிலச்சினை தம்மதாகவும், ஸ்ரீபாஞ்ஜசங்யமுத்₃ரை நம்பிமாரதாகவும், நடத்துவிக்க; அந்தக் கணக்கனை ரங்கத்₃ரோஹத்தினலே தள்ளியிருந்தபடியினலே ஒரு ஸ்ரீவைஷ்ணவ ப்₃ராஹ்மணனுக்குக் கணக்குக் கட்டளையிட நினைக்க, ஸ்த₂லத்தார் பூர்வமர்யாதை₃யை விண்ணப்பஞ்செய்ய, அந்தப்படியே வேளாளனை விழுப்பரையனுக்கு **கோயில் கணக்கன்** என்று கீரனூர் கிழவனுக்கு ஆஶ்ரயண பூர்வகமாக "**ஶட₂கோபதா₃ஸன்**" என்று தா₃ஸ்யநாமத்தை ஸாதி₃த்து, அவனுக்கு "**ஸ்த₂லஸம்ப்ரதி**" என்னும் பேரையும் நாட்டி, அவர்களுக்குச் சில வ்யவஸ்த்தை₂யும் பண்ணிவைத்து; இளநீர்திருத்தி ஸமர்ப்பிக்கிறது கைக்கோளமுதலியாயிருக்க, ப்₃ராஹ்மணனை நியமிப்போமென்று திருவுள்ளம்பற்றி, கைக்கோளமுதலியை சோதிக்குமிடத்தில், ப₄ாவஶுத்₃தி₄யுண்டாயிருந்தபடியினலே திருவுள்ளமுகந்து அவனையே அந்தக் கைங்கர்யத்திலே நியமித்து, பூர்வம் கொவணவர், கொடவர், கொடுவாளெடுப்பார், பாடுவார்,

---

* தோதவத்தி (பெரியாழ்திரு 4-8-1)—தெ₄ளதவஸ்த்ரீ—வெள்ளை வஸ்திரம் உடுத்தவர்.

தழையிடுவார் என்று அஞ்சு கொத்திலே பரிஜநங்கள் அடங்கி நடந்து வந்ததை, பத்துக்கொத்தாகப் பெருக்கி நடப்பிக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றியிருக்குமளவில்;

வாக்₃மியான ராஜவல்லப₄ராய் நம் கோயில் புரோஹித ராய் நம் **பெரியகோயில்நம்பி** உடையவரை மதியாதே கில்பி₃ஷம் பண்ணிக்கொண்டிருக்க, உடையவரும் அவ ரைத் திருவரங்கந்திருப்பதியில் உத்₃வஸிப்பிப்பதாகத் திரு வுள்ளம்பற்றி, ஒரு காலவிஶேஷத்திலே பெருமாள் புறப் பாட்டுக்குக் காத்திருக்கிற ஸமயத்திலே, உடையவர் ஸ்வப்நத்திலே, வ்ருத்₃த₄ ஸ்ரீவைஷ்ணவராய் வந்து, 'பெரிய கோயில்நம்பி ப₃ஹுகாலமாய் நம்மை நம்பியிருக்கிறார், திருவுள்ளமானபடி செய்யவேணும்' என்று அருளிச்செய்ய; உடையவரும் கண்விழித்து, ஆழ்வானை அழைத்து, 'பெரு மாளுக்கு நம் ஶத்ருவான பெரியகோயில்நம்பி இருக்கிறதே திருவுள்ளமாயிருக்கிறது, நாம் பெருமாள்கோயிலுக்குப் போவோம்' என்று அருளிச்செய்ய; ஆழ்வானும், "பெரு மாள் அந்தப்படி அருளிச்செய்தபோதே அவரை அநுகூல ராய்த் திருவடிகளிலே ஆஶ்ரயிக்கும்படி பண்ணியருளுவர்" என்று விண்ணப்பஞ்செய்ய; "ஆகில் அவரைத் திருத்தும்" என்று அருளிச்செய்ய; ஆழ்வானும், வித்₃வானான பெரிய கோயில்நம்பியை க்ரமேண திருத்தி, உடையவர் திருவடி களைச் சேரவிட; உடையவரும் அவரைக் கடாக்ஷித்து க்ருபைபண்ணி, அவருடைய வாங்மாது₄ர்யத்தினாலே **"அமுதன்"** என்று திருநாமம் சாத்தி ஹ்ருஷ்டராயிருக்க; உடனே ஐப்பசி மாஸத்திலே அமுதனுக்கு மாத்ரு வியோக₃மாய், பத்துநாளையில் கர்மங்களை நிறைவேற்றி, ஏகாஹத்துக்கு, முன்புபோலே ப்ராக்ருதராயிருக்கிற தே₃ஹாநுப₃ந்தி₄களை பு₄ஜிப்பிக்கவொண்ணாமையாலே, எம் பெருமானார் ஸந்நிதி₄யிலே சென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், தம் முதலிகளைக் கடாக்ஷிக்க, முதலிகளும் இசையாமலிருக்கக்கண்டு, ஆழ்வானை அழைத்து, "நீர்

போய் ஏகாஹத்தை பூ₄ஜித்து நிறைவேற்றும்'' என்று அனுப்ப; ஆழ்வானும், நியமநப்படியே பூ₄ஜித்து, உத்தரா போஶந ஸமயத்திலே பெரியகோயில்நம்பி கையிலே அவரதான கோயில் பௌரோஹித்யமும் புராணபட₂நமுமான கோயில் காணியாக்ஷியை தா₃னம் பண்ணுவித்துக் கொண்டு, தா₃நஶாஸநமும் வாங்கிக்கொண்டு, மட₂த்திலே ஸமர்ப்பிக்க;

உடையவர் ஸந்நிதி₄ பரிகரங்களுக்குக் கைங்கர்யம் நியமித்தல்

உடையவரும் ஸந்துஷ்டராய், திருவுள்ளத்திலே நினைத்தபடியே ஸந்நிதி₄பரிகரங்களை பத்துக்கொத்தாகப் பெருக்கி; (1) தி₃வ்யதே₃ஶ வாஸிகளாய் பூர்வம் கோயிலொட்டற்றுத் தம் திருவடிகளை ஆஶ்ரயித்தவர்களை **"திருப்பதியார்"** என்று ஒரு கொத்தாகச் சாற்றி, அவர்கள் கைங்கர்யங்களை விப₄ஜித்து, திருப்பாற்கடல்தா₃ஸர் திருக்குருகைப்பிரான் முதலாக உள்ளூர்க்காணியாளரான செல்வநம்பி முதலானோர்க்கும் கைங்கர்யங்களை நியமித்து; (2) இரண்டாம்கொத்தாக, கொடவரில் திருத்தாழ்வரை தா₃ஸர் திருவம்ஶரான அஞ்சுதிருநாமத்துக்கு ஆஶ்ரயண பூர்வகமாக, "திருக்குருகூர் தா₃ஸர், நாலுகவிப்பெருமாள் தா₃ஸர், ஶட₂கோபதா₃ஸர், திருக்கலிகன்றிதா₃ஸர், ராமாநுஜ தா₃ஸர்'' என்று திருநாமமும் ஸாதி₃த்து, விஶேஷகடாக்ஷம் செய்தருளி, அவர்களுக்குக் கோயில் கைங்கர்யங்களையும் வ்யவஸ்தி₂தமாக்கி, **"திருப்பணிசெய்வார்"** என்று நிரூபகமாக்கி; (3) மூன்றாம்கொத்தாக, **ப₄ாக₃வதநம்பிமாரை** ப்ரதிஷ்டி₂ப்பித்து, அவர்களுக்குக் கைங்கர்ய மர்யாதை₃யைப் பண்ணுவித்து; (4) தோதவத்தித் தூய்மறையோரான கொடுவாளெடுப்பாரில், பெரியபெருமாள் திருவரங்க மாளிகையார் முதலான பேருக்கு ஆஶ்ரயணாதி₃களைப் பண்ணிவைத்து, **"உள்ளூரார்"** என்று வ்யவஹரிப்பித்து; (5) பாடுவாரான நாத₂முநியரையர்களுக்கும் ஆஶ்ரய

ஞதி₃களை ஸாதி₃த்து, கைங்கர்ய வ்யவஸ்த்தை₂யும் **"விண்ணப்பஞ்செய்வார்"** என்கிற வ்யவஹாரமும் கல்பித்து; (6) திருவரங்கவள்ளலார் என்றும் தூயமுனிவேழம் என்று மிருக்கிற தம் ஶிஷ்யருக்கு திருமஞ்சநம் முதலான சில கைங்கர்யங்களை உண்டுபண்ணி ஒரு கொத்தாக்கி, அவர்களுக்கு **"திருக்கரகக்கையார்"** என்று பேருண்டாக்கி; (7) தழையிடுவாரான ஸேனாநாத₂ ப்₃ரஹ்மாராயர், வீரஸுந்த₃ரப்₃ரஹ்மாராயர், ஜந(ஜக₃ந்)நாத₂ப்₃ரஹ்மாராயர் முதலாஞருக்கு ஆஶ்ரயணுதி₃களை ஸாதி₃த்து, அவர்களுக்குப் பூர்வம் அந்தந்த ப்ரபு₄க்கள் பேர்கொடுத்ததுகளை விளங்கும்படி பண்ணி, அவர்களுக்கு **"ஸ்த₂ாநத்தார்"** என்று வ்யவஹார முண்டாக்கி; (8) ரிக₃ாதி₃வேத₃ சதுஷ்டயமும் புராணேதிஹாஸ இயல் ஸ்ரீரங்க₃மாஹாத்ம்ய பூர்வோத்தர மீமாம்ஸா ஸூத்ர ஸ்ரீப₄ாஷ்ய ஆக்₂யாந ஆபஸ்தம்ப₃ போ₃த₄ாயந ஸூத்ர ஸ்தோத்ர க₃த்₃ய பஞ்சாங்க₃ ஸங்கீர்த்தநாதி₃களை நித்யமாக ஸந்நிதி₄யிலே திருவாராத₄ந காலங்களிலே விண்ணப்பஞ் செய்யும்படி, தத்தத்ஶாக₂ாத்₄யாயிகளாய் தம் திருவடிகளை ஆஶ்ரயித்தவர்களாயிருக்கிற க₃ருட₃ வாஹநபண்டிதர். பெரியநம்பி, திருப்பணிசெய்வார், நம்பிமார், ஆழ்வான், கோ₃விந்த₃ப்பெருமாள், ஆச்சான், திருவரங்கத்தமுதஞர், பிள்ளான், சிறியாழ்வான், அம்மாள் முதலானவர்களை நியமித்து, அவர்களை ஒருகொத்தாக்கி, **"ப₄ட்டாள்கொத்து"** என்று பேரிட்டு; (9) **"ஆரியபட்டாளையும்"** ஒருகொத்தாக, அவர்கள் கைங்கர்யத்தையும் திட்டம் பண்ணி; (10) புண்ட₃ரீகத₃ாஸர் கைங்கர்யத்தையும் திட்டம் பண்ணி **"த₃ாஸநம்பி கொத்து"** என்று வ்யவஹரிப்பித்து;—இந்தப்படி பத்துக் கொத்தாக்கி, நியதபரிஜநங்களை வ்யவஸ்த்தி₂தமாக்கி—ஸ்ரீஸேநாபதி து₄ரந்த₄ரராய் கொவணவரான தாம் திருவரங்கந் திருப்பதி ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தலைவராகையாலே, முதல்கொத்திலே அநுப்ரவிஷ்டராய், தாம் நித்யமாகக் கற்பித்த க₃ருட₃வாஹந பண்டி₃தர் கைங்கர்யத்தையும் திருப்பதியார் கொத்தோடே

சேர்த்து, இக்கொத்து முதல்பேரும்; பாரம்பர்யமாகக் கொடவருக்கு இரண்டாம்பேரும், தாம் கட்டளையிட்ட ப$_4$ாக$_3$வத நம்பிமார்களுக்கு, தோதவத்தித் தூய்மறையோருடைய கைங்கர்யம் எடுத்துக் கைநீட்டுகிறதாகையாலே நம்பிமாருக்கு மூன்றும்பேருமாக, இப்படி கைங்கர்யத்தைப் பத்துப் பேருக்கும் திட்டம் செய்தருளினர்.

இப்படி பத்துக்கொத்துக்கும் கைங்கர்ய விப$_4$ாக$_3$ம் பண்ணி, பரமவிரக்தராய் தே$_3$ஶாந்தரிகளான ஏகாங்கிகள் நாலுபேருக்கும் வ்யவஸ்த்தி$_2$தமாகச் சில கைங்கர்யங்களை நியமித்து; தங்கப்பிரம்பு நான்கு, வெள்ளிப்பிரம்பு இரண்டு, தளைவளைசல்பிரம்பு இரண்டு, ஆக எட்டுப் பிரம்புக்கும் விரக்தரான திருநாமத$_4$ாரிகளை நியமித்து, அவர்கள் கைங்கர்யங்களையும் விப$_4$ஜித்து; தே$_3$ஶாந்தரிகளான சாத்தாத முதலிகளுக்கும் சில கைங்கர்யங்களையும் நியதமாக நியமித்து; பத்துக்கொத்தாகத் திட்டம்பண்ணி; அந்தந்த வகையில் பத்துக்கொத்துக்கும் கைங்கர்ய விப$_4$ாக$_3$ம் செய்தருளி. திருவரங்கச் செல்வம் சிந்தாமே மங்காமே பொங்கும்படி ஆராய்ந்துகொண்டுவரும் காலத்திலே;

ஒரு திருவத்$_4$யயநோத்ஸவத்துக்கு திருநகரியிலும் ஆழ்வாரெழுந்தருளக்கூடாமல் சில உபாதி$_4$களுண்டாயிருக்க, எம்பெருமானார் தாமே கோயிலிலே ஆழ்வாரை திருப்ரதிஷ்டை$_2$ பண்ணிவைத்து, திருமங்கைமன்னனைத் தவிர மற்ற ஆழ்வார்களையும் நாத$_2$முனிகளையும் திருப்ரதிஷ்டை$_2$ பண்ணிவைத்து, திருமொழி திருவாய்மொழித் திருநாளுக்கு ஆழ்வார்கள் எழுந்தருள, பெருமாள் அருளப்பாடு முதலான வரிசைகளை ஆழ்வார்களுக்கு ஸாதி$_3$த்து, அவர்களுக்குக் கரணபூ$_4$தரான அரையருக்கு அருளப்பாடு ஸாதி$_3$க்கும்படிபண்ணி; இயற்பாவுக்குள் முதலாழ்வார்கள் முதலான இயற்பா அருளிச்செய்தவர் மாத்திரம் அழகியமணவாளன் திருமண்டபத்திலே ஸந்நிதி$_4$க்கு நேராக எழுந்தருளியிருக்கும்படி பண்ணிவைத்தும், பெருமாளுடைய திருமுளைத் திருநாள்களிலே திருவீதிகளிலே தே$_3$ஶாந்தரி ஸ்ரீவைஷ்ண

வர்கள் திருக்கோவைகோத்து இயற்பாவை நித்யம் ஒரு திருவந்தாதியாக அநுஸந்தி₄த்துவர; அந்தத் திருக்கோவை ஆழ்வார் திருவோலக்கமாகையாலே, திருப்பணிப்பு செய்வாருக்குத் தம் உகப்பினாலே ஆழ்வார்களுடைய சந்நிதி₄ப் பேராக சில கைங்கரியங்களை நியமித்து; தம்முடைய த₃ர்ஶனத்துக்கு வெற்றிதோன்ற ஸமயசூ₂த்ரத்தைத் திருக்கோவைக்கு முன்னே பிடிக்கும்படி திருப்பணிசெய்வாரை நியமித்து; இவ்வாழ்வார்களுக்கும், ஆண்டாள்தவிர மற்ற ஆழ்வார்கள் தந்தாம் திருநக்ஷத்ரத்தினன்று திருமஞ்சனத்துடனே ஸந்நிதி₄யிலேயெழுந்தருளி, ப்ரத₂மகடாக்ஷத்திலே மங்க₃ளாஶாஸநம் செய்தருளி, திருவாராத₄நமாய், அமுது செய்தருளி ஸேனைமுதலியாரும் அமுதுசெய்தருளின வநந்தரம், ஒரு தளிகை ப்ரஸாத₃மும் ஆழ்வார் அமுது செய்தருளி, ஸ்ரீ ப₄ண்டா₃ரத்துக்குப் போனபின்பு, தாம் உடுத்துக்களைந்த பீதகவாடையும் சூடிக்களைந்த திருமாலையும் பூசிக்களைந்த களப₄மும் ப்ரஸாதி₃க்க ப்ரஸாத₃ப்பட, விடைஸாதி₃த்து, தம் வரிசைகளாக சித்ரதாலவ்ருந்தாதி₃களை ப்ரஸாதி₃க்க, புறப்பட்டு, நாய்ச்சியார் ஸந்நிதி₄யிலேயும் அந்தப்படியே ஸத்க்ருதராய், திருவீதியிலே யெழுந்தருள; அத்₄யாபக ஸ்ரீ வைஷ்ணவர்கள் இயல்ஸேவிக்க, **திருப்பணி** செய்வார் அந்தத் திருவோலக்கத்துக்கு ஸந்நிதி₄ப் பேராய் இயலுக்கு ஸமர்ப்பிக்கிற அடைக்காயமுது வாங்கியும், சந்தடி விலக்கியும், ஸமயசூ₂த்ரத்தையும் பிடித்துக்கொண்டு, ஆழ்வார் தம் கோயிலிலே எழுந்தருளின பின்பு; அரையருக்கும் ஸ்ரீ பாத₃ம் தாங்கின சாத்தாத முதலிகளுக்கும், அத்₄யாபக ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் ப₃ஹுமாநம் திருப்பணி செய்வார் ஸாதி₃த்து; தீர்த்த₂மும், சாத்துப்படியும், அடைக்காயமுதும், திருவோலக்கத்திலே விநியோக₃ம்பண்ணி; கோயில் பரிகரங்களான பத்துக்கொத்துக்கும் அத்₄யாபகர்கள் ப₃ஹுமதியுடன் விநியோக₃ம் பண்ணி, ஸேவாகாலமாய்த் திருவோலக்கம் கலைந்த பின்பு ததீ₃யாராத₄நம் நடக்கும்படி பண்ணி, ஆண்டாள்

திருநக்ஷத்ரத்துக்கு தம் ஸந்நிதி$_4$யிலேதானே சாற்றுமுறை ஸமயத்திலே பெருமாள் தோதவத்தித் தூய்மறையோர் கையிலே அறுவாணமனுப்பியருள, ஆண்டாளும் அவர் களை ஆத$_3$ரித்து ஆழ்வார் ஸந்நிதி$_4$யைப்போலே நடக்கும் படி திட்டம் செய்தருளினர்.

இந்தப்படி எம்பெருமானார் திட்டம் செய்தருளினபடியி னாலே, பெருமாள் ஸந்நிதி$_4$யிலே ஆழ்வாருக்குக் கரண பூ$_4$தரான அரையர், ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களை இசையுடனே விண்ணப்பஞ்செய்வார்கள். நாய்ச்சியார் ஸந்நிதி$_4$ முதலான திருவிருப்புக்களிலே ஒரு பாட்டு அரையர் இசையுடனே ஸேவிக்க, மற்றப் பாட்டு களை இயலாக ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸேவிக்க, இசை யுடனே அரையர் சாற்றுவர். இயற்பாவோடே கூடின தும், நாத$_2$முனிகளைத்தொட்டு உடையவர் காலத்திலேயும் அநேகநாள் அரையர் ஸேவித்துக்கொண்டு வருமளவில்; ஒருகால விஶேஷத்திலே, பெரியகோயில்நம்பி, தம்முடைய கோயில் பௌரோஹித்யத்தையும், புராணபட$_2$நத்தையும், ப்$_3$ரஹ்மரத$_2$த்தையும் ஆழ்வானுக்கு த$_3$ாநம்பண்ணி, தாம் கோயிலிலே ஓட்டற்றிருந்தபடியாலே, அதுமுதலாக ஆழ்வான் ப$_4$ட்டாள்கொத்திலே சேர்ந்து, ஸந்நிதி$_4$பௌ ரோஹித்யமும் நிர்வஹித்துக்கொண்டு; பூர்வம் திருக் குறுங்குடியிலே நடந்த கைஶிகவ்ருத்தாந்தத்தைப் பெரு மாள்தம்முடைய ஸந்நிதி$_4$யிலே உத்த$_2$ாநத்$_3$வாத$_3$ஶியில் கால்யோத்ஸவகாலத்திலே விண்ணப்பஞ்செய்யச் சொல்லி நியமித்து, ஸ்ரீ பாஞ்சராத்ரோக்தப்ரகாரமாகத் தாம் அந்த உத்ஸவாந்தத்திலே திருவீதி யெழுந்தருளுகிற ப்$_3$ரஹ்ம ரத$_2$த்தைப் பௌராணிகரான பெரியகோயில்நம்பிக்குப் பாரி தோஷிகமாக ஸாதி$_3$த்து, தாம் உள்ளே எழுந்தருளினது முதலாக கைஶிகபுராணம் படித்து, ப்$_3$ரஹ்மரத$_2$மேறி வீதிவலம் செய்கிறதும், ஆழ்வானுக்கே நடந்துவருகை யில்; இத்தை உடையவர் கடாக்ஷித்து, 'வித்$_3$வானுனை

திருவரங்கத்தமுதனர் இப்படி ஒழிந்திருக்கலாகாது' என்று திருவுள்ளம்பற்றி; பிள்ளை திருவரங்கப் பெருமாளரையர் திருமாளிகைக்கு எழுந்தருளி, இயற்பா ஸ்ரீ கோஶத்தை பி₄க்ஷையாகக் கேட்டுக் கொண்டு, 'இன்று முதலாக இயற்பாவை நீங்கள் ஸேவிக்கவேண்டாம்' என்று நியமித்து, அமுதனரை அழைத்து, ஒருரு இயற்பாவை ஸாதி₃த்து, ஸ்ரீ கோஶத்தை ஸந்நிதி₄யிலே வைத்து, 'ஸ்ரீ கோஶத்தின்மேலே இயற்பாவை ஆயிரமும் ஸேவியும்' என்று நியமித்தருளும்படி பண்ணி, அன்றைக்கு அரையருக்கு ஸாதி₃க்கிற வரிசையெல்லாம் அவருக்கு ஸாதி₃க்கும் படிபண்ண; அமுதனரும், ஆழ்வாருக்குக் கரணபூ₄தராய் இயற்பாவை ஸேவித்துச் சாற்றினபின்பு, அரையரைப் போலே வரிசைகளை ஸாதி₃த்து, வீட்டிலே விடுவித்தருளினர். நாய்ச்சியார்கோயில் முதலானதுகளிலேயும் அமுதனர் இயற்பாவைத்தொடங்க, ஸ்ரீ வைஷ்ணவர்கள் அநுஸந்தி₄ப்பர்கள். இசையெல்லாம் அரையர் அநுஸந்தி₄க்கிறது; இயலெல்லாம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் அநுஸந்தி₄க்கிறது. பெரியஸந்நிதி₄யிலே இயற்பா அமுதனர் அநுஸந்தி₄க்கிறது; மற்றவிடமெல்லாம் அவர் தொடங்கி ஸ்ரீ வைஷ்ணவர்கள் அநுஸந்தி₄ப்பார்கள். திருவீதியில் இயல் திருக்கோவை ஆழ்வார் திருவோலக்கமாகையாலே, அவ்விடத்திலே, ஆழ்வாருக்குக் கரணபூ₄தர் ஸ்ரீவைஷ்ணவர்கள்; திருக்கோவையில் ஆழ்வாருக்குக் கரணபூ₄தரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருவோலக்கத்தருகே திருப்பணி செய்வாரை ஸந்நிதி₄ப்பேராக நியமிக்கையாலே, அந்தத் திருவோலக்கத்தில் விநியோகா₃தி₃ கைங்கர்யபரர் திருப்பணி செய்வார்; ஆகையாலே, ஆழ்வார்கள் ஸந்நிதி₄யிலே ப்ரஸாத₃ திருப்பணியாராதி₃ விநியோக₃மில்லை; ததீ₃யாராத₄நமே உள்ளது.

இப்படி உடையவர் திட்டம்செய்தருளின வநந்தரம், சிலநாளைக்குப் பின்பு, திருவரங்கத்தமுதனர், எம்பெருமானர் விஷயமாக, கூ₃ாயத்ரீ ஜபஸங்க்₂யையாலே கலித்துறை

நூற்றந்தாதியை விண்ணப்பஞ்செய்ய; பெருமாள், ஒரு ஸப்தாவரணத் திருநாளிலே, உடையவரை, தம்முடனே கூடவரவேண்டாம் என்று நியமித்தருளி, திருவீதியிலே ஸகலவாத்₃யங்களையும் நிறுத்தி, ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஸந்தி₄க்கக் கேட்டருளி, போரவுகந்தருளினர்; அதுமுதலாக பெருமாள் நியமநத்தினலே, பெரியஸந்நிதி₄யிலே இயற்பா அநுஸந்தி₄த்தவுடனே நூற்றந்தாதியை வரிசையுடன் கேட்டருளுகிறார். நாய்ச்சியார் கோயிலிலேயும், அப்படியே ஆண்டாள் ஆழ்வார் ஸந்நிதி₄யிலே இயற்பாவை அமுதனர் யஜமாநராய்த் தொடங்க, ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஸந்தி₄த்துத் தலைக்கட்ட, நூற்றந்தாதி தொடக்கத்திலே அரையரைப் போலே வரிசைகளை உடையவர் நியமனத்தினலே சாற்றுகிறது; உடையவர், நூற்றந்தாதியை இயற்பாவோடே—முதலாயிரத்திலே கண்ணிநுண் சிறுத்தாம்பைப்போலே—சேர்த்து, ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ப்ரபந்நகா₃யத்ரியாக நித்யாநுஸந்தே₄யமென்றும்; இந்த அமுதனருக்கும் திருப்பணி செய்வாருக்கும் மட₂மும், திருமாளிகைகளிலே அத்₄யாபக ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு முன்னே ப₃ஹுமாநமும் திட்டம் செய்தருளினர்.

இப்படி கோயில் கைங்கர்யபரரையும், அவரவர்க்கு வ்யவஸ்த்தி₂தமான கைங்கர்யங்களையும் திட்டம் செய்தருளி, ஆழ்வார்களையும் ப்ரதிஷ்டி₂ப்பித்து, அவர்களுக்கு திருநக்ஷத்ர உபலாளநங்களையும் ஸ்ரீபாஞ்சராத்ர ப்ரகாரமாக வ்யவஸ்தை₂பண்ணி; பெருமாளுக்குத் திருவாராத₄நம் நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவ மஹோத்ஸவாதி₃களையும் விஸ்தாரமாக நடத்தியருளி; திருப்பணி ஜீர்ணோத்₃த₄ரணங்களையும் பண்ணுவிக்குமிடத்தில், நித்ய திருவாராத₄நவர்க்க₃ வகை முதலானவைகளுக்கு உதவும்படி, மாடமாளிகைசூழ் திருவீதியில் ஈஶாந்யபா₄க₃த்திலே கோ₃ஶாலையும் கட்டிவைத்து சிறிது பசுக்களையும் அவ்விடத்திலே வைத்து, மற்றை பசுமந்தைகளெல்லாம் வடகரையிலே சோழங்கநல்லூர்

வணிதத்திலேயிருக்கும்படி அஞ்சு க்₃ராமத்தை அழித்து வநமாக்கி அதிலே **ஆநிரைகாத்த பெருமாளை** ப்ரதிஷ்டி₂ப் பித்து, ப்₃ருந்த₃ாவநத்தைப்போலே பசுக்களிருக்கும்படி பண்ணி அகளங்கநாட்டாழ்வான் திருவிடையாட்டச் சீர்மை விசாரிக்குமளவில்; கேவலப₄க₃வத்பரரும் காலக்ஷேபபரரு மாகையாலேயும், தாமும் அடிக்கடி பசுக்களைக் கடாக்ஷிக்க எழுந்தருளுகிறபடியினாலேயும், திருவரங்கத்திலே பெரிய பெருமாளை ப்ரதிஷ்டி₂ப்பித்தருளி, கோயிலிலேயிருந்த வைக₂ாநஸநம்பிமாரை திருவாராத₄நம் பண்ணச்சொல்லி நியமித்தருளினார்.

இந்தப்படி திருவரங்கே₃ஶனாருடைய ஸ்ரீகார்யத்தைக் குறைவற ஆராய்ந்துகொண்டிருக்கச்செய்தே; தாமும் திருக்கோட்டியூர் நம்பி முதலான அஞ்சு ஆசார்யர்கள் ஸந்நிதி₄யிலும் ஸகலார்த்த₂ங்களையும் அறிந்து, அநேகம் ஶிஷ்யரையும் லபி₄த்து, உப₄யகைங்கர்யத்துக்கும் ஆழ்வானையும் ஆண்டானையும் கடவராக்கி, தாம் தி₃க்₃ விஜயம் செய்தருளவேணும் என்று திருவுள்ளம்பற்றி, ஆழ்வானை யாத்ரா ஸஹாயராக்கி, ஆண்டானை ஸ்ரீகார்ய நிர்வாஹகராக்கி, ஆண்டானுக்குச் செங்கோல் ப்ரஸாதி₃க் கும்படி ஸந்நிதி₄யிலே விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் போரவுகந்தருளி 'உமக்குப் பாது₃கையான த₃ாஶரதி₂ நம் வீட்டை ஆராயக்கடவர், நீர் நம்முடைய ஆராமங்களையும் ஒரு ஒருக்கிட்டு நம் த₃ர்ஶநத்தில் களையறுத்து, **'எம்பெருமானார் த₃ர்ஶநமே ஸர்வோத்க்ருஷ்டம்** என்று நாலு திசையிலும் ஜயஸ்தம்ப₄ம் நாட்டி வாரும்' என்று விடைஸாதி₃த்து, ஸகல வரிசைகளையும் ப்ரஸாதி₃த்து, முதலியாண்டானுக்குச் செங் கோல் வரிசையும் ஸாதி₃த்தருளினார். உடையவரும், இந்தப்படி பெருமாள் நியமநத்தினாலே ஆழ்வானுடனே தி₃க்₃விஜய யாத்ரை செய்தருள; முதலியாண்டானும் குறட்டிலேயிருந்து கோயில்கார்யத்தையும், உள்ளேபுகுந்து

கருவுகல வாசலிலேயிருந்து திருமேனி உபசாரத்தையும், ஸந்நிதி₄யிலேயிருந்து திருப்பவள உபசாரங்களையும், உடையவர் நியமநப்படி ஆராய்ந்துகொண்டு, அனைத்தழகும் கண்டருளப்பண்ணிக்கொண்டிருந்தார்.

உடையவரும் பு₃ஹுகாலம் ப்ரத₃க்ஷிணமாக திவ்ய தேசங்களையும் மங்களாஶாஸநம்பண்ணி, அவ்விடத்திலே யிருக்கிற எல்லாரையும் ஸ்ரீ வைஷ்ணவர்களையும் திருத்தி, பஞ்சஸம்ஸ்காராதி₃களையும் ஸாதி₃த்து, அந்தந்த ஸ்த₂லங்களிலே தம்முடைய மட₂மும் முத்₃ரையும் நடத்துவித்து, தி₃க்₃விஜயமும்பண்ணி, ஜயஸ்தம்ப₄மும் நாட்டி, ஸகலதேச ராஜாக்களையும் தத்தத்₃தே₃ஶ வித்₃வான்களையும் திருவடிகளிலே சேரவிட்டுக்கொண்டு, ஶாரதா₃பீட₂த்திலே ஸரஸ்வதியாலே ஸத்க்ருதராய் **'ஸ்ரீப₄ாஷ்யகாரர்'** என்கிற திருநாமத்தை லபி₄த்து, தெற்கே ஆண்டாள் திருமாலிருஞ்சோலை அழகர்விஷயமாக மநோரதி₂த்த அர்த்த₂த்தைத் தலைக்கட்டினபடியாலே **'கோயிலண்ணன்'** என்கிற திருநாமத்தையும் அடைந்து கோயிலேற எழுந்தருள ; கோயிலனைத்துக்கொத்தும் எதிர்கொண்டு ஸேவிக்க; உடையவரும், அவர்களை யதா₂யோக்₃யமாக ப்ரணிபாத ஆலிங்க₃ந குஶலப்ரஶ்நாதி₃களாலே ஸந்துஷ்டராக்கி, கோவிலிலே ஸேவாக்ரமத்திலே ஸேனைமுதலியாரநுமதி கொண்டு ஜயவிஜயாளநுமதியுடன் உள்ளே புகுந்து, பெருமாளை ஆபாத₃வ்ருத்தமநுப₄விக்க ; பெருமாளும், உடையவரைக் கடாக்ஷித்து, 'நம்முடைய ஆராமங்களை ஆராய்ந்து, நம் த₃ர்ஶநத்தையும் களையறுத்து, நாலு தி₃க்கிலும் ஜயஸ்தம்ப₄மும் நாட்டிவந்தீரோ?' என்று அர்ச்சகமுக₂மாக விருது விட்டருளி, தீர்த்த₂ம் முதலான ஸகல வரிசைகளையும் ப்ரஸாதி₃த்து, 'நம்வீட்டுக் காரியத்தையும் ஆராய்ந்துகொண்டு கோயிலிலேதானே இரும்' என்று அருளிச்செய்ய; உடையவரும், 'த₄ந்யோ஽ஸ்மி' என்று கொண்டு மட₂த்திலே எழுந்தருளி, முதலியாண்டானை

அநுக்3ரஹித்து, இற்றை வரைக்கும் சிந்தாமே மங்காமே திருவரங்கச்செல்வத்தை த்3விகு3ணமாக வர்த்தி4ப்பித்து அனைத்தழகும் நடத்திவைத்தபடியைக் கண்டு உகந்தருளி, ஸ்ரீகார்யவிசாரத்திலே அவரையே நியமித்து, பெரிய நம்பி முதலான முதலிகளுடனே புறப்பட்டது முதலாகப் பண்ணின உப4ய கைங்கர்யங்களையும் யதா2வ்ருத்த மருளிச்செய்து, ஸ்ரீ பா4ஷ்யத்தை ஆழ்வானைக்கொண்டு பட்டோலையிடுவித்து நிறைவேறினவுடனே ஸந்நிதி4யிலே விண்ணப்பஞ்செய்ய, தம் மருமகனை நடாதூரம்மாள் கையிலே ஸ்ரீபா4ஷ்ய ஸ்ரீகோஶத்தைக் கொடுத்து ஶாரதா3 பீடத்துக்கு அனுப்பியருள, ஸரஸ்வதியும் அந்த ஸ்ரீ கோஶத்தை ஶிரஸாவஹித்து ஶ்லாகி4த்தவநந்தரம், அந்த நடாதூரம்மாளை நித்யமாக வேத3விண்ணப்பத்திலே கீ3தாபா4ஷ்யமானவுடனே ஶாரீரக பா4ஷ்யத்தையும் விண்ணப்பஞ் செய்யச்சொல்லி நியமித்தருள; அதுமுதலாக, வேத3விண்ணப்பத்திலே ருக்3வேத3ம் முதலாக ஸ்ரீ பா4ஷ்யமும், தாம் செய்தருளின க3த்3யத்ரயத்தையும் ஆண்டானுக்கு நியமிக்க, விண்ணப்பமும் நடந்துவருகிறது.

இப்படி நடக்கிறகாலத்திலே, ஒரு கல்தச்சன், முன்பு கோ3ஶாலை கட்டுகிறபோது ஒரு கல்லின் நடுவிலே தேரையும் தண்ணீருமிருக்கக் கண்டு, ‘கல்லின் நடுவே யிருந்த தேரைக்கு ஜீவநம் கல்பித்த ஈஶ்வரன் நமக்கும் நடத்துவர்’ என்று, தொழிலை விட்டு, ந்யாஸம்பண்ணி, திருமுடிக்குறையிலே நிர்வ்யாபாரனாயிருக்க; அது அவர் அறிந்து, அழகியமணவாளப்பெருமாள் ப்ரதிதி3நமும் இராமாறு திருவொத்த சாதத்தைக் கொண்டுபோய் அவனை பூ4ஜிப்பித்துக்கொண்டிருக்க; காலாவதி4யாலே சில காலத்துக்குப் பின்பு அவன் மரித்த சேதியைக் கேட்டு, உடையவர் ‘இன்றைக்கானலும் அழகியமணவாளப்பெருமாள் வெறுந்தலையுமாய் சோறுசுமவாமல் ஸுக2மாயிருப்பர்’ என்று அருளிச்செய்தார்.

அப்படியே, ஆழ்வான் முதலானவர்கள் பஞ்சகால பராயணராயிருக்குங் காலத்திலே; ஒருநாள் வர்ஷோபாதி$_4$யாலே ஆழ்வான் உபாத$_3$ாநத்துக்கு எழுந்தருளக்கூடாமல் உபவாஸமாயிருக்க; ராத்ரி ஆழ்வானுடைய தே$_3$விகளான ஆண்டாள், திருவொத்த சாதம் அமுது செய்தருளுகிற பெரிய திருமணி ஓசையைக் கேட்டு, பெருமாளைக்குறித்து, 'ஆழ்வான் பட்டினியேயிருக்க தேவரீர் குலாவிக்குலாவி அமுதுசெய்தருளுவதே!' என்று நினைத்தவுடனே, ஒரு ஸ்ரீவைஷ்ணவர், தளிகையிலே திருவொத்த சாதத்தைக் கொண்டு, ஆழ்வானை அழைத்து, 'அடியேன்! அழகிய மணவாளதா$_3$ஸன், பெருமாள் நியமநத்தினாலே ப்ரஸாத$_3$ம் கொண்டுவந்தேன், அங்கீ$_3$கரிக்கவேணும்' என்று சொல்ல; ஆழ்வானும் திகைத்து, ஆண்டாளை அழைத்து, 'என்ன நினைத்தாய்' என்று கேட்க; ஆண்டாளும் தான் நினைத்த படியைச்சொல்ல, ஆச்சர்யத்துடனே 'இது ஸ்ரீப$_4$ண்டா$_3$ரத்திலே க்ரயத்தளிகையாயிருக்குமே' என்று கொஞ்சமாக எடுத்துக்கொண்டு, குறையை அனுப்பிவிட்டு, அதிலே ஆண்டாளுக்கு இரண்டு ப$_4$ாக$_3$மும் தமக்கொரு ப$_4$ாக$_3$மும் ப்ரஸாத$_3$ப்பட்டவநந்தரம், ஆண்டாள் திருவயிறுவாய்த்து, பத்துமாஸமும் சென்றவுடனே இரண்டு குமாரர்கள் திருவவதரிக்க; இச்சேதியை உடையவர் கேட்டு, ஸந்தோஷத்துடனே ஆழ்வானைக்கொண்டு புத்ரோத்ஸவாத்$_3$யுபலாளநங்களைப் பண்ணுவித்து பன்னிரண்டாம் நாள், உடையவர், தாம் ஆளவந்தார் மநோரத$_2$த்தை நிறைவேற்ற வேணும் என்று எம்பாருடன் ஆழ்வான் திருமாளிகைக்கு எழுந்தருளி, எம்பாரை, குழந்தைகளை எடுத்துக்கொண்டு வரச்சொல்லி நியமிக்க, எம்பாரும், குழந்தைகளை எடுத்துக்கொண்டு, த்$_3$வயாநுஸந்தா$_4$நத்துடனே வரக்கண்டு; உடையவரும் 'த்$_3$வயம் பரிமளிக்கிறது' என்று சொல்லி, ஒரு குழந்தைக்கு த$_3$ர்ஶநோபகாரகரான **ஸ்ரீபராஶரப$_4$ட்டப$_4$க$_3$வா**னுடைய திருநாமம் சாத்தி, ஆளவந்தாருடைய மூன்று மநோரத$_2$மும் நிறைவேற்றி, மற்றக் குழந்தைக்கு

ஆழ்வானைக்கொண்டு அவர் திருத்தமப்பனாராகிற சீராமப் பிள்ளை திருநாமம் சாத்துவித்தார்.

இந்தப்படி உடையவர் உப₄யகைங்கர்ய நிர்வாஹக ராய், செங்கோல் செலுத்தி, உப₄யவிபூ₄தியிலும் தம் முடைய சிறுமுறி செலுத்தி, எழுநூறு ஜீயர்களும், பன்னீராயிரம் ஏகாங்கிகளும், எழுபத்துநாலு ஆசார்ய புருஷர்களும், அஸங்க்₂யேய வைஷ்ணவர்களும் ஸேவிக்க, அறுபது சாதுர்மாஸ்யம் திருவரங்கந் திருப்பதியிலே வாழ்ந்துகொண்டிருக்கும் காலத்திலே;

இம்மண்ட₃லாதி₄பதியான சோழன் பாபிஷ்ட₂னாய் ப₄க₃வத்₃வேஷியாய் திவ்யதேசங்களில் கோயில்களை இடிக்கத் தொடங்க; தத்புத்ரன், 'திருவாய்மொழியும் ஸ்ரீராமாயணமும் இரண்டும் திரள அவிசால்யமாயிருக்க, ஒன்றாலே திவ்யதேசங்களை அழிக்கப்போமோ?' என்று சொன்னாலும், து₃ர்பு₃த்₃தி₄யாகையாலே கேளாமல் அப சாரப்பட்டு, தத₃நுகு₃ணமாக குலபாம்ஸனானான். புரோ ஹிதப்ரேரிதனாய், தூ₃ர்ஶஙஸ்த₂ாபநாசார்யரான ஸ்ரீப₄ாஷ்ய காரர் கையிலே 'ஶிவாத் பரதரம் நாஸ்தி' என்று எழுத்து வாங்க உத்₃யோகி₃த்து, கோயிலுக்கு ராஜப₄டாளையனுப்பி வைக்க, அந்த சேதியைக் கேட்டு, உடையவர் நியமநத்தி னாலே, பெரியநம்பி, கோயிலுக்குத் தீங்குவாராதபடி எல்லை யேற்றிக் காப்பிட்டிருக்கிற ஸமயத்திலே, ராஜப₄டாள் எம் பெருமானார் மட₂த்து வாசலிலே வந்து ப்ரபு₄வண்டைக்கு வரச்சொல்லி அழைக்க, உடையவர் நியமநத்தாலே ஆழ்வான் த்ரிதண்ட₃ காஷாயங்களை த₄ரித்து, பெரியநம்பி யுடனேகூட கங்கைகொண்டானுக்கு ராஜப₄டாளின் பின்னே போனார்.

உடையவரும், வெள்ளைசாத்திக்கொண்டு, முதலி யாண்டானையும் கூட்டிக்கொண்டு, பெருமாளை ஸ்வஶக்தி யாலே ரக்ஷித்துக்கொள்ளச் சொல்லி, மேற்கே புறப்பட்டு, பின்துடர்ந்த ராஜப₄டாளை மணலை மந்த்ரித்து வழியிலே

இறைத்துத் தடுத்துப்போகட்டு, மேற்கே மேல்நாட்டிலே எழுந்தருளி. முதலியாண்டான் ஸ்ரீபாத3தீர்த்த2த்திலே சில மதாந்தரஸ்த்த2ரையும், தாம் திருவனந்தாழ்வானாய் ஸஹஸ்ர ஶிரஸ்ஸுக்களுடனேயிருந்து ப்ரஸங்க3ம்பண்ணி அநேக மதாந்தரஸ்த்த2ரையும் ஜயித்து, அத்தேசத்தில் ப்ரபு4க்களை பஞ்சஸம்ஸ்காரராக்கி, யாத3வாத்3ரியை ஜீர்ணோத்3த4ாரணம் செய்தருளி, அந்த திவ்யதேசத்துக்கு 'திருநாராயணபுரம்' என்று திருநாமம்சாத்தி, டில்லிக்கெழுந்தருளி ராமப்ரியரை எழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டு வந்து, அவருக்கு '**செல்வப்பிள்ளை**' என்று திருநாமம்சாத்தி, ப்ரதிஷ்டி2ப்பித்து, தத்ரத்யபாஷண்ட3 பௌ3த்3த4ாதி3களைக் கற்காணமாட்டுவித்து, ஸ்வாமிக்கு * ஐம்பத்திருவரைக் கொண்டு அணைத்தழகும் நடத்திக்கொண்டு, உப4ய கைங்கர்ய நிர்வாஹகராய் எழுந்தருளியிருந்தார்.

இவ்விடத்திலே, பெரியநம்பியும் கூரத்தாழ்வானும் சோழன் ஸமக்ஷத்திலே போய், வேத3ஶாஸ்த்ரங்களினாலே ப4க3வத்பாரம்யத்தை ஸாதி4த்தவிடத்திலே, து3ரபி4மாநத்தாலே 'ஶிவாத் பரதரம் நாஸ்தி' என்று எழுதச் சொல்லி நிர்ப்ப3ந்தி4க்க, ஆழ்வானும், அதை எழுதி, அதின்மேலே 'த்3ரோணமஸ்தி தத: பரம்' என்று எழுதக்கண்ட சோழன் குபிதனாய், இருவரையும் ஆஜ்ஞை பண்ணச்சொல்ல, நேத்ரோத்பாடந வேத3னை ஸஹிக்கமாட்டாமல், பெரியநம்பி திருநாட்டுக்கெழுந்தருளினார். ஆழ்வானும், அந்த 'பாபிஷ்ட2னைக் கண்ட கண்களிருக்கவொண்ணாது' என்று பச்சைக் கருப்பூரத்தைச் சாத்திக்கொண்டு கண்ணையிழந்து,'ப்ராக்ருத ஸ்பர்ஶம் கூடாது' என்று இருக்குமளவில், மது4ராந்தக ஸ்ரீவைஷ்ணவர் ஒருத்தரிருக்க, அவரை ஸஹாயமாக்கிப் பெரியநம்பியையும் ஸம்ஸ்கரித்து, கோயிலுக்கெழுந்தருளி; ஒருநாள் பெருமாளை ஸேவிக்கப்போனவிடத்திலே, ஆரியப4ட்டாள் வாசலிலே ஒருத்தர் 'எம்பெருமானாருக்கு

*** ஐம்பத்திருவராவார்—திருவெள்ளறையிலிருந்து எம்பெருமானாராலே திருநாராயணபுரத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட 52 பூர்வஶிக2 ஸ்ரீவைஷ்ணவ குடும்ப3ங்கள்.**

அந்தரங்க₃ர் உள்ளே போகப்போகாது' என்று நிஷேதி₄க்க, அத்தை ஒருவர் கேட்டு 'ஆழ்வான் மஹா ஸாத்விகர்; உள்ளே போகட்டும்' என்று சொல்ல ; இவ்வார்த்தைகளை ஆழ்வான் கேட்டு, செவியைப் புதைத்து, 'நம்முடைய ஆத்மகு₃ணம் ஆசார்யஸம்ப₃ந்த₄ாபஹாரகத்துக்குறுப்பாவதே!' என்று சடக்கெனத் திரும்பி, திருமாளிகைக்குப்போய், விடிவோறே ஷாண்மாஸ ஶிஶுக்களையும் கூட்டிக்கொண்டு, ஆண்டாளுடன் திருமாலிருஞ்சோலைக்கெழுந்தருளி, அங்கே ஆசார்ய விரஹஶீதராய் எழுந்தருளியிருந்தார்.

அநந்தரம், இந்த வ்ருத்தாந்தத்தை அர்க்₄யப்ரதா₃ந காலத்திலே எம்பெருமானர் கேட்டருளி, அபி₄சாரார்க்₄ய ப்ரதா₃நத்தைப்பண்ண ; திருவேங்கடமுடையான் தம்முடைய திருவாழியாலே அந்த சோழன் கழுத்திலே குத்த, தத்க்ஷணத்திலே வ்ரணம் ஜநித்து, து₃ஷ்பரிஹரமாய் ப₃ஹுவாய் க்ரிமித்து மரித்துப்போனன். அதுமுதலாக, அந்த சோழனுக்கு **க்ரிமிகண்ட₂சோழன்** என்று பேராய்த்து.

தத₃நந்தரம், தத்புத்ரன் ப₃ஹுவாக அநுதப்தனுய், சேரபாண்டியரையும் அழைப்பித்து, மூன்றுபேரும் கோயிலுக்கு வர, கோயிலிலே உடையவர் எழுந்தருளினது முதலாக, கோயில் அரண்மனையாரதீ₄நமாய், கருவுகலம் திருவாப₄ரணப்பெட்டி முதலானதுகளுக்கு உடையவரிலச்சினையில்லாமல் க₃ருட₃முத்₃ரையும் ஶங்க₂முத்₃ரையும் மாத்திரம் நடந்துகொண்டு வருகையில், ஆரியப₄ட்டாள் அந்த ஸமயத்திலே சேர சோழ பாண்டிய முத்₃ரை பெற்றுர்கள்.

அந்த சோழனும், "பூர்விகர் 'தே₃வதா₃யம்' முதலானதுகளை ப்ரபு₄க்கள் விசாரிக்கலாகாது என்று ஒரு ப்₃ராஹ்மணரதீ₄நமாக நடத்திக்கொண்டுவந்தார்களே ; இப்போதும் நம் தகப்பன் து₃ர்வ்ருத்தனுய்ப் பட்ட பாடு கண்டோமே; இப்போது உங்கள் முன்னுகை உடையவரை அழைப்பித்து, தேவஸ்த₂ாநம் என் கைப்பிடியில்லாதபடி அவநுக்கு

தா$_4$ரைவார்த்துக் கொடுக்கிறேன்'' என்று சேரபாண்டியருடனே ஆலோசனைபண்ணி, முன் பெருமாளை ஸேவித்து, மாறொன்றில்லா மாருதியாண்டானை எம்பெருமானார் ஸந்நிதி$_4$க்கு அனுப்பி, தாங்கள் பட்டணங்களுக்குப் போனார்கள்.

எம்பெருமானாரும், திருவரங்கந் திருப்பதியை விட்டு, பன்னிரண்டு வருஷம் திருநாராயணபுரம் ஜீர்ணோத்$_3$தா$_4$ரணம் முதலான கைங்கர்யங்களையும் நிர்வஹித்துக்கொண்டிருந்து, மாறொன்றில்லா மாருதியாண்டான் முக$_2$வசநத்தாலே கோயில் வ்ருத்தாந்தத்தை அறிந்து, தம் திருவடிகளில் ப்ரவணரான ஐம்பத்திருவர் த$_4$ரிக்கும்படி அர்ச்சாவதாரமாகத் தம் ப்ரதியை ப்ரதிஷ்டி$_2$ப்பித்து, அங்கிலும் புறப்பட்டுத் திருமலை வழியாக எழுந்தருளி, திருமலையடிவாரத்திலே தில்லை கோவிந்தராஜனை ப்ரதிஷ்ட்டி$_2$ப்பித்து, தில்லைமூவாயிரவரிலே அநுகூலருக்கு ஆஶ்ரயணாதி$_3$களை ஸாதி$_3$த்துக் கைங்கர்யபரராக்கி, திருமாலிருஞ்சோலையிலெழுந்தருளி, ஆழ்வானையுங் கூட்டிக்கொண்டு கோயிலிலே எழுந்தருளின சேதியைக்கேட்டு, பெருமாள் பரிகரம் அனைத்துக்கொத்தும் ப்ரஸாத$_3$த்துடனே எதிர்கொண்டு பெருமாள் ஸந்நிதி$_4$யிலே அழைத்துவர; பெருமாளும், முன்புபோலே செங்கோல் முதலான வரிசைகளை ப்ரஸாதி$_3$த்து மட$_2$த்தேற அனுப்பியருள; உடையவரும், தமக்கு ப்ரஸாதி$_3$த்த வெள்ளை வகச்சல் குறுமாலைகளிலே, வெள்ளையை ஆண்டானுக்கும், வகச்சலை ஆழ்வானுக்கும் ஸாதி$_3$த்து ஸந்துஷ்டராய், மட$_2$த்திலேயெழுந்தருளின சேதியைக் கேட்டுக்கொண்டு, **குலோத்துங்க சோழனும்** கோயிலுக்கு வந்து, எம்பெருமானாரை ஸேவித்து, கோயிலதி$_4$காரம் தனக்குப் பணியில்லாதபடி தா$_4$ராபூர்வகமாக தா$_3$நஶாஸநம் பண்ணிக்கொடுத்து, '' திருவடிகளிலே ஆஶ்ரயிக்கவேணும்'' என்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும் உகந்தருளி, அந்த சோழனை ஆண்டான் திருவடிகளிலே ஆஶ்ரயிப்பித்து, திருவரங்கந் திருப்பதியை ஆண்

டானுக்கு த$_4$ாராபூர்வகமாக த$_3$ாநஶாஸநம் பண்ணுவித்து, இந்த வ்ருத்தாந்தத்தை ஆரியப$_4$ட்டாள்வாசலிலே ஶிலா லிகி$_2$தம் பண்ணுவித்தார்.

உடையவர் கோயிலுக்கு எழுந்தருளின யோக$_3$க்ஷேமங் கேட்டு, கந்தாடையாண்டான் முதலான முதலிகளும் பெருமாள்கோயிலிலும் கோயிலுக்கெழுந்தருளி, எம்பெருமானார் திருவடிதொழுது ஹ்ருஷ்டரானார்கள்.

உடையவரும், யத$_2$ாபூர்வமாக ஆண்டானைக்கொண்டு ஸ்ரீகாரியத்தை நடத்துவித்துக்கொண்டு வருமளவில், ஒரு மஹோத்ஸவத்தில் த$_3$ாநப்ரகரணத்திலே, உபகாரஸ்ம்ருதியாலே, பெரியநம்பி குமாரருக்கு, மாடமாளிகை சூழ் திருவீதியில் கீழ்மாடத்திருவீதியில் தென்கண்டத்தில் மேல்புறத்தில் ப்ரத$_2$மநிவேஶநமான ஆளவந்தார்மட$_2$த்தையும், ஆழ்வானுக்கு அதுக்கு எதிர்மனையையும், ஆண்டானுக்கு அதுக்குத் தென்மனையையும் த$_3$ானம் பண்ணுவித்து, த$_3$ாந ஶாஸநமாக ஸ்ரீ ஸேநாபதிபட்டையமும் ஸாதி$_3$த்தருளினார்.

இப்படி எம்பெருமானார் முதலிகளுடன் வாழ்ந்தருளி நூறு சாதுர்மாஸ்யாநந்தரம் ஶதாபி$_4$ஷேகமும் கண்டருளி, **'எதிராஜன்'** என்று பேர் லபி$_4$த்து; தம்முடைய ஶிஷ்யரான **ராமாநுஜத$_3$ாஸன்** என்கிற ஶில்பிக்கு ஏகாந்தஸேவை ஸாதி$_3$த்து; யத$_2$ாப$_4$ாவமாக ஸ்வவிக்$_3$ரஹத்தை ஏறியருளப் பண்ணுவித்து, ஸ்வாம்ஶ தி$_3$வ்யஶக்தியை ஆத$_4$ாநம்பண்ணி, **கந்தாடை ஆண்டானைக்**கொண்டு ஸ்ரீ பெரும்பூதூரிலே ப்ரதிஷ்ட்டி$_2$ப்பித்து, பெருமாள் ஸந்நிதி$_4$யிலே தன்னுடைச் சோதிக்கு விடைபெற்று, கந்தாடையாண்டானையும் ப$_4$ட்டரையும் அழைத்து "நம்பெருமாள் கைங்கர்யத்தையும் நம் த$_3$ர்ஶநத்தையும் நன்றாகப் பண்ணுங்கோள்" என்று நியமித்து, பரிஜநங்களை க்ஷாமணம்பண்ணிக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார்.

ஸ்ரீ ஸேநாதி4பதி து4ரந்த4ரரான கந்தாடையாண்டானும், பெருமாள் நியமநத்தினாலே, அகளங்கன் திருவீதியில் தென்கீழ்புறத்தில் சுந்தரபாண்டியன் துலாபுருஷ மண்டபத்திலே எதிராஜனையும் உத்ஸவரையும் ப்ரதிஷ்டி2ப்பித்து, மார்கழிமாஸம் முப்பதுநாளும் பெரியஸந்நிதி4 நம்பிமார் எதிராஜனுக்குத் தளிகை அமுதுசெய்யப் பண்ணவும், திருமொழி திருவாய்மொழித் திருநாளிலேயும் இயற்பாவன்றைக்கும் ஆழ்வார்களுடனே ஸந்நிதி4க்கு எழுந்தருளும்படியும், திருநக்ஷத்ர உபலாளநமும் ஏழுநாளாகப் பண்ணி, திருநக்ஷத்ரத்தினன்று ஆழ்வார்களைப்போலே ஸந்நிதி4க்கெழுந்தருளி, மஹோத்ஸவத்தில் ஸப்தாவரணத்தினன்று தன் திருவாசலிலே திருக்கைத்தலத்திலே பெருமாளை மங்க3ளாஶாஸநம் பண்ணும்படியும் பண்ணுவித்து, பெருமாளுக்கு அனைத்தழகும் கண்டருளப் பண்ணுவித்தார்.

(1) உடையவர் திருவவதரித்த பன்னிரண்டாம் நாள் பெரியதிருமலைநம்பி நாமகரணம் பண்ணினபேர் **இளையாழ்வார்**; (2) ஆஶ்ரமஸ்வீகாராநந்தரம் தேவப்பெருமாள் ஸாதி3த்த பெயர் **எதிராஜன்**; (3) கோயிலுக்கெழுந்தருளின பின்பு பெருமாள் ஸாதி3த்தது **உடையவர்**; (4) ஆத்மகு3ணத்தாலே திருக்கோட்டியூர் நம்பிபக்கல் பெற்றபேர் **எம்பெருமானார்**; (5) உப4யகைங்கர்யத்தினாலேயும் கோதை சூடிக்கொடுத்த நாய்ச்சியார் ஸாதி3த்தபேர் **கோயிலண்ணன்**; (6) ஶாரத3ாபீட2த்தில் ஸரஸ்வதி சாத்தின திருநாமம் **ஸ்ரீப4ாஷ்யகாரர்**; (2) ஸ்வமாஹாத்ம்யத்தினாலே ஶடதாபி4ஷேகம் கண்டருளி லபி4த்த பேர் **எதிராஜன்**; (7) பெரியநம்பி ஸாதி3த்தது **ராமாநுஜன்**; ஆக ஏழு நாமங்களிலேயும், பெரியநம்பியும், பெரியபெருமாளும் ஸாதி3த்த திருநாமங்கள் இரண்டுமே பட்டப்பேராய், அருளப்பாடு ஸாதி3க்கிறது.

ப4ட்டர் வைப4வம்

அநந்தரம், ப4ாஷ்யகாரர் நியமநத்தினாலே ப4ட்டர் த3ர்ஶநம் நிர்வஹிக்கிற காலத்திலே; உடையவர் நியம

நத்தை அடியொற்றிக்கொண்டிருக்கிற பெருமாள், ப₄ட்டருக்குத் தம் வரிசைகளை ஸாதி₃த்து 'வேதா₃ந்திகளை ஜயித்து நம் த₃ர்ஶநத்துக்கு ஆட்பண்ணும்' என்று நியமித்து, விடை ஸாதி₃க்க; வரிசையுடன் புறப்பட்டு, வேதா₃ந்திகளை ஜயித்துவர; வேதா₃ந்திகளும் ஸம்ஸாரத்தில் அருசியாலே ஸந்யஸித்து, கு₃ருகுலவாஸம் பண்ணும் காலத்திலே, திருவிக்கிரமன் திருவீதித்திருமதிள் கேவலம் ஜீர்ணமாய்ச் சரிந்துவிழ, வீரஸுந்த₃ர ப்₃ரஹ்மராயர் அந்த மதிளைக் கட்டிவைத்தார்.

அதின்பின்பு, வேதா₃ந்திகளான நஞ்சீயரும் ப₄ட்டரும் த₃ர்ஶநம் நிர்வஹித்துக்கொண்டிருக்கும் காலத்திலே; திருவரங்கவள்ளலார் திருமஞ்சந ஶ்லோகம் விண்ணப்பம் செய்கிறதுக்கு நாநாவித₄மாக உத்ப்ரேக்ஷித்து, ஶ்லோகங்களும், அதுக்கு ஈடுகளும் அருளிச்செய்து, கைஶிக புராணத்துக்கும் ஈடும் அருளிச்செய்து, ஒரு கார்த்திகை மாஸத்தில் கைஶிக த்₃வாத₃சியினன்று புராணத்துக்கு அருளப்பாடு ஸாதி₃த்து, பட்டும் பருத்தியும் முதலான வரிசைகளை ஸாதி₃த்தவுடனே, தாமருளிச்செய்த ஈட்டுடனே புராணத்தை விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் போர உகந்தருளி 'நம் ப₄ட்டனை மேல்வீட்டில் விட்டுவா' என்று கொவணவனை நியமித்தருள; ப₄ட்டரும் உகப்புடனே முன் போலே ப்₃ரஹ்மரத₂த்திலே திருமாளிகையிலே ஸகல வரிசைகளுடனே எழுந்தருளி, ப்₃ரஹ்மரந்த்₄ரத்தை பே₄தி₃த்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினர்.

சீராமப்பிள்ளை வைப₄வம்

அநந்தரம், அவருடைய திருத்தம்பியார் சீராமப்பிள்ளை பௌரோஹித்யமும் புராணபட₂ந கைங்கர்யமும் பண்ணிக் கொண்டிருந்தார்.

கூரநாராயணஜீயர் வைப₄வம்

நஞ்ஜீயர் த₃ர்ஶநம் நிர்வஹித்துக் கொண்டிருக்கிற காலத்திலே; விண்ணப்பஞ் செய்வாரிலே ஒருத்தர் பெரு

மாள் ஸங்நிதி₄க்கு யோக்₃யமாகாமலிருக்க; ஆழ்வானுடைய தே₃விகள் ஆண்டாள்-அவரிடத்தில் க்ருபையாலே, ஆழ்வான் திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளியிருக்கச்செய்தே, ஆழ்வான் திருவடிகளிலே ஆம்ரயித்து ஸங்யஸித்து, ஆசார்யன் குடியை நிருபகமாகக் கற்ற '**கூரநாராயணஜீயர்**' என்று திருநாமத்தையுடையவராய், மஹாமாந்த்ரிகராய், கோயில்வாஸம் பண்ணிக்கொண்டிருக்கிறவரை அழைத்து, 'உம்முடைய மந்த்ரங்களும் ஒரு கைங்கர்யத்திலே உபயோகி₃க்கும் என்று சொல்லியிருந்தீரே! நீரிப்போது இந்த விண்ணப்பஞ் செய்வாரைப் பெருமாள் கைங்கர்யத்துக்கு யோக்₃யராம்படி பண்ணும்' என்று நியமிக்க, அந்தக் கூரநாராயணஜீயரும், ஸுத₃ர்ஶநஶதகத்தைப் பண்ணினர். தத்காலத்திலேயிருந்த அரையரிலே ஒருத்தர், கேவலம் தூ₄ர்த்தராய், சிற்றின்பத்திலே மண்டி, கீழ்ப்பறைச்சேரியிலே திரிய; தெரியச் சொன்னாலும் கேளாமல் ஸ்வஜநங்களாலே நிரஸ்தராய், பறைச்சேரியிலேதானே நியதமாக வாஸம்பண்ணிக் கொண்டிருக்குங் காலத்திலே: பெருமாள் ஒரு மஹோத்ஸவத்திலே எட்டாந்திருநாள் கீழையூருக்கு எழுந்தருளுகிறதாக, அக்கரை நாலுகால் மண்டபத்திலே எழுந்தருளியிருக்க; இவர் பறைச்சேரியிலேயிருந்து பள்ளும்பறையும் இசையுடனே பாடக் கேட்டருளி; பெருமாள் ஸ்ரீபாத₃ம் தாங்குவாருக்கு கு₃ருவாயிருந்துகொண்டு பறைச்சேரியிலேயிருக்கிற அரையரை ஸங்நிதி₄க்கு அழைத்துவரச்சொல்லி நியமித்தருள; அவரும் வருகிறதுக்கு ஸங்கோசித்திருக்க; அனைத்துக்கொத்து பரிகரங்களும் ஜீயர்களும் ஸ்ரீவைஷ்ணவர்களும் ஸங்க₃தராயிருக்க; பெருமாளும் தம் விஷயீகாரம் ப்ரஸித்₃த₄மாம்படி அவருக்கு '**வரந்தரும் பெருமாளரையர்**' என்று பட்டப்பேர் ஸாதி₃த்து, அவர் ஸகலருக்கும் ஸர்வாபீ₄ஷ்டங்களும் அப்போது வரங்கொடுக்கும்படி அநுக்₃ரஹித்தருளி; அவருக்கு விஷயவைலக்ஷண்யத்தை உண்டாக்கி, பரிஶுத்₃த₄ராக்கி, திருவூறல் நடந்து திரும்பி எழுந்தருளுகிறபோதும் ஏழாந்திருநாள் (பெருமாள்) நாய்ச்சியார்

கோயிலும் கோயிலுக்கு எழுந்தருளுகிறபோதும் அவர் பாடின பள்ளும் பறையும் இசையிலே கேட்டருளும்படி திருவுள்ளம்பற்றி; அந்தப்படியே செய்யச் சொல்லி நியமித்தருளினர். அது முதலாக அரையருக்கு **வரந்தரும் பெருமாளரையர்** என்கிற பட்டப்பேரும் சென்று வருகிறது. ஆக, நாலு பட்டப்பேர் அரையருக்கு.

இந்தப்படி பெருமாள் அரையரை அநுக்₃ரஹித்தருளி வாழ்ந்தருளுங் காலத்திலே, மேற்கே ஸ்ரீரங்க₃பட்டண ப்ரபு₄ ப்ரேரிதனாய் ஒரு க்ஷுத்₃ரமுண்டான ஸந்யாஸி, பெரியபெருமாளை ஸ்ரீரங்க₃பட்டணத்துக்குக் கொண்டுபோகிறதாக அத்₃ருஶ்யாஞ்ஜநத்தைப் போட்டுக்கொண்டு ஒருத்தருக்கும் தெரியாமல் ப₃லிபீட₂த்தில் ப்ரஸாத₃த்தை எடுத்துக்கொண்டு தே₃ஹத₄ாரணம்பண்ணி மந்த்ரஶக்தியாலே பெரியபெருமாளைத் திருவனந்தாழ்வான் திருப்படுக்கையிலும் நாலு அங்கு₃லம் சலிப்பிக்க; மூலப்₄ருத்யரும் நம்பிமாரும் உள்ளூராரும் கண்டு அனைவருடன் உரைக்க; கூரநாராயண ஜீயரும், சேதியைக் கேட்டு, உபாயமாகச் சோதிக்குமளவில்; ப₃லிபீட₂த்தில் ப்ரஸாத₃ம் அத்₃ருஶ்யமாய்ப் போகிறபடியினாலே; ஒருநாள் ப₃லிப்ரஸாத₃த்திலே கடுகும் மிளகும் கலந்து சேர்த்து ப₃லிப்ரஸாத₃ம் பண்ணுவிக்க; அதையறியாமல் அந்த க்ஷுத்₃ர ஸந்யாஸி எப்போதையும் போலே அந்த ப்ரஸாத₃த்தை ப₄க்ஷிக்க, அழல்வேக₃த்தாலே கண்ணிலே நீர்சொரிந்து அஞ்ஜனம் கரைந்து வெளிப்பட்டான். அநந்தரம் கூரநாராயணஜீயரும் அந்த ஸந்யாஸியை ப₃ஹுப்ரலோப₄நம்பண்ணி, கருவுகலத்தில் ப₃த₃ார்த்த₂ங்களைக் காண்பித்து ஸமாத₄ாநங்களாலே வஶீகரித்து, பெருமாளை யத₂ாஸ்தி₂தமாக மந்த்ரஶக்தியாலே எழுந்தருளப் பண்ணுவித்து, கருவுகலத்திலே அவனுக்கு வேண்டின வஸ்த்ராப₄ரணாதி₃களைக்கட்டி அந்த ஸந்யாஸியின் பின்னே ஆள்கள் கையிலே அனுப்பி, கூட வழித்துணையாக நாலு ஜட்டிகளை அனுப்பி, வக்தவ்யாம்ஶத்தை அவர்களுடன்

சொல்லியனுப்பிவைக்க ; ஸந்யாஸியும், அவர்களுடன் புறப் பட்டு, ஜாக்3ரதையாய்ப்போய், அப்புறம் நிர்ப4யனாயிருக்க; இந்த ஜட்டிகள் நாலுபேரும், அவன் அஶுசியாயிருக்கிற ஸமயத்திலே சடக்கென அவனை வதி4த்து, வஸ்த்ராப4ரணாதி3 களை யதா2பூர்வமாக கருவுகலத்தில் முதலிடுவித்தார்கள்.

கீழையூரிலே சைவம் விஞ்சி, பெருமாள் எட்டாந் திருநாளுக்கு அகி2லாண்டே3ஶ்வரிக்கு ஸேவைஸாதி3த்து ஜம்பு3 தீர்த்த2த்திலே திருவடிவிளக்கி, கிழக்கே உத்தம ஶீலிக்கு வடக்கே திருமங்கைமன்னன் திருத்தோப்புக் கெழுந்தருளுகிறதுக்கு க்ரிமிகண்ட2ன் நாள்முதலாகச் சேஷ்டை பண்ணுகையில் ; "அவர்களை நிரஸிக்கவேணும்" என்று இந்தக் கூரநாராயணஜீயர் அவர்களுடனே மருவி ஸ்நேஹம்பண்ணி, புரையறக் கலந்து, அந்த சைவர் விஶ்வ ஸித்தபின்பு, அவர்களுக்கு "மஹேஶ்வர பூஜை பண்ணு கிறோம்" என்று கிழக்கே காட்டழகியசிங்கர் கோயிலுக்குப் பின் வெளியிலே பெரியதாகச் சாலையும் நிரைச்சலும் கட்டிவைத்து, அதிலே பாகயத்நத்தைப் பண்ணுவித்து, பெரியதாக ஒரு கொப்பரையிலே நெய்யையும் காய்ச்சி வைத்து, சைவர்களனைவரையும் அழைப்பித்து, அவர்க ளனைவரும் சாப்பிடவிருந்தவுடனே, தாமும அந்தக் காய்கிற நெய்க் கொப்பரையிலே நரஸிம்ஹயந்த்ரத்தை மார்பிலே கட்டிக்கொண்டு குதிக்கிறபோது, அந்த ஶைவரனைவரும் தீய்ந்து ப4ஸ்மமாய்ப் போனார்கள்.

இதுவும், ஒருகால விஶேஷத்திலே பதினெட்டாம் பெருக்குக்குப் பெருமாள் எழுந்தருளி, முன்நடந்தபடி திருப்பள்ளி ஓடத்திலே ஏறியருளி, திருப்பள்ளிஓடத் திருநாள் கண்டருளுகையில் ; க்ஷுத்3ர மந்த்ராக்ருஷ்டராய் நடுத் திருக்காவேரியிலே ப்ரவாஹத்துடனே எழுந்தருள ; அச்சேதியைக் கேட்டு, கூரநாராயணஜீயரும், தம்முடைய கையில் வலயபவித்ரத்தை வலமாகத் திருப்ப ; பெருமாள் திருப்பள்ளி ஓடமும் ப்ரவாஹத்துக்கெதிரே நிலையிலே

யெழுந்தருளி, நாய்ச்சியாரும் பெருமாளும் ஸுக$_2$மாகக் கோயிலிலே எழுந்தருளினர்.

ப்ரதிஸம்வத்ஸரமும் திருக்காவேரி பெருக்குவந்தால் திருக்குறளப்பன் ஸந்நிதி$_4$யும் முழுகிப்போய், கோயிலிலேயும் ஜலம் வருகையில், இச்சேதியை இந்த தே$_3$ஶாதி$_4$பதியான ப்ரபு$_4$வுக்கும் அறிக்கைபண்ணி, ஸ்ரீஸேநாபதி து$_4$ரந்த$_4$ரரான கந்தாடைதோழப்பருடனேயும் ஆலோசனைபண்ணி, மேற்கே புந்நாக$_3$ தீர்த்த$_2$த்தின் தெருவுக்கு முதலாகத் தெருக் கடைசி திருக்காவேரியை வெட்டிவிடுமளவில், சிந்தாமணி ப்$_3$ராஹ்மணர் தங்களூரெல்லையிலே வெட்டவொட்டோம் என்று குறுக்கே படுத்துக்கொண்டு, ப்ரதிப$_3$ந்த$_4$கம் பண்ணுகையில், அவர்களுக்கு "பெருமாள் கைங்கர்யம்" என்று எத்தனையாகத் தெரியச் சொன்னாலும், கேளாத படியாலே, அந்த ப$_4$க$_3$வத்கைங்கர்ய விரோதி$_4$களை அறப் பார்த்து, திருக்காவேரியையும் தெற்கே திருப்பி, திருமுடிக் குறை விப்ரநாராயணன் தோப்புக்குக் கிழக்கு முதலாகத் திருவரங்கந் திருப்பதிக்கு இருபுறமும் கரையும் போடுவித்து, அதிலே அணியரங்கன் வாய்த்தலையும் கட்டுவித்து, அந்தக் கரையிலே புந்நாக$_3$ தீர்த்த$_2$த்துக்கு ஆக்$_3$நேயப$_4$ாக$_3$த்திலே உடைப்பு எடுக்கிற ஸமயமாயிருக்கையில், தம்முடைய ஶிஷ்யனை **கருணாகரத$_3$ாஸனை** அங்கே காவலாகவைத்து, அவனை அறப்பார்ப்பித்து; அதுக்கு வடக்காக, ரக்ஷையாக க்ஷுத்$_3$ரதே$_3$வதையையும் ப்ரதிஷ்டி$_2$ப்பித்து, கோயிலுக்கு ரக்ஷையாக க்$_3$ராமதே$_3$வதையான **திருவரங்கச்செல்வியையும்** ப்ரதிஷ்டி$_2$ப்பித்து, கீழ்ப்புறம் ப$_4$த்$_3$ரம்பண்ணி, இந்தப்படி க்ஷுத்$_3$ருருடைய க்ருத்ரிமங்களுக்கு அவகாஶமில்லாதபடி அரணைப்பண்ணி; கோயிலுக்கு மேற்கே பெரியதாக ஒரு ஊரணியை வெட்டுவித்து, அதிலே திருப்பள்ளி ஓடத்திருநாள் நடத்தும்படி பண்ணிவைத்து; கீழையூர் ஜம்பு$_3$லிங்க$_3$த்துக்கு நேராகக் **கரைஅழகியசிங்கரை** ப்ரதிஷ்டி$_2$ப்பித்து, தச்ச$_2$க்தி அபி$_4$பூ$_4$தமாம்படி பண்ணி; கோயிலிலே ஒருத்தரும் குடியிராதபடி யந்த்ரஸ்த$_2$ாபநம்பண்ணி, ஜ்வரத்தை

யுண்டாக்கி; கோயிலிலே ராஜமஹேந்த்₃ரன் திருவீதியிலே கீழண்டையிலே திருமண்டபம் ஜீர்ணோத்₃த₄ாரணம்பண்ணி, சித்ரங்களை எழுதுவிக்குமளவில்; சுவரிலே ஸ்ரீராமாயணம் யுத்₃த₄காண்ட₃ம் எழுதியிருக்கையில், அந்த ப்ரதிமைகள் யதா₂ஶாஸ்த்ரமாக இருந்தபடியாலே ராத்ரி நித்யமாக யுத்₃த₄ங்கள் ப்ரவ்ருத்தங்களாய் விடிவோறே ரக்தமாம்ஸாதி₃கள் விழுந்திருக்கக்கண்டு, அங்க₃ப₄ங்க₃ாதி₃களைப் பண்ணிவைத்தும்; அந்தத் திருவீதியிலே, உறையூர் கமலவல்லி நாய்ச்சியாரையும், சாந்துநாய்ச்சியாரையும், சேரகுல வல்லிநாய்ச்சியாரையும், யாக₃ ஶாலையிலே கோ₃பிநாத₂ரையும், ஶங்க₂நிதி₄ பத்₃மநிதி₄யையும், அந்தத் திருவாசல் வெளிப்புறத்திலே ப₄த்₃ரஸுப₄த்₃ரரையும், ஜீர்ணோத்₃த₄ாரணம் பண்ணுவித்து; குலஶேக₂ரன் திருவீதியிலே சேனை வென்றான் திருமண்டபத்துக்கு மேற்கு துலாபுருஷ மண்டபத்திலே ஸ்ரீவராஹநயினாரையும், அதுக்கு வடக்குத் திருமங்கையாழ்வார் திருநடைமாளிகையிலே வஸந்த கோ₃பாலனையும், ஹயக்₃ரீவரையும்; தெற்கில் ஆரிய ப₄ட்டாள் வாசலுக்குக் கிழக்கே சுந்தரபாண்டியதேவர் துலாபுருஷ மண்டபத்திலே, குழலூதும் பிள்ளையையும், அந்தாதி எம்பெருமானையும், ஆலிநாடன் திருவீதியில் சந்த்₃ரபுஷ்கரணிக்கரையிலே கோ₃விந்த₃னையும், வேத₃வ்யாஸரையும், ஞானப்பிரானையும்; அகளங்கன் திருவீதி வடக்குத் திருவாசலுக்குக் கிழக்கே, எடுத்தகை அழகிய நயினாருக்கு நாய்ச்சியாரையும், எதிராஜன் கோயிலுக்கு வடக்கே, திருவாழியாழ்வானுக்கு எதிராக பார்த்த₂ஸாரதி₂யையும், சக்கரவர்த்தித் திருமகனுக்கெதிராக விட்டலேஶ்வரனையும் ப்ரதிஷ்டி₂ப்பித்தார்.

இப்படி இந்தக் கூரநாராயணஜீயர், தே₃ஶாந்தரி ஜீயராயிருந்து அநேகம் ப்ரகாரம் கோயிலை நிர்வஹித்து அபி₄மாநியாயிருக்கிறபடியினாலே, ஸ்தூ₂லத்திலே அனைத்துக் கொத்து பரிஜநங்களும், "இப்படி அபி₄மாநியான ஜீயர்

நமக்குத் தலைவராய் அதீ$_4$நபரராயிருக்கவேணும்'' என்று ஆலோசனைபண்ணி, எம்பெருமானார் நியமநத்தையும் அதிக்ரமிக்கமாட்டாதேயிருக்கும் காலத்திலே; கந்தாடை யாண்டான் பௌத்ரர் பெரியஆயி யாக$_3$ம்பண்ண, அந்த யாக$_3$ஶாலைக்குப் பெருமாள் எழுந்தருள, ஆயியும் ஹ்ருஷ்ட ராய், தம்முடைய ஸர்வஸ்வத்தையும் பெருமாளுக்கு ஸமர்ப் பிக்க; அநந்தரம் ஒரு உத்ஸவகாலத்திலே, பெருமாள் முதலியாண்டானுக்கு உத்தரம்ஸாதி$_3$த்த ஸேநாபதிபட்டைய மும், சேரன் ஸமர்ப்பித்த த$_3$ாநஶாஸநமும், த$_3$ாநபூர்வகமாக அந்த ஆயிக்கு ப்ரஸாதி$_3$த்து, தத$_3$தீ$_4$நமான உடையவரிலச் சினையான திருவாழி மோதிரத்தையும், ஆயி ஸம்மதி யுடனே அனைத்துக்கொத்து பரிகரமும் கூரநாராயண ஜீயருக்கு ஸந்நிதி$_4$யிலே ப்ரஸாதி$_3$க்கும்படி பண்ணி, ஜீயரை மட$_2$த்திலே விட்டு வந்தார்கள்.

அதுமுதலாக, **கூரநாராயணஜீயர்** ப$_4$க்த்யதிஶயத்தாலே **நலந்திகழ் நாராயணஜீயராயிருந்தவருக்கு ''ஸ்ரீரங்க$_3$நாராயண ஜீயர்''** என்று திருநாமமாய்த்து. இந்த ஸ்ரீரங்க$_3$நாராயண ஜீயர் கைங்கர்ய விவரம்:—செங்கோல் த$_4$ரித்து ஸ்ரீகார்யம் நிர்வஹிக்கிற கோவணவர் கைங்கர்யத்திலே பிரித்துக் கட்டுகிறதுக்கு விவரம்;—திருமஞ்சநத்துடனே கருவுகல வாசலிலே வந்து, அஞ்சநக்காப்பு முதலான ஸுக$_3$ந்த$_4$ாதி$_3$ களைத் திருத்திவைத்து,நாய்ச்சியார்கோயிலுக்கு அனுப்புகிற அஞ்சநக்காப்பு முதலான ஸுக$_3$ந்த$_4$ங்களுக்குத் திருவாழி யிலச்சினையிட்டு, ஸந்நிதி$_4$யிலே புகுந்து திருவாராத$_4$நம் நடப்பித்து, அலங்காராஸநார்த்த$_2$ம் ஸந்நிதி$_4$யிலேயிருந்து, கஸ்தூரித் திருமண்காப்பு அஞ்சநக்காப்பு சாத்தியருளின பின்பு, நாய்ச்சியார் கோயிலுக்குப்போய், அங்கேயும் திருவாராத$_4$ந காலத்திலே இலச்சினைப்படியேயிருக்கிற அஞ்சநக்காப்பு கஸ்தூரித் திருமண்காப்பு ஆனவுடனே, வெளியிலே புறப்பட்டு எழுந்தருளுகிறதும், புழுகாப்புச்

சாத்துவிக்கிறதும், குறுக்காவரணத்துக்குப் பின்பு கோவணவரில் ப்ரத₄ாநராய் மட₂த்திலேயிருந்து நிறைவுகுறைவு விசாரிக்கிறதும் கைங்கர்யம்.

இவர் பேர் விவரம்:—பெருமாள் புறப்பட்டுத் திருவணுக்கன் திருவாசலுக்கு மேற்கே திரும்பினவுடனே ஸேவிக்க, தீர்த்த₂மும் பரிவட்டமும் ஒரு திருமாலையும் ஸ்ரீஶட₂ கோபனும் ஸாதி₃த்து, பின்பு செங்கோலதி₄காரிக்கு ஸேனை முதலியார் வாசலிலே, அன்றியிலே அங்கேதானே, வரிசைகளை ஸாதி₃க்கும்படி பண்ணியும், நித்யமாக செங்கோலுக்கு முன்னே ஸேனைமுதலியார் ஸந்நிதி₄யிலே, ப்ரஸாத₃ஸ்வீகாரம் பண்ணுவிக்கிறதும், தீர்த்த₂ விநியோக₃த்திலும் ப்ரஸாத₃ விநியோக₃த்திலும் செங்கோலுக்குமுன்னே **ஸ்ரீரங்க₃ நாராயணஜீயர்'** என்று அருளப்பாடு ஸாதி₃த்து விநியோக₃ம் ஸாதி₃க்கிறதும், தே₃ஹத₄ாரணத்துக்கு ஸேனைமுதலியார் ஸந்நிதி₄யிலே ப்ரஸாத₃ஸ்வீகாரம் ஸாதி₃க்கிறதும், கோயில் ஸ்ரீகார்யங்களிலே 'ஸேநாபதிது₄ரந்த₄ரரான ஸ்ரீரங்க₃ நாராயணஜீயர்' என்று திருமுகமெழுதுகிறதும் நூதநமாகையாலே; அநாதி₃யாய் திருமொழித் திருநாளிலே திருமாலை அபி₄நயத்திலே 'அரங்கனுர்க்காட்செய்யாதே' என்கிற ப்ரகரணத்திலே, ப்ரத₂மம், ஸ்ரீஸேநாபதிது₄ரந்த₄ரரான கோவணவர் கைங்கர்யத்தை அபி₄நயிக்கிறதிலே, செங்கோல் த₄ரித்து ஸ்ரீகார்யம் விசாரிக்கிற ப்ரகாரத்தை அநுஸரிக்கிறதேயல்லாமல், நூதநமான ஸ்ரீரங்க₃நாராயண ஜீயரை அநுஸரிக்கிறதில்லை.

இந்த ஸ்ரீரங்க₃நாராயண ஜீயர் பட்டம் ஸ்த₂லத்தாரால் உண்டாக்கினபடியாலே, அதீ₄நபரம்பரையாய் வருகையன்றிக்கே, ஜீயர் திருநாட்டுக்கெழுந்தருளினவுடனே, திருவாழி மோதிரமும் மட₂மும் ஸ்ரீப₄ண்ட₃ாரத்திலே சேர; பரிகரங்களும், அதுக்குப் பின்பு ஸ்த₂லத்திலே அனைவரும் ஸம்மதித்து, ஒரு ஜீயரை "ஸ்ரீரங்க₃நாராயணஜீயர்" என்று ஸந்நிதி₄யிலே அவர் வரிசையை ஸாதி₃த்து, திருவாழி மோதிர

மும் ஸாதி3த்து, மட2த்திலேயும் கொண்டுபோய் விட்டு, அங்கிவாரண ஸ்ரீப4ண்டா3ரத்திலே செலவழிக்கிறதாக நடந்தது.

துலுக்காவணத்துக்குப் பின்பு, காலவிஶேஷத்திலே, உத்தமர்கோவில் ஸ்ரீரங்க3ராஜர் ஸ்ரீரங்க3நாராயணஜீயராய், வாசாலகராகையாலே மட2த்துக்கு ஸ்ரீரங்க3ராஜர் திருவாராத4னமுண்டுபண்ணி, அதீ4நம் ஸ்ரீப4ண்டா3ரமாகையாலே, ஸ்ரீரங்க3ராஜர் திருவாராத4நத்துக்குத் திருக்கொட்டாரத்திலே அமுதுபடி, நெய்யமுது, திருவிளக்கெண்ணெய், பாலமுதுக்குப்பசு, அதுக்குத் தவிடு முதலானதுகளுமுண்டாக்கிக் கொண்டு பற்றினர். கோயில் பரிஜநங்களில், ஶூத்3ரக் கொத்துக்கு ஆஶ்ரயணமும் ஸாதி3த்துக்கொண்டுவந்தார்.

ஸ்த2லத்தாரனைவரும் கல்பித்த கட்டளைப்படிக்கு, உடையவர் நடப்பித்த ஸம்ப்ரதா3யநுகு3ணமாகக் கொத்துக்கு நிர்ணயமும், ஜீயர் ஏகாங்கி வ்யவஸ்தை2யும், இவர்களுக்குக் கைங்கர்யமும், திருமுகப் பட்டையமாக த4ர்மவர்மாவின் திருமதிளிலே திருவணுக்கன் திருவாசலுக்கு மேற்கே ஶிலாலிகி2தம் பண்ணுவித்தார்கள்.

பெரியாயி, சிறியாயி வைப4வம்

முதலியாண்டான் பௌத்ரரான கந்தாடைதோழப்பர் ஸ்ரீகார்யம் நிர்வஹிக்கையில்; அவர் குமாரரான பெரியவரத3ாசார்யர் சின்னவரத3ாசார்யர் இருவரும், ஜ்ஞாநப4க்தி வைராக்3ய நிஷ்ட2ர்களாய், அழகியமணவாளப்பெருமாள் திருமேனி கைங்கர்யம் திருப்பவள கைங்கர்யங்களை ஆராய்ந்துகொண்டு, நித்யம் பாலமுது காய்ச்சி அமுதுசெய்யப் பண்ணுகையில்; ஒருநாள் ராத்ரி சின்னவரத3ாசார்யர் பாலமுது காய்ச்சிப் பெருமாளுக்கு அமுதுசெய்யப் பண்ணி, பெரியவரத3ாசார்யருக்குக் காட்டியருள; அவரும், அந்தப் பாலிலே த்ருணமிருக்கக்கண்டு, ‘இது பெரிய பெருமாள் திருமிடற்றில் குத்தும்’ என்று தொண்டை விக்கி மோஹிக்க; சின்னவரத3ாசார்யரும், அது கேட்டு

மூர்ச்சி$_2$த்து, க்ரமத்திலே மோஹம் தெளிந்தவாறே, பெரிய பெருமாள் ப்ரஸந்நராய் இருவருக்கும் மாத்ருபா$_4$வநையாக **"பெரியாயி, சிறியாயி"** என்று திருநாமம் ஸாதி$_3$த்தார். சில காலத்துக்குப் பின்பு, ராஜகோபத்தாலே பெரியாயி அதீ$_4$நம்விட்டு, திருமழிசைக்கு எழுந்தருள; கந்தாடை தோழப்பரும், பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளினர்.

ஈயான் ராமாநுஜாசார்யர் வைப$_4$வம்

சிலகாலத்துக்குப் பின்பு, தே$_3$வப்பெருமாள், கந்தாடை தோழப்பர் ஸ்வப்நத்திலே, ஶ்லோகஷட்கத்தாலே 'உம்முடைய மூன்றும் குமாரராலே ஸ்த$_2$லம் சேரப்போகிறீர்'என்று நியமிக்க; பின்பு, ஒருகாலத்திலே பெரியாயி திருவடிகளிலே அபசாரப்பட்ட கலிகாலசோழன் மாண்டு, சோழப்பட்டங்கள் குலைந்து, பஞ்சதிருவடி முத்துக்ருஷ்ணராஜா ராஜ்யம் பண்ணுகையில், அழகியமணவாளப்பெருமாள் அவன் ஸ்வப்நத்திலே, 'நம் கார்யம் பார்க்கைக்கு தே$_3$வப்பெருமாள் ஸந்நிதி$_4$யிலே போயிருக்கிற தோழப்பர் குமாரர் ஈயானை அழைப்பித்து,முதலியாண்டானதீ$_4$நத்தைத் தத$_3$தீ$_4$நமாக்கும்' என்று சொல்லி நியமித்தபடியினாலே, அவனும் அவரை அழைப்பித்து, அவர் ஶிஷ்யனாய், பூர்வப்ரகாரம் எல்லாவற்றையும் அவரதீ$_4$நம் பண்ணினான். அந்த **ஈயான் ராமாநுஜாசார்யரும்**, வாதூ$_4$லதே$_3$ஶிகராய் அநேக கோ$_3$புர ப்ராகார மண்டபங்களை ஜீர்ணோத்$_3$தா$_4$ரணம் பண்ணி, ஸ்வாமிக்கு நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவாதி$_3$களையும் திருமேனி திருப்பவளோபசாரங்களையும் ப$_4$யப$_4$க்த்யதிஶயத்தோடே நடத்திக்கொண்டு கார்யம் நிர்வஹித்தார்.

எம்பெருமானடியான் கோயிலைக்காத்தது

அவர் குமாரர் **திருக்கோபுரத்துநயினார்**, நரஸிம்ஹராஜா துரைத்தனத்தில், ப$_3$ஹூகாலம் ஸ்ரீகார்யம் நிர்வஹித்தார். அவர் இரண்டாம் குமாரரான **சிற்றண்ணர்**, வாதூ$_4$ல தே$_3$ஶிகபத$_3$ நிர்வாஹகராய்,ஸ்ரீரங்க$_3$ ஸ்ரீகார்ய து$_4$ரந்த$_4$ரராய்,

பஞ்சதிருவடி கேஶவராஜாவைத் தொட்டு ஸ்வாமிக்கு அனைத்தழகும் கண்டருளப்பண்ணி, அநேக கைங்கர்யங்களையும் பண்ணிக்கொண்டிருந்தார். பின்பு, அவர் குமாரர் **ஸ்ரீரங்க$_3$ராஜநாத$_2$ன் வாதூ$_4$லதே$_3$ஶிகர்**, பஞ்சதிருவடி வீரப்பராஜாவாலே, அழகியமணவாளப்பெருமாளுக்கு அநேக கைங்கர்யம் நடப்பித்துக்கொண்டு, ஜ்ஞாநப$_4$க்தி வைராக்$_3$யாதி$_4$கராய், ஸ்ரீகார்யஸ்ரீயைச் சிந்தாமல் மங்காமல் பொங்கும்படி ஸகலோபசார வரிசைகளும் நடப்பிக்க; ஸ்ரீரங்க$_3$ஸ்ரீயும் தினந்தினம் வ்ருத்$_3$தி$_4$யடைந்துவர; ஸ்ரீரங்க$_3$ராஜநாத$_2$னும் ப$_3$ஹுகாலம் அநபத்யராய், 'ஸ்ரீகார்யநிர்வாஹத்துக்குப் பின்னுக்கு ஒருத்தருமில்லை' என்று விஷண்ணராயிருக்க; ப$_4$க$_3$வத$_3$நுக்$_3$ரஹத்தாலே குமாரர் அவதரித்த பன்னிரண்டாம்நாள் **ந்ருஸிம்ஹதே$_3$ஶிகர்** என்று திருநாமமும் சாத்தி, ஸ்வாமி ஸந்நிதி$_4$க்கு ஸேவைக்கு எழுந்தருளின காலம், ஶகாப்$_3$த$_3$ம் ஆயிரத்துநூற்றுநாற்பத்தொன்பதுக்குமேல் அக்ஷயஸம்வத்ஸரத்தில் 'துலுக்கர் தொண்டைமண்டலம் வ்யாபித்தார்கள்' என்று கேட்டு, ஸ்வாமி ஸந்நிதி$_4$யிலே 'இங்கே எழுந்தருளியிருக்கிறதும், வெளியிலே எழுந்தருளுகிறதும் எது திருவுள்ளம்?' என்று திருவுள்ளச்சீட்டுப் போடுகையில்; 'அழகியமணவாளப்பெருமாள் எழுந்தருளியிருக்கிறதே திருவுள்ளம்' என்று நியமித்தபடியினாலே, திருநாள் ஆரம்பி$_4$த்து நடக்கையில், பன்றியாழ்வான் கோவிலிலே ப$_3$லிவெட்டு மண்டபத்திலே அழகியமணவாளப்பெருமாள் எழுந்தருளியிருக்கிற ஸமயத்திலே, துலுக்கர் சமயபுரம் கடந்து வருகிறதைக் கேட்டு; ஸ்ரீரங்க$_3$ராஜநாத$_2$ன் திருவோலக்கத்திலே எழுந்தருளியிருக்கிற பன்னீராயிரம் ஸ்வாமிகளையும் திருவோலக்கம் குலையாமலிருக்கும்படி நியமித்து; திருவாராத$_4$நம் நடக்கிறதாகத் திருத்திரைபரிமாறி, சிறு பல்லக்கிலே பெருமாளையேறியருளப்பண்ணி, ஒரு அர்ச்சகரையும் இரண்டு பரிசாரகர்களையும் ஸ்ரீபாத$_3$ம் தாங்குவாரையும் ஶிஷ்யரோடுகூடப் பிள்ளைலோகாசார்யரையும் கூட்டித் தெற்கே அனுப்பி;

தாம் கோவிலிலே புகுந்து,சில திருவாப₄ரணப் பெட்டிகளையும் திருப்பல்லக்கிலே ஸ்ரீரங்க₃நாய்ச்சியாரையும் சில பரிகரங்களையும் கூட்டி அனுப்பி; பெரியபெருமாள் குலசேக₂ரன்படி கல்திரைபரிமாறி, முன்னதாக ஒரு விக்₃ரஹத்தை வைத்துக் கதவைப்பூட்டி, நாய்ச்சியார் ஸந்நிதி₄யிலேயும் அந்தப்படி பண்ணி, மர்மஸ்த₂ாநங்களெல்லாம் திரோத₄ாநம்பண்ணி, தாம் திருவோலக்கத்தில் வர; துலுக்கரும் திரையில் புகுந்து விக்₃ரஹத்தைக் காணுமல், பன்றியாழ்வானை அபசாரப்பட்டு, ஸ்வாமிகளனைவரையும் திருமுடிதிருத்தி, கோவிலிலே ப்ரவேஶித்து, செம்பொன் வாசலிலிருந்த விக்₃ரஹத்தை அழித்து, தென்கரை வடகரை எல்லாம் குடிபடைகளுக்குச் சேதமில்லாதபடி எஜமாநன் அழகிய மணவாளன் திருமண்டபத்திலே குடியிருக்குமளவில்; எம்பெருமானடியாரிலே ஒருத்தி அவனை ஸந்தி₄த்து, அவனுடன் கூடியிருந்து நன்ருக வஶீகரிக்குமளவில்; அவனும் முன் நினைத்தபடி கோயிலை பூ₃தி₄யாமல் இருக்குமளவில், பூர்வம் ஜீயர் யந்த்ரஸ்த₂ாபநம் பண்ணினதினுலே அவனுக்கு ஶரீரத்திலே வ்யாதி₄வருமளவில், அவன் 'இது தெய்வக்ருதம்' என்று நினைத்து, கோயிலை அழிக்கப் பார்க்குமளவில்; அந்த எம்பெருனடியாளுபாயமாக, அவனுக்குத் தெரியச் சொல்லி, அவன் நினைத்தபடி செய்யாமல் கோ₃புரமண்டபக் கொடுங்கைகளை அங்க₃ப₄ங்க₃ம் பண்ணுவித்து, த்₃வாரபாலகர்கள் முதலான சுற்றில் விக்₃ரஹங்களையும் அங்க₃ப₄ங்க₃ம் பண்ணுவித்தார்கள். அவ்வளவிலே அவன் ஸந்துஷ்டனுயிருந்தான். அப்படியும் அவனுக்கு நாள்வரையில் நோய் விஞ்சினபடியினுலே, இவ்விடத்திலே இருப்பைவிட்டு, கண்ணனூரிலே மதிளைப்பிடுங்கிக் கோட்டை கட்டுவித்துப் போனவளவிலே, திருவிடையாட்டத்து அழகியமணவாளனிடக்காணியாளரில் "**சிங்கப்பிரான்**"என்கிற ப்₃ராஹ்மணர், அந்த எம்பெருமானடியாள் முக₂மாகத் துலுக்கனைக்கண்டு, அவன் வாசலுக்குக் கார்யகரராயிருந்துகொண்டு, கோயிலுக்குத் தீங்கில்லாதபடி ரக்ஷித்துக்கொண்டிருந்தார்.

அழகியமணவாளப்பெருமாள், ஜோதிஷ்குடி திருமாலிருஞ்சோலை கோழிக்கூடு புங்கனூர் வழியாகத் திருநாராயணபுரத்துக்கு எழுந்தருளினது

பெருமாளும், அன்றிரவு தம் நாய்ச்சிமாருடனும் அந்தரங்க₃ பரிஜநங்களோடும்கூடி, சிறந்த காட்டிலே எழுந் தருள; கள்ளர் தொடர்ந்து ஸர்வஸ்வாபஹாரம் பண்ண, அவ் விடத்திலும் அப்புறத்திலே போகையில்; அங்கங்கே செறுவஞ்சக்கள்ளர் எதிர்கொண்டு சிறப்புக்கட்டளை அமைக்க; அவர்கள் ப₄ாவமறிந்து, அத்தை பரிக்₃ரஹி யாமல் கடாக்ஷித்து, ஜோதிஷ்குடியிலே ஒரு மாஸம் எழுந் தருளியிருக்க; அங்கே பிள்ளைலோகாசார்யர் திருநாட்டுக் கெழுந்தருளி,திருவத்₄யயநாந்தமாகச் சரமகைங்கர்யம் நிறை வேறினபின்பு, திருமாலிருஞ்சோலையேற எழுந்தருளி, ஒரு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து, திருநாமத்தாலே ஒரு கிணறும் உண்டுபண்ணி, அவ்விடத்திலும் புறப்பட்டருளி மலையாளத்திலே எழுந்தருளி, அங்கங்கே அவரவர்களாலே ஸத்க்ருதராய் கோழிக்கூடேற எழுந்தருளி, அவ்விடத் திலே சிலநாளெழுந்தருளியிருக்க; அவ்விடத்திலே மற்ற தி₃வ்யதேசங்களிலெம்பெருமான்களும் நம்மாழ்வாருமெழுந் தருள, அந்த எம்பெருமான்களையும் ஆத₃ரித்தருளி, நம்மாழ் வாரைத் தம் தி₃வ்யஸிம்ஹாஸநத்திலே வைத்துக்கொண்டு ஒரு ஸம்வத்ஸரம் அங்கே எழுந்தருளியிருந்து; அவ்விடத் திலும் ஆழ்வாருடன் புறப்பட்டருளி, ஸமுத்₃ரத்திலே ஓடத்தின்மேலே எழுந்தருள, மத்₄யே ஆழ்வார் ப்ராமாதி₃க மாக ஸமுத்₃ர ஜலத்திலே எழுந்தருள, பெருமாள் தனித்து எழுந்தருளத் திருவுள்ளமில்லாதபடியாலே ஓடத்தைத் திருப்பி, பெருமாள் நியமநத்தினலே கெருடன் வட்டமிட்ட விடத்திலே முழுகி ஆழ்வாரையெடுத்துப் பெருமாளுடன் சேர்க்க; பெருமாளும் ஆழ்வாருடன் திருக்கிணும்பியிலே அநேகநாளெழுந்தருளியிருந்து, ஆழ்வாருக்குத் தம் வட்ட மணையையும் முத்துச் சட்டையையும் ஸாதி₃த்தருளி,

ஆழ்வாரை அங்கே நிறுத்தி, தாம் ஸபரிகரராய் புங்கனூர் வழியாகத் திருநாராயணபுரம் எழுந்தருளினர்.

பெருமாள் திருவேங்கடத்துக்கு எழுந்தருளியது

ஆழ்வாருடனே ஏகாஸநத்திலேயிருந்து ஏகபாத்ரங் களிலே திருவாராத₄நம் கண்டருளுகையில்; ஆழ்வார் திருப்படிக்கமும், பெருமாள் ஸ்ரீஶட₂கோபனும் ஸாதி₃க் கிறது. அதுமுதலாகப் பெருமாள் திருவாராத₄நமான வுடனே, திருப்படிக்கத் தீர்த்த₂ம் ஸேனைமுதலியார் கோயி லிலே ஸ்ரீரங்க₃நாராயணஜீயர் முதலான பாரபத்தியக்கார ருக்கு ஸாதி₃க்கிறது. பெருமாள் புறப்பட்டருளினல், அது முதலாக, நடையிலே சுந்தரபாண்டியன் கொண்டுபோகிற தில்லை. இந்தப்படி திருநாராயணபுரத்திலேயும் அநேக நாள் எழுந்தருளியிருந்து, ப்ரத₃க்ஷிணமாகத் திருவேங் கடத்துக்கெழுந்தருளி திருமலையிலே ப₃ஹுகாலம் தி₃வ்யோத்ஸவத்துடனே எழுந்தருளியிருந்தார். §

எம்பெருமானடியாளுக்குக் கட்டளையிட்டது

ஒரு காலவிஶேஷத்திலே நம்பெருமாள் ஸந்நிதி₄யில் துலுக்கர்கள் பெருமாளுக்குத் திருமஞ்சனம் முதலியவைகள் செய்யவொட்டாமலும், கோயிலுக்கு யாரையும் வரவொட் டாமலும் உபத்₃ரவம் பண்ணிக்கொண்டிருந்தனர். இவர் கள் செய்யும் உபத்₃ரவத்தைப் பார்த்து மனம் ஸஹியாத வளாய், எப்படியாவது இந்த துலுக்கர்களை இவ்விடத்தி னின்றும் துரத்தவேணுமென்கிற எண்ணங்கொண்டு ஒரு தி₃னம் தான் அலங்காரத்துடன் கோயிலுக்குள் வந்தாள்.

---

§ பக்கம் 25-ல் ''கோபணவுடையார்'' என்று தொடங்கும் தலைப்பு முதல் பக்கம் 27-ல் ''திருநாளும் கண்டருளினர்'' என்று முடியும் முதல் பாரா ஈருக உள்ள பகுதியில் பெரும்பாலும் 1888-ம் ஞு பதிப்பில் இவ்விடத்தில் உள்ளது. 26-ம் பக்கம் 2-வது வரியில் ''அவ்விடத்தில்'' என்று தொடங்கி, 9-ம் வரியில் ''யிருந்து'' என்பது வரையிலும், 25-ம் வரியில் ''அவருக்குத் தனியன் கொடுத்த'' என்பதும் அப்பதிப்பில் இல்லை. அங்குள்ள பகுதிகள் இங்கிருப்பதே பொருத்தம்.

துலுக்கர்களிற் பெரியவன் இவளைப் பார்த்து ஆசைப்பட்டு அருகில் வந்தான். அவளும் இச்சைகொண்டவள்போல் இருந்தனள். துலுக்கனும் அவளைப் பார்த்து 'உங்கள் சுவாமி எங்கே' என்று கேட்டான். நான் காண்பிக்கிறேன் வாருமென்று கீழண்டை கோபுரத்தின்மேலே அழைத்துக் கொண்டுபோய், பரவாசுதேவரைக் காண்பித்தனள். அவன் அந்தப் பரவாசுதேவரை எட்டிப்பார்க்கும்போது அவனை அவ்விடத்திலிருந்து கீழே தள்ளிவிட அவனும் வீழ்ந்து இறந்துபோனான். அவளும் பிரமஹத்தியானது நம்மைப் பிடிக்குமென்று தானும் வீழ்ந்தனள். அவளுக்குமாத்திரம் உயிர்போகாமலிருந்தது. மற்றைய படைகளெல்லாம் விட்டு ஓடிப்போனவுடனே கோயிலுள்ள பரிஜநங்கள் யாவும் திருக்காப்பை நீக்கவந்து பார்க்குங்காலத்தில், அடியாளுக்கு மாத்திரம் உயிர்போகாமலிருக்கக்கண்டார்கள். உடனே யாவரும் சென்று பெருமாளுடன் முறையிட, பெருமாளும் அர்ச்சகமுகேந அடியாளிடம் வந்து அழைத்து,போர உகந்தருளி "உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்" என்று சொல்ல, அவளும் "எந்தக்காலத்திலும் திருநாடு அளிக்கிற காலத்தில் என்னுடைய வர்க்கத்துக்கெல்லாம் திருமடைப்பள்ளியிலிருந்து நெருப்பும் திருக்கொட்டாரத்திலிருந்து அமுதுபடியும் தீர்த்தமும் திருமாலை திருப்பரிவட்டம் எந்தக்காலத்திலும் ஸாதிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனள். அதுமுதலாக அந்தப்படிநடந்துவருகிறது. /

/ பழைய பதிப்பில் இந்தப் பாரா "எம்பெருமானடியாளுக்குக் கட்டளை" என்னும் தலைப்போடு "பெருமாளும் நாய்ச்சியாருடனே சேரபாண்டியனிலே இனிதுடன் வீற்றிருந்து, எம்பெருமானடியாளை அழைத்து, போரவுகந்தருளி 'உனக்கு வேண்டியதைக் கேட்டுக் கொள்' என்று திருவுள்ளமாகையில்; அவள், 'என்னுடைய வர்க்கத்துக்குத் திருமடைப்பள்ளியில் கொள்ளியும், திருக்கொட்டாரத்திலே வாய்க்கரிசியும் அந்தகாலத்திலே ஸாதிக்கவேணும்' என்று கேட்டுக்கொண்டாள். அது முதலாக, அந்தப்படி நடந்து வருகிறது." என்று உள்ளது.

திருவாழிக்கல் போகட்டது

இந்தப்படி திருநாள் நடக்கையில்; பூர்வப்ரகாரம் எட்டாந்திருநாள் விடிவோறே பெருமாள் எல்லைக்கரைக்கு எழுந்தருளுகிறபோது, ஆனைக்காவல் வடக்குத்தெருவில் ரங்கவாசலாலே உள்ளே எழுந்தருளி, அகிலாண்டேஸ்வரிக்கு ஸேவைஸாதித்து, இளநீர் அமுதுசெய்து, ஜம்பு தீர்த்தத்திலே திருவடிவிளக்கி, கிழக்கே ஆழ்வார் திருமங்கைமன்னன் தோப்புக்கெழுந்தருளுகிறது. மற்றத் திருநாளிலே அந்தப்படி திருவடிவிளக்கி, அந்த வடக்கு வாசலாலே தானே திரும்பி உத்தமர்கோயில் ஆழ்வார் திருமாளிகையான கதம்பதீர்த்தத்துக்கு எழுந்தருளுமிடத்தில், சைவர் பஹுஸமாகக் கலஹம் பண்ணினபடியினாலே, தள்ளும் நூக்குமாக மூன்று வருஷம் கலஹத்திலும் நடந்தது; அதின்பின்பு, ஸகாப்தம் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூற்றேழுக்கு மேல் செல்லாநின்ற நளவருஷம் பங்குனி-மீ திருநாளிலே எட்டாந்திருநாள் பூர்வப்படிக்கு ஆனைக்காவலுக்கு ஸமீபத்திலே மேற்கே எழுந்தருளச்செய்தே, அநேகம் பாஷண்டிகள் ஆயுதபாணிகளாய் முன்னே வழிகட்டிக் கொண்டிருக்குமளவில், திருப்பணிசெய்வார் முன்போலே திருவீதி சோதனை பண்ணிக்கொண்டு போக, அத்தை அவர்கள் பொறுக்கமாட்டாமல், கொடவரான **வேலேந்தின பெருமாள்தாஸரை** மெய்யறப் பார்த்து,க்ஷுத்ரக்ருதியையும் ப்ரயோகிக்குமளவில்; பெருமாளுடன் ஜீயர்களும் ஸ்ரீவைஷ்ணவர்களும் அனைத்துக்கொத்துப் பரிகரங்களும் விரக்தரும் ஏகாங்கிகளும் திருவிழாக்காரரும்கூட உபநிஷத்தைப்பாராயணம் பண்ணிக்கொண்டு,வீரவாத்யங்களுடனே ஆனையேற்றமும் ஸாதித்து, உபநிஷந் மந்த்ரஜபத்துடன் அந்த மெய்யறுந்த திருப்பணி செய்வாரிருக்க, தடஸ்த்தரான மடாதிபதிகள் ஸமாதானம்பண்ணி நல்ல வார்த்தையாலே பொறுப்பித்தார்கள். அதுக்குப்பின்பு, அவர் போகிற வழியிலே திருவாழிக்கல்லைப் போட்டுக்கொண்டு வந்தது. ஆனைக்காவல் ஸ்தலத்தார், தங்களுக்கு மாடுகள்

போகிறதுக்கு மாத்திரம் வழி கொடுக்கவேணும் என்று, பரிவர்த்தனையாக நிலமும் கொடுத்து அநுவர்த்தித்தபடியினாலே, அவர்கள் மதிளுக்கு மேற்கே பத்துபாத$_3$ம் அகலம் வழிவிட்டுத் திருவாழிக்கல்லைப் போகட்டு, அதுமுதலாக எட்டாந் திருநாளுக்குக் கிழக்கே எழுந்தருளாமல் எல்லைக் கரையிலே எழுந்தருளுகிறது.

பெரியகிருஷ்ணராயர் உத்தமநம்பி கைங்கர்யம்

இந்தப்படி ஸ்த$_2$லத்துக்குக் கலகம் தீர்ந்து, விஜயநக$_3$ரத்துக்கு நாலாறுதரம் போய், ஹரிஹரராயரை அநுவர்த்தித்து, ஶகாப்$_3$த$_3$ம் ஆயிரத்து முந்நூற்றுநாலுக்குமேல் செல்லாநின்ற ருதி$_4$ரோத்$_3$கா$_3$ரி வருஷம்முதல் ஈஶ்வர-ஹூ வரைக்கும் பதினைந்து வருஷம் ஹரிராயர், மஹாராயர், கோபண உடையார், விருப்பண உடையார், முத்தைய தெண்ணாயக்கர், தம்பணவுடையார், ப்ரதா$_4$னி சோமப்பர் தெண்ணாயக்கர், காரியத்துக்குக்கடவ அண்ணர், கோபணர் உள்ளிட்டார்கையில், உத$_3$கதா$_4$ரா பூர்வகமாக பெரிய கிருஷ்ணராயர் உத்தமநம்பி வாங்கின திருவிடையாட்டம்; இதுவும் ஆனையேற்ற மண்டபம் கலஹத்திலே ஜீர்ணமாகையில் அதைக் கட்டிவைத்ததும், **பெரியக்ருஷ்ணராயர் உத்தமநம்பி** கைங்கர்யம்.

x நாக மங்க$_3$லம் அண்ணப்பவுடையார் கைங்கர்யம்

அமுதுமண்டபம் நாலு தூணுக்கும் செம்பின்மேல் பொன் பூசுவித்து, நடுவே திருப்போனகம் படைக்கிற பலகைக்கு வெள்ளித்தகடு போடுவித்தது **நாகமங்க$_3$லம் அண்ணப்ப உடையார்** கைங்கர்யம். இதை காலவிஶேஷத்திலே பிரித்து வெள்ளிக்கொப்பரை பண்ணிற்று.

x திம்ம ராகுத்தர் கைங்கர்யம்

திருவணுக்கன் திருவாசலுக்கு மஹாதோரணமும் செம்பின்மேல் பொன்பூசிப் பண்ணுவித்து, திருக்கதவுக்கும் அப்படியே பூச்சுத்தகடு போடுவித்து, திருவரங்கச் செல்வனார் எழுந்தருளியிருக்கிற பீட$_2$த்துக்கும் பூச்சுத்

x சிறிய எழுத்திலுள்ள தலைப்புகள் பழம் பதிப்பில் மாத்திரம் உள்ளன.

தகடு போடுவித்தது, ஸாளுவ கோ₃பால ராஜாவின் மநுஷ்யன் **திம்ம ராகுத்தர்** கைங்கர்யம்.

ஹரிஹர ராயர் கைங்கர்யம்

அழகியமணவாளத் திருமண்டபத்தில் தூங்கத் திருப் பள்ளிக்கட்டில் மஞ்சமும் ஹரிஹரராயன் கைங்கர்யமாகப் பண்ணி வைத்ததும், பெரிய க்ருஷ்ணராயர் உத்தமநம்பி.

வேத₃ார்ய ப₄ட்டர் ஸ்ரீகார்யம் நிர்வஹித்தது.

ஈஶ்வர வருஷம் முதல் விக்கிரம வருஷம்வரைக்கும் **வேத₃ார்யப₄ட்டர்** ஸ்ரீகார்யம் நிர்வஹித்தார்.

கந்தாடையார் அதீ₄நமாயிருந்த உடையவர் ஸந்நிதி₄யை வேத₃ாசார்யப₄ட்டர் உடன்படிக்கைகொடுத்துத் தன் வசமாக்கினது

அதற்குப் பூர்வம் உடையவர் திருநாட்டுக்கெழுந் தருளின பின்பு; எதிராஜனைப் பெருமாள் நியமநத்தினாலே சுந்தரபாண்டியன் துலாபுருஷ மண்டபத்திலே அர்ச்சாவ தாரமாக ஏறியருளப் பண்ணுவித்து அனைத்தழகும் நடத் தினது கந்தாடையாண்டான். ஆயிஉள்ளிட்டார் பரக்கத் திருமண்டபங்களும் கட்டுவித்து உபலாளித்தபடியினாலே, அந்தக் கோயில் கந்தாடையாரதீ₄நமாக நடந்துவர; திருவரங்கந் திருப்பதியிலே பெருமாளை ஸேவிக்கவந்த பரிஜநங்களுக்கு, பெரிய திருநாளிலே, அந்த எம்பெருமானார் ஸந்நிதி₄யிலே ஸந்நிதி₄ப்பேர், ஸமயமுத்₃ரையான திரு விலச்சினை ஸாதி₃த்து வந்தார்கள். துலுக்காவணத்திலே கோயில் திருக்காப்பைச் சேர்த்தபடியினாலே, பரிஜநங் களும் வராமல் ஸமயமுத்₃ரை ஸாதி₃க்கிறதற்கில்லாம லிருந்தது. பின்பு, பெருமாளும் எழுந்தருளி, திருக்காப்பு நீக்கி, விருப்பண உடையார் திருத்தேர்த்திருநாளிலே பரிஜநங்களும் வர; தத்காலத்திலே அந்த ஸமயமுத்₃ரையை, ஸ்ரீப₄ண்டா₃ரம் என்று எம்பெருமானார் ஸந்நிதி₄யிலே ஸாதி₃க்கவொட்டாமல், வேத₃ாசார்யப₄ட்டர் தம் மநுஷ்யரை

ஸாதி₃க்கச்சொல்லி, எம்பெருமானர் ஸந்நிதி₄ப்பேரைத் தள்ளிவிட்டு ப₃லவந்தமாக நடந்தபடியாலே, அந்த வேத₃ா சார்ய ப₄ட்டர் ஒருக்கால் இருக்கால் எம்பெருமானரை ஸேவிக்க வந்தவிடத்திலே, ஒரு பர்யாயமாக அவமதி நடக்க, அதுமூலமாக பூர்வம் திருவிக்கிரமசோழன் ப்ரதிஷ்டி₂ப்பித்த சக்ரவர்த்தித் திருமகன் கோயிலில் தெற்கு அறையிலே யதிராஜனை ப்ரதிஷ்டி₂ப்பித்து, அவ்விடத்திலே, பெரிய ஸந்நிதி₄யிலே தம்முடைய கைங்கர்யமாகச் சில உபகரணங் களையும் பண்ணுவித்து, திருப்புகைக்காலுக்குத் தம்முடைய திருநாமம் சாற்றி, ஸந்நிதி₄யிலே அந்தப்பேர் நடத்திவைத் தார். ஸந்நிதி₄யிலே கூரநாராயணஜீயர் பட்டப்பேருக்கு வரிசைகள் ஸாதி₃த்தவுடனே ஸ்ரீஸேநாபதி து₄ரந்த₄ரவரிசை களையும் தாமே பெற்றுக்கொண்டு வந்தார். இந்தப்படி நாலு வருஷம் நடந்தபின்பு அந்த அதி₄காரம் மாருடி, **மெய்நிலையிட்ட உத்தமநம்பி** விஜயநக₃ரத்திலும் வந்து ராயர் நிருபப்படியே ஸ்ரீகார்யம் நிர்வஹித்துத் துடங்கினவுடனே, அந்த உத்தமநம்பி தமப்பன் **அழகியமணவாளநம்பி** முற் காலத்திலே ஸ்வாமி திருமடைப்பள்ளி கைங்கர்யத்தில் தலைவராய் ஸ்ரீரங்க₃ராஜநாத₂ன் வாதூ₄லதே₃ஶிகர் திருவடி களில் ஆஶ்ரயித்தவனானபடியினாலே, அந்த அபி₄மானத் தாலே அந்தக் கொத்துப் பரிகரங்களும் "உடையவர் ஆஜ்ஞையை அதிக்ரமிக்கலாகாது" என்று யோசித்து, ப₄ட்டரை நிராகரித்து, கந்தாடையாரதீ₄நத்தையும் அதுக் குள்ள வரிசைகளையும் அவர்கள் தே₃ஶாந்தரஸ்த₂ரானபடி யினாலே ஸ்ரீப₄ண்டா₃ரம் சேர்க்க;

4. ஸ்ரீமச்ச₂காப்₃தே₃ நவலோகப₄ாஜி
விகாரிணி ஹ்யுத்தமநம்பி₃நாம்நः ।
வேத₃ார்யப₄ட்டோ து₄ரி திம்மராஜோ
விதீர்ய பத்ரம் ஸமயம் தத₃ாக்₃ரஹீத் ॥

என்று நாளளவிலே அந்த ப₄ட்டரும் எல்லாரையும் அநு ஸரித்து, அர்த்த₂ப₃லத்தாலேயும் ஸமயம் முதலானது

களைத் தம்முடைய வசம் பண்ணுகைக்கு ராயர் மநுஷ்யன் கோபணதிம்மராஜா, ஸ்தத₂லத்தார் முன்னிலைக்கும் உத்தமநம்பிபேருக்கு "அவர்கள் வருகிறவரைக்கும் நாமநுப₄விக்கிறோம்" என்று உடன்படிக்கை எழுதிக்கொடுத்தது, ஶகாப்₃த₃ம் ஆயிரத்துமுந்நூற்று நாற்பதுக்கு மேல் விகாரி வருஷத்திலே.

பெரியகிருஷ்ணராயருத்தமநம்பி, பெரியநம்பி வம்ஶஸ்த₂ர் திருவடிகளில் ஆஶ்ரயித்தது

பின்பு, அந்த எல்லைநிலையிட்ட பெரியக்ருஷ்ணராயர் உத்தமநம்பி, ஸ்தத₂லத்துக்கு அநேக உபகாரங்களைப் பண்ணி, ராஜவல்லப₄ராய், முத்₃ரையும் ஸ்தத₂லத்திலே சேர்த்துக்கொண்டு, நூற்றெட்டுத்திருப்பதி தி₃வ்யதே₃ஶ கைங்கர்யங்களும் ஆராய்ந்துகொண்டு, ப₃ஹூகாலமாயிருக்கிற காலத்திலே; தான் 'அசக்ராங்கிதபரனுனேம்' என்று கலுஷிதஹ்ருத₃யனாய், வார்த்த₄கம் மிகுந்தபடியாலேயும், ஆசார்யர்கள் தே₃ஶாந்தரஸ்த₂ர்களானபடியினாலேயும், ப₄ட்டர் கந்தாடையாருக்கு விரோதி₄யானபடியினாலேயும், அங்கே ஆஶ்ரயிக்க மநஸ்ஸில்லாமல் சிந்தித்துக்கொண்டிருக்க; தே₃ஶாந்தரத்திலிருந்து, பெரியநம்பி வம்ஶ்யராய் ஜ்ஞாநவ்ருத்₃த₄ராய் வ்யோவ்ருத்₃த₄ரானவர் ஸ்தத₂லம் க்ஷேமமான ஸமாசாரம் கேட்டு, தம்முடைய அதீ₄நத்துக்கெழுந்தருள; அவர் திருவடிகளிலே ஆஶ்ரயித்தார்.

இந்த வேதா₃சார்யப₄ட்டருக்கு **"உத்தண்ட₃ப₄ட்டர்"** என்று திருநாமம் சொல்லுகிறது.

கஜவேட்டை ப்ரதாபதே₃வமஹாராயர் காலத்தில், உத்தமநம்பி சக்ரராயருடன் ஸ்ரீகார்யம் நிர்வஹித்தது

ஶகாப்₃த₃ம் ஆயிரத்துமுந்நூற்று நாற்பத்துமூன்றுக்கு மேல் ப்லவ வருஷத்தில், எல்லை நிலையிட்ட உத்தமநம்பி,

விஜயநக₃ரத்திலே போய், **கஜவேட்டை ப்ரதாபதே₃வமஹா ராயரை** ரஞ்ஜிப்பித்து, அவர்கையிலே அநேக வரிசைகளையும் பெற்று; தம்முடைய தம்பிக்கு, ராயமுத்₃ரையும், **"சக்ரராயர்"** என்கிற பேரும், ப்ரத்யேகமாக அதீ₄நமும் உண்டாக்கி ஸகலவித₄ ஸ்வதந்த்ரங்களும் உண்டாக்கிக் கொடுத்து, தம்முடைய அதீ₄நத்துக்கும் அவரதீ₄நத்துக்கும் ஸம்ப₃ந்த₄மில்லாதபடி, கஜவேட்டை ப்ரதாப தே₃வமஹா ராயரைத் தண்டுபண்ணுவித்து, ஸகல விருதுகளும் வாங்கிக்கொண்டு, தி₃வ்யதே₃ஶங்களையெல்லாம் ஸேவித்து, ஸ்ரீகார்யங்களெல்லாம் பரிஶோதி₄த்துக்கொண்டு ஸ்த்த₂லத்திலே வந்து, திருவிடையாட்ட க்₃ராமங்கள் பரிஶோத₄னை பண்ணி, திருவரங்கச்செல்வம் சிதருமல் வளர்த்து, ஜீயர்கள், ஸ்ரீவைஷ்ணவர்கள், ஏகாங்கிகள், ஆசார்ய புருஷர்கள் எல்லாரையும் ஆத₃ரித்துக்கொண்டு, பூர்வ வ்யவஸ்தை₂ தப்பாமல் நடப்பித்துக்கொண்டு, ராயர்பேரும் ராயர் விருதும் பெற்று, கோயிலுக்கு வந்து, தாம் ஸ்ரீகார்யம் நிர்வஹித்துக்கொண்டு, தாம் கோவணவரான திருப்பதியார் கொத்துக்குத் தலைவராயிருந்து தகுந்த வரிசையையும், தம்முடைய தம்பிக்கு ஸேநாபதி து₄ரந்த₄ரரான ராயர் வரிசையையும் பெற்று அநுப₄வித்துக்கொண்டுவந்தார். இப்பேறுதானே அவர்களுக்குக் குறைவின்றிக்கே இரண்டு அதீ₄நமாக நடந்துவருகிறது. இந்த சக்ரராயன் சக்ரவர்த்தித் திருமகனை ப்ரதிஷ்டி₂ப்பித்தபின்பு, வேத₃ாசார்யர் ப்ரதிஷ்டை₂ பண்ணின எம்பெருமானுர் அவரதீ₄நமாய்த்து.

வழியடிமை நிலையிட்ட பெருமாளுத்தமநம்பிபிள்ளை கைங்கர்யம்

கோயிலாழ்வாரையும் திருமஞ்சநம் பண்ணுவித்து, அமுதுமண்டபமும் அழகியமணவாளன் திருமண்டபமும் சாந்துமிடுவித்தது **ராயர் திருவிக்களகதிரநாயக்கர்** கைங்கர்யமாகப் பண்ணிவைத்தது, **வழியடிமை நிலையிட்ட பெருமாளுத்தமநம்பி பிள்ளை.**

உத்தமர்கோயில் ஸ்ரீரங்கராஜர் கைங்கர்யம்

ஸ்ரீரங்கநாராயணஜீயர் பட்டத்திலே அஞ்சாமவர் **உத்தமர்கோயில் ஸ்ரீரங்கராஜர்** ஸ்ரீரங்கநாராயணஜீயராய், கூரநாராயணஜீயர் ப்ரதிஷ்டிப்பித்த வஸந்தகோபாலர் துலுக்காவணத்திலே சேதமாகையில், அவரையும் ப்ரதிஷ்டிப்பித்து, பெரியதிருமண்டபத்துக்குத் தெற்கிலே பாண்டியன் திருப்ரதிஷ்டையான தாம்ர கருடனும் சேதமாகையில் அவரையும் பெரியதிருமேனியாக ஏறியருளப்பண்ணி புழுகாப்புச் சாத்துவித்து ப்ரதிஷ்டிப்பித்து, அவருடைய உத்ஸவபேரம் கலஹத்தின் முன்னேடே அந்தக் கோயிலுக்குத் தெற்கிலே நிக்ஷிப்தராயிருந்து, பின்பு காணமற் போகையில் அவரையும் ப்ரதிஷ்டிப்பித்து, வடதிருக்காவேரி தென்கரையிலே எல்லைக்கரை மண்டபமும் கட்டுவித்து, தமக்குமுன் **அழகியமணவாளப்ரியன்** என்று பேர்கொடுத்து நடந்துவந்த அநந்தரம் பட்டர் ஸ்ரீகார்யத்திலே அவனுக்கு அவர் **ஸ்ரீவைஷ்ணவப்ரியன்** என்று பேர்கொடுக்க, அவர் காலம்போய், திரும்ப உத்தமநம்பி ஸ்ரீகார்யம் விசாரிக்கத் தொடங்கினவுடனே, அந்தக் கணக்கனுக்கு புலமுண்டாக்கி **"ஸ்ரீரங்கநாராயணப்ரியன்"** என்று பேருண்டாக்கினர்.

விருப்பண்ணவுடையார் கைங்கர்யம்

ரக்தாக்ஷி வருஷத்திலே, விருப்பண்ண உடையார், ஸுதர்ஶநப்பெருமாள்கோவிலுங்கட்டி, ஹேதீஶஙருஸிம்ஹரையும் ப்ரதிஷ்டிப்பித்தார்—இந்த உத்தமநம்பி செங்கோல் செலுத்தி ஸ்ரீகார்யம் நிர்வஹிக்கையில், தம்மாசார்யரான பெரியநம்பிக்கு, பட்டருக்கு ஆனவுடனே தீர்த்தம் ஸாதிக்கச் சொல்லி, அதின்பின்பு, ஜீயாள் ஸ்ரீவைஷ்ணவாள் முதலான பேருக்கும் ஆனபின்பு, ராயமுத்ரையாலே பாரபத்தியக்காரர் வரிசையைத் தாம் பிடித்துவந்தார்.

பெரியஜீயர், உத்தமநம்பியைக்கொண்டு கந்தாடை அண்ணனுக்கு ஏற்படுத்தின மரியாதைகள்

இந்தப்படி நடந்து வருகிற காலத்திலே, ஶகாப்3த3ம் ஆயிரத்துமுந்நூற்று நாற்பத்தேழுக்கு மேல் பார்த்தி2வ வருஷம் **பெரியஜீயர்** ஸங்யஸித்து எழுந்தருளி, பெருமாள் க்ருபை பெற்று, திருவீதி தெற்குமாடத் திருவீதியில் பல்லவராயன் மட2த்தை லபி4த்து, காலக்ஷேபமும் ஸேவா காலமும் ப்ரதிதி3னமும் தப்பாமல் நடந்துவர; பெரிய உத்தமநம்பி காலத்துக்குப்பின்பு, அவர் புத்ரரான **உத்தம நம்பியும்** பெரியஜீயர் திருவடிகளிலே அபசாரப்பட; அழகியமணவாளப்பெருமாள், அவன் ஸ்வப்நத்திலே, பெரியஜீயர் அவதாரரஹஸ்யத்தைத் தெரியப்பண்ணி; அபசாரக்ஷாமணம் பண்ணிக்கொள்ளச் சொல்லி நியமிக்க, அப்பொழுதே, அந்த உத்தமநம்பியும் மட2த்தேற வந்து, ஸ்வாமி நியமநப்ரகாரம் பெரியஜீயரைத் திருவனந்தாழ் வானாக ஸேவித்து, அவேளையானபடியாலே ப்ரதாபகாலத் திலே வந்து அபசாரக்ஷாமணம் பண்ணிக்கொண்டு, ஆஶ்ரயத்தை ப்ரார்த்தி2க்க; ஜீயரும், தமக்கு அந்தரங்க3 ஶிஷ்யரான வரத3நாராயணாசார்யர் ஸ்வாமிக்ருபையாலே **"அண்ணன்"** என்று திருநாமம் பெற்றிருக்க, அவர் திருவடி களிலே ஆஶ்ரயிப்பித்து, அந்த வரத3நாராயண அண்ணன் கோயிலிலே எழுந்தருளாமலிருக்க, பூர்வம் ஆண்டானுக்கு உடையவர் ஸாதி3த்த மரியாதைகளும், பன்னீராயிரம் திருமுடி திருத்தின கலாபத்துக்குப்பின் பெருமாள் திரும்ப ஸ்த2லத்துக்குக்கெழுந்தருளின காலத்திலே, அந்த ஸ்ரீரங்க3 ராஜ வாதூ4லதே3ஶிகர் வம்ஶஸ்த்த2ர் தே3ஶாந்தரஸ்த2ர் களாய் ப3ஹுகாலம் வாராமலிருக்க, அந்த மரியாதை யெல் லாம் ஸ்ரீப4ண்டா3ரம் சேர்ந்திருக்கையில்; "அவர்கள் விஜய நக3ர ப்ராந்தத்திலே ப4ாக்3யத்துடனிருக்கிறார்கள்" என்று ஸ்த2லத்திலே எல்லாரும் கேட்டிருக்கிறபடியாலே, வேத3ா சார்ய ப4ட்டருக்கு உடன்படிக்கைமேலே இரண்டொரு

மரியாதையைக் கொடுத்ததுபோக, குறை ஆண்டான் மரியாதைகள் – தீர்த்த₂ம் – அருளப்பாடு அண்ணங்காரைப் பிடிக்கச் சொல்லி உத்தமநம்பி சொல்ல; உடனே, பெரிய பெருமாள் "தீர்த்த₂மும், **கந்தாடை அண்ணன்** என்கிற அருளப்பாடும், உமக்கு ஶ்ரேயஸ்கரமாய் அநுப₄வித்துக் கொள்ளும்" என்று நியமிக்க; காலவிஶேஷத்திலே, திருவத்₄யயநோத்ஸவத்திலே, ஸ்வாமி நியமநத்தாலே தம்முடைய ஸந்நிதி₄யிலே ப்ரப₃ந்த₄ ஸேவையானவுடனே அண்ணன் ஸந்நிதி₄யிலேயும் நித்யம் ஸேவாகாலம் நடக்கும்படி நியமித்து, அண்ணன் ஒருகால விஶேஷத்திலே தே₃ஹ ஸம்ப₃ந்தி₄கள் நடத்தையிலே ஜுகு₃ப்ஸிதராய் ஸந்யாஸம் ப்ரார்த்தி₂க்க, பெரியஜீயரும், பூர்வம் உடையவர்-கந்தாடையாண்டான் ஸந்யாஸம் கேட்கையில் "ஆண்டான் வம்ஶஸ்த₂ர்களுக்கு ஸந்யாஸம் வேண்டாம்" என்று நியமித்து, தம் ப₄ாகி₃நேயரான முதலியாண்டானுடைய கந்யாஷ்டகத்தை கோ₃த்ரஷ்டகத்திலே ப்ரதா₃நம் செய்தருளி, "காலாந்தரத்திலே கந்யாஷ்டக வம்ஶரோடே உமக்கு ஸப்தகோ₃த்ர ஸங்கேதமுண்டாய் ஸம்ப₃ந்த₄ம் நடக்கும்" என்று நியமித்தபடியாலே, அந்த அர்த்த₂த்தை வெளியிட்டருளி; அந்த ஸங்கேதம் பண்ணிவைக்கையில்;' ஆசார்ய நியமநப்ரகாரம் எல்லாம் நடந்துவருகிறது. காலவிஶேஷத்திலே, **ப்ரதிவாதி₃ ப₄யங்கரம் அண்ணன்** முதலான பேர் ஆசார்யபுருஷவரிசையிலே வந்து சேர்ந்தார்கள்.

சக்ரராயர் கைங்கர்யம்

காலவிஶேஷத்திலே, **சக்ரராயர்** சந்த்₃ர புஷ்கரிணிக் கரை பழுதுபார்த்து, பரமபத₃நாத₂ன் ஸந்நிதி₄க்குத் தெற்குக் கரையும் மண்டபமும் கட்டி, பரமபத₃நாத₂ன் நாய்ச்சிமார் ஆழ்வார்கள் ஆசார்யர்களுக்கும் புழுகாப்பு சாத்துவித்தார். அந்த மண்டபத்திலே, ஒரு காலத்தில் **ஸௌரிராஜர்** எழுந்தருளியிருந்து, மரியாதைகள் வ்யத்யாஸத்தினாலே ஒண்டாமல் கீழையூரிலே எழுந்தருளினார்.

தென்னயக்கர் கைங்கர்யம்

ஶகாப்₃த₃ம் ஆயிரத்து முந்நூற்றெழுபத்துநாலுக்கு மேல் பரீதாபி-ஹூ ஹநுமந்த தே₃வருக்குக் கோயில்கட்டி ப்ரதிஷ்டி₂ப்பித்தது தென்னயக்கர் கைங்கர்யமாக உத்தம நம்பி கட்டிவைத்தார். அவருக்குக் கீழ்ப்பற்றுப் புத்தூரைத் திருவிடையாட்டமாகத் தென்னயக்கர் ஸமர்ப்பித்தார்.

சாத்தாத நரசிங்கத₃ாஸர் கைங்கர்யம்

அந்தக் கோயிலே கந்தாடைநாயனுக்கு ஸமர்ப்பிக்கையில், கோயிலுக்குமுன்னே திருமண்டபம் கட்டி, திருப்பாணாழ்வாரை ப்ரதிஷ்டி₂ப்பித்தது, அவர் ஶிஷ்யர் **சாத்தாத நரசிங்கத₃ாஸன்.**

நம்பெருமாள் 'ஸ்ரீஶைலேஶத₃யாபாத்ரம்' என்னும் தனியன் ஸாதி₃த்தது

அந்த வருஷம் ஆவணிமாஸத்திலே திருப்பவித்ரத் திருநாள் சாற்றுமுறையில், அழகியமணவாளப்பெருமாள், பெரியஜீயரை அர்ச்சக முகே₂ந அழைத்து, 'நாளைமுதலாகப் பெரியதிருமண்டபத்திலே ஈடு தொடங்கிக் காலக்ஷேபம் நடத்தும்' என்று நியமித்தருளி; மற்றுநாள் நாய்ச்சியாருடன் பெருமாள் புறப்பட்டருளி, பெரியதிருமண்டபத்திலே ஏறியருளி; ஜீயர் ஈடு தொடங்கிக் காலக்ஷேபம் நடத்த; அதுமுதலாக ஒருவருஷம் நித்யமாக பெரியவஸரம் அமுது செய்தருளினவுடனே புறப்பட்டருளி, பெரியதிருமண்டபத்திலே ஏறியருளி! ப₄க₃வத்₃விஷயம் முற்றவுங்கேட்டருளி, சாற்றுமுறையன்றைக்கு ஆழ்வார்களுடனே பெரிய திருவோலக்கமாக எழுந்தருளி, ஜீயர் ஈடு சாற்றினவுடனே அர்ச்சகமுக₂மாக 'ஸ்ரீஶைலேஶத₃யாபாத்ரம்' என்கிற தனியனுடன் ஸகலவரிசைகளும் ஸாதி₃த்து, தாம் ஸாதி₃த்த வரிசையைத் தம் ஆராமங்களிலும் நடத்தச்சொல்லி தி₃வ்ய தே₃ஶங்களுக்குத் திருமுகப்பட்டையம் ஸாதி₃த்தருளினர். அதுமுதலாக, சுற்றுக் கோவில்களிலும், தி₃வ்யதே₃ஶங்களிலும் ப்ரப₃ந்த₄ாதி₃யிலே அந்தத் தனியன் நடக்கிறது.

எல்லைக்கரை மதிள் கட்டினது

அந்த வருஷத்திலே கீழையூரிலும் ஒரு ரிஷபம் வெளித்திருமுற்றத்திலே வந்து அழிக்க, அதைப் பொறுக்க மாட்டாதே ஏகாங்கிகள் ஹிம்ஸிக்க, அதுமுதலாக கீழை யூராருக்கும் இத்தலத்தாருக்கும் பஹுவிரோதம் வர, **எல்லைக்கரை மதிள்** கட்டுவித்தார்கள்.

அண்ண ஆண்டப்ப உடையார் திருமலைதந்தான் கைங்கர்யம்

இந்த வருஷத்திலே, புரட்டாசிமாஸம் ஆதித்யதேவ உடையார் நக்ஷத்ரமான உத்திரட்டாதியிலே திருத்தேர் திருநாள் நடத்தும்படி **அண்ண ஆண்டப்ப உடையார் திருமலை தந்தான்** திருவிக்கிரமன் திருவீதியிலே த்வஜாரோஹணத் திருநாள் நடப்பித்து, கொடியாலத்தைப் பலிவெட்டு க்ராம மாக ஸமர்ப்பித்தான்.

அண்ணப்ப உடையார் கைங்கர்யம்

ருதிரோத்காரி வருஷத்திலே, **அண்ணப்ப உடையார்** கட்டளை:—வஸந்தோத்ஸவ கேடாக்குழித்திருநாள் நடப் பித்து, அதுக்குப் பலிவெட்டாக, மல்லிதேவன் புத்தூர் என்கிற க்ராமத்தை ஸமர்ப்பித்தான். அகளங்கன் திருவீதி மேல்பக்கத்திலே கேடாக்குழி மண்டபமும் அவன் திருப் பணியாகச் செய்வித்தது அந்த உத்தமநம்பி.

பராசர் கைங்கர்யம்

பார்த்தஸாரதிகோயில் முகப்பத்தி, **பராசர்** கைங்கர்யம்.

புத்தூர் அழகியமணவாளப்பெருமாள் கைங்கர்யம்

திருமடைப்பள்ளி உட்பட்டது **புத்தூர் அழகியமண வாளப் பெருமாள்** கைங்கர்யம்.

உத்தமநம்பி, சக்ரராயர் நிர்வஹித்தது

இந்தப்படி மெய்நிலையிட்ட உத்தமநம்பி ப்ரமோதூத வருஷம் வரைக்கும் பலவகையிலும் வாங்கின திருவிடை யாட்ட க்ராமங்கள் நூறு. இவர் தம்பி சக்ரராயர், ராஜகர் உபத்ரவத்தினாலே திருக்கொட்டாரத்திலே நெல்லை யெடுத்துக்கொண்டுபோக வந்தவனுக்குக் குடலையளந்தார்.

க₃ருட₃வாஹநபண்டி₃தர் கைங்கர்யம்

பூர்வம் ஆரோக்₃யஶாலேயும் திருநடைமாளிகையும் ப்ரதாபசக்ரவர்த்தி காரியப்பேரில் கங்கைதே₃வரான சிங்கணதண்டய நாயக்கர் திருப்பணியாயிருந்ததும், உடையவர் கைங்கர்யமாயிருந்ததும், துலுக்காவணத்திலே சேதமாகையில், இந்தக் கோயிலும் திருமண்டபமும் முன்னில் முகப்பு மண்டபமும் **க₃ருட₃வாஹனபண்டி₃தர்** கைங்கர்யம். உடையவர் நாள் முதலாக, ஆரோக்₃யஶாலாதி₄பதிகளுக்கு **க₃ருட₃ வாஹன பண்டி₃தர்** என்று பட்டப்பேர்.

அண்ணப்பருடையார் கைங்கர்யம்

ஶகாப்₃த₃ம் ஆயிரத்து முந்நூற்றெண்பத்தஞ்சில் ருதி₄ரோத்₃கா₃ரி வருஷத்திலே அடையவளேந்தான் திருமதிள் திருவாசல் திருக்கோபுரத்தடியும் **அண்ணப்பருடையார்** திருப்பணி.

நாகராஜ உடையார் கைங்கர்யம்

நாய்ச்சியார்கோயில் திருநடைமாளிகை **நாக₃ராஜ உடையார்** கைங்கர்யம்.

வழியடிமைநிலேயிட்ட உத்தமநம்பி கைங்கர்யம்

பெரிய திருமண்டபத்திலே உடையவர் மரக்கோப்பாகக் கட்டி நிர்வஹித்தருளினது கலஹத்திலே அக்₃நித₃க்₃த₄மாகையாலே, தே₃வாஸநக்கொறடுங்கட்டி, திருமண்டபமும், இந்தத் திருமண்டபத்துக்குக்கீழ் திருக்காவணப்பத்தியும் கட்டுவித்தது **வழியடிமை நிலேயிட்ட உத்தமநம்பி.**

பெரிய சக்ரராயர் கைங்கர்யம்

பெரிய சக்ரராயர் கைங்கர்யம்:—முன் ஶகாப்₃த₃ம் ஆயிரத்து முந்நூற்று முப்பத்தேழில் மந்மத₂வருஷத்தில் முன் பெரிய திருமண்டபத்திலே சோழ ப்ரதிஷ்டை₂யான தாம்ரப்ரதிமை க₃ருட₃ன், கலஹத்திலே பி₄ந்நமாகையாலே, ஆத்தஶகலங்களாலே அழகியமணவாளப்பெருமாள் திருமண்டபத்தில் ஸந்நிதி₄ க₃ருட₃னே ஏறியருளப்பண்ணி ப்ரதிஷ்டி₂ப்பித்தது,

5. ''மந்மத$_2$வர்ஷே ஜ்யேஷ்ட்டே$_2$ ரவிவாரே ரேவதிதாரே |
ஸ்ரீசக்ரராயவிபு$_4$நா ஸ்ரீமாந் க$_3$ருட$_3$: ப்ரதிஷ்ட்டி$_2$தோ
பூ$_4$த்யை'' ||

என்று த$_4$ர்மவர்மாவின் திருமதிளிலே லிகி$_2$தமும் பண்ணு
வித்து, பூர்வம் சோழ ப்ரதிஷ்டி$_2$தையான சக்ரவர்த்தித்
திருமகனையும் ஜீர்ணோத்$_3$த$_4$ாரணம் பண்ணுவித்து, அந்த
ஸந்நிதி$_4$யிலே சூடிக்கொடுத்த நாய்ச்சியாரையும் ப்ரதிஷ்டி$_2$ப்
பித்து, அந்த ஸந்நிதி$_4$க்குத் திருமடைப்பள்ளியும் கட்டுவித்
தார். அந்த மந்மத$_2$வருஷம் தை மாஸத்தில் புநர்வஸு
நக்ஷத்திரத்திலே **பூ$_4$பதி உடையார்** திருநாள் நடத்தி, பெரு
மாளுக்குத் திருத்தேர் நாளும் நடப்பித்து, அந்தத் திருநா
ளுக்குப் பலிவெட்டாக தொடையூரும் நடப்பித்தான். அந்த
சக்ரராயர், சேனைவென்றான் திருமண்டபத்துக்கு மேற்கு
துலாபுருஷ மண்டபத்திலே, பூர்வம் கூரநாராயணஜீயர்
ப்ரதிஷ்டி$_2$ப்பித்த ஸ்ரீவராஹநயினார் துலுக்கர் கலஹத்திலே
பி$_4$ந்நமாகையில், அவரையும் ப்ரதிஷ்டி$_2$ப்பித்து; அந்தத்
திருச்சுற்றில் ஆக்$_3$நேயப$_4$ாக$_3$த்திலே பெரிய திருமடைப்
பள்ளிக்கு வடக்கே **தாடுசம் பிள்ளை** திருப்பணியான சின்ன
திருமடைப்பள்ளிக்கு முன்னில் முகப்புங் கட்டுவித்து,
என்னை வாழ்விக்கும் நாய்ச்சியாரான **அரவிந்த$_3$நாயகி
யாரையும்** ஏறியருளப்பண்ணுவித்து, அந்தாதியெம்பெருமான்
கொறட்டுக்கு மேல்புறமும் கட்டுவித்து, இந்தக் கொறட்டில்
வடக்குத் தூணின்மேல் ஹநுமாரையும் ஏறியருளப் பண்ணு
வித்து, சேனைவென்றான் திருச்சுற்றுத் திருநடைமாளிகை
மேல்புறம் சேதமாகையில் வடக்கடையத் தூணும் நிறுத்
திப் பாவுகல் பொகட்டுக் கட்டிவைத்ததும்; ஆலிநாடன் திருக்
கோபுரமான ஆரியப$_4$ட்டாள் வாசலும் துலுக்காவணத்
திலே அக்$_3$நிப$_3$ாதை$_4$யால் சேதமாகையாலே, நிலைகால்
முகவணை அருகணை கீழ்ப்படி மேல்படி உட்படக் கட்டி
னதும் பெரிய சகரராயர்.

மூவெந்திறையார் தீராவினைதீர்த்தார், திருவேங்கடமுடையான் கைங்கர்யம்

பின்பு, இந்தத் திருக்கோபுரம் பழகிச்சரிவாகையில், சரிவானது எடுத்துக்கட்டி, முறிந்த பாத₃த்தடியும் போடுவித்து, கோபுர வண்ணமும் பதிசித்ரமும் பண்ணி, தே₃வர்களையும் ஏறியருளப்பண்ணி, இவ்விடத்தில் திருக்கோபுரத்தில் சேதமான முகவணை அருகணை பாவுகல்லும் நலமாகப் போடுவித்து, கோபுரவண்ணமும் தேவர்களையும் உண்டாக்கி, ப்ரதிஷ்டை பண்ணுவித்து; த₄ர்மவர்மாவின் திருவீதியில் திருநடைமாளிகையும், அழகியமணவாளன் திருமண்டபமும், ராஜமஹேந்த்₃ரன் திருவீதியில் திருநடைமாளிகை, யாக₃சாலை, நலந்திகழ் நாராயணஜீயர் மண்டபம் முதலானதும், சேனைவென்றான் திருமண்டபமும், திருமடைப்பள்ளியும் முதலானதும்; ஆலிநாடன் திருமதிளுக்கு உட்பட்டதெல்லாம் அரைகுறை தீர்த்துச் சாந்தும் பண்ணுவித்து, யாக₃சாலையருகணியெடுத்துக் கட்டுவித்ததும்; மூவெந்திறையார் தீராவினை தீர்த்தாரும், இவர் தம்பி திருவேங்கடமுடையானும் பண்ணின கைங்கர்யம்.

திருமலைநாதவுத்தமநம்பி கைங்கர்யம்

ஶகாப்₃த₃ம் ஆயிரத்து முந்நூற்றறுபத்தாறில் ரக்தாக்ஷி வருஷம்முதல், திருமலைநாத உத்தமநம்பி, விஜயநகரத்துக்குப்போய், தண்டுபண்ணி, ப்ரௌட₄தே₃வராயர் மல்லிகார்ஜுநராயர் முதலானபேர்கள் கையிலும் இருபத்திரண்டு க்₃ராமமும் வாங்கிக்கொண்டு, ப்ரஜோத்பத்தி வருஷத்திலே கோயிலுக்கு வந்து, பெருமாள்தேவன் மண்டபத்துக் கொடுங்கையும் வைப்பித்து, திருக்கொட்டாரத்துக்குத் தென்வடக்கான கீழ்த்திருமதில் பழகி விழுந்துபோகையில் அஸ்திப₄ாரத்தளவும் பறிப்பித்து, கல்படை செங்கல்படையுங் கட்டிவைத்து, முதல்கட்டுக்குத் தளவரிசையும் கட்டி, பெரிய திருமண்டபத்துக்குக் கிழக்கே

நூற்றுக்கால் மண்டபமும் கட்டிவைத்து, அதிலே ஜ்யேஷ்டா₂பி₄ஷேகத்தில் ஸஹஸ்ரகலஶாபி₄ஷேகம் பண்ணுவித்து, திருச்சிராப்பள்ளி சாவடிக்கு ராயமுத்₃ரை மநுஷ்யராகக் குழித்தண்டல் **கம்பராஜா** வருகையில், "இந்த சீமைகளை விடவேணும்" என்று திருமலைராஜா சொல்லுகையில், இவருக்கும் அவருக்கும் விரோத₄மாய், ஶகாப்₃த₃ம் ஆயிரத்து முந்நூற்றெண்பதில் ப்ரமாதி₂வருஷம் புரட்டாசிமாஸத்திலே தென்கரை வடகரை சவையார் நாட்டார் அனைவரும் குடிகளும் புறப்பட்டு, சீமையைப் பாழ்பண்ணி, பன்னிரண்டு வருஷம் ஆயிரக்கால் மண்டபத்திலும் தே₃ஶாந்தரத்திலும் குடியிருந்து, பின்பு ஶகாப்₃த₃ம் ஆயிரத்து முந்நூற்றுத் தொண்ணூற்றிரண்டில் க₂ரவருஷத்திலே, திருச்சிராப்பள்ளி சீமை தண்டல் சீர்மையும் திருமலை ராஜாவின் சீர்மையாகையில்; தென்கரை வடகரையாரனைவரும் திருமலைராஜாவைக்கண்டு, தங்கள்தங்கள் க்₃ராமத்திலே போனபின்பு, இந்த மண்டபத்துக்கு மேல்புறத்து ஒழுங்கு மண்டபக் கொறடுக்கொக்கத் தூர்ந்துபோகையில், அந்த மண்ணுமெடுப்பித்து, கோபுரத்துக்கு வடபுறம் சாரமுற்றும் மண்ணுமெடுப்பித்துப் புறம் போடுவித்து, ஶாந்திஹோமம் பண்ணி, ஸங்க்ரமத் திருநாளுக்கும் சித்திரைத் திருநாளிலே எட்டாந்திருநாள் எல்லைக்கு மேல்புறத்திலொழுங்கை மேற்படிவழியாக ஆனைபூண்ட புறம்பில் கொறட்டிலே மேற்குப் பார்க்கப் பெருமாளேறியருளி, இதுக்கு மேல்புறத்தில் சாமந்தனர் தோப்பிலே திருக்காவணமும் இடுவித்து, சிறப்புக் கட்டளையும் நடத்தினது **திருமலைநாத₂ உத்தமநம்பி.**

இதுவும், புந்நாக₃ தீர்த்த₂க்கரை லக்ஷ்மீநாராயணப் பெருமாள் கோயிலையும் ஜீர்ணோத்₃த₄ாரணம்பண்ணி, பெருமாளுக்கு த₃ந்தசப்பரமும் பண்ணுவித்து, ஒரு பங்குனித் திருநாளில் மூன்றாந்திருநாள் குதிரை நம்பிரான் மேலே ஏறியருளி, ராத்ரி கோயிலுக்கெழுந்தருளும்போது ஆகஸ்மிகமாக மழைவருகையில் இந்த உத்தமநம்பி வாசலிலே

எழுந்தருளியிருக்க, உத்தமநம்பியும் தம்முடைய ஜநங்களுடனே பெருமாளுக்கு ஸர்வஸ்வத்தையும் ஸமர்ப்பித்து, அதுமுதலாக மூன்ருந்திருநாளுக்குத் திருப்பல்லக்கிலே தானே எழுந்தருளும்படி திட்டம் பண்ணுகையில், இதுவரைக்கும் அந்தப்படியே நடந்துவருகிறது.

க்ருஷ்ணராய உத்தமநம்பி கைங்கர்யம்

அவர் தம்பி க்ருஷ்ணராய உத்தமநம்பி—ஶகாப்₃த₃ம் ஆயிரத்து நானூற்றெண்பதில் ப்லவங்க₃ வருஷத்திலே, **எறமாஞ்சி திம்மப்பநாயக்கர்** முதலானவர்கையிலே இருபது க்₃ராமம் திருவிடையாட்டமாக த₄ாரைவாங்கி, திருக்கொட்டார முகப்புத் திருமண்டபமும், நலந்திகழ் நாராயணஜீயர் ப்ரதிஷ்டையான செங்கமலநாயகியார் எழுந்தருளியிருக்கிற திருமதிளும் பழகிச் சரிவாகையில் அதுவும் கட்டிவைத்து; இரண்டாம் நெல்லுக்கூடம் பெருச்சாளியறுத்துச் சரிந்து போகையில், உள்ளுத் தளவரிசையும் கட்டி, கல்தூணும் நிறுத்தி, உறுதியாக எடுத்துக் கட்டிவைத்தார்.

குடல்சாரவாளநயினர் கைங்கர்யம்

அவர் தம்பி குடல்சாரவாளநயினர், ஶகாப்₃த₃ம் ஆயிரத்து நானூற்றுப் பதின்மூன்றில் விரோதி₄க்ருத் வருஷம், ஸ்ரீப₄ண்ட₃ாரத்துக்கு சில க்₃ராமங்கள் விலைகொண்டு; ராஜமஹேந்த்₃ரன் திருவாசல் நிலைகால் முகவணையுட்பட்டதும் துலுக்காவணத்திலே இடிவிழுந்து சேதமாகையால், இந்தத் திருவாசலடித்தட்டளவும் பறிப்பித்து, நலமாக நிலைகால் முகவணை உட்பட்டதும் பிராட்டிமலையிலே வெட்டித்தீர்ந்து, கல் அடிப்பாரமுள்ளதும் உறுதியாகக் கட்டுவித்து, கொடுங்கையும் வைப்பித்தார்.

கோ₃விந்த₃ராஜா கைங்கர்யம்

மேல் இந்தத் திருக்கோபுரமும் பண்ணி செங்கல்பணிதி, சாந்துப்பணிதி, சித்திரப்பணிதி வண்ணமும் எழுதுவித்து,

அஞ்சு பொற்குடமும் வைப்பித்தது **கோவிந்தராஜாவின்** கைங்கர்யம்.

கம்பராஜாமல்லர் கைங்கர்யம்

இதுகளுக்குமுன், ஶகாப்தம் ஆயிரத்து முந்நூற்றெண்பத்துமூன்றில் சித்ரபாநு வருஷம், அணியரங்கன் திருமுற்றத்திலே முன்னிருந்த வெண்கலத் திருக்கொடிக் கம்பத்தை வாங்கி பெரிய திருமடைப்பள்ளியிலே வைத்து, செம்பினுலே திருக்கொடிக்கம்பத்தில் ஆனைத்தகடு நாசித் தகடு உட்பட பலதகடு நூற்றுப்பன்னிரண்டு தகடும், கம்பத்தின்மேல் பெரிய திருவடி நயினாரும் உட்பட செம்பின்மேல் பூசின தங்கம் ஆயிரத்தறுநூறு பலம்; இதுவும் பல திருவாபரணமும், **கம்பராஜாமல்லர்** கைங்கர்யம்.

ஐந்நயநாயக்கர் கைங்கர்யம்

ஆலிநாடன் திருக்கோபுரம் தென்புறத்தில் த்வார பாலகர் துலுக்காவணத்திலே சேதமாகையில், திருவாழியாழ்வானையும் பெரியதிருவடியையும் ஏறியருளப் பண்ணி வைத்தது **ஐந்நயநாயக்கர் கைங்கர்யம்.**

அப்புள்ளார் ப்ரதிஷ்டை

பட்டர்பிரான்தாஸர், **அப்புள்ளார் ப்ரதிஷ்டை.**

கம்பயராஜா கைங்கர்யம்

கோபுரங்கநாயக்கன் த்வாரபாலகரான கங்கையும் யமுனையும் துலுக்காவணத்திலே சேதமாகையில், அவர்களை ஏறியருளப்பண்ணி வைத்தது, இதுக்குமுன் பஹுதாந்ய வருஷத்திலே திருச்சிராப்பள்ளி சாவடிக்கு வந்த **கம்பய ராஜாவின் கைங்கர்யம்.**

ஆழ்வார்ஜீயர் கைங்கர்யம்

நம்மாழ்வார்கோயில் மேல்புறமுள்ளும் மரக்கோப்பாகக் கட்டினது **ஆழ்வார்ஜீயர் திருப்பணி.**

அழகர் கைங்கர்யம்

பரவாஸுதேவர் ஸந்நிதிக்குமுன்னில் திருமண்டபம் ஆரியபட்டாள் **அழகர் திருப்பணி.**

ஸாளுவதிருமலைராஜா கைங்கர்யம்

ஆலிநாடன் திருவீதியில் வடக்குத் திருவாசல் சக்களவன் பண்ணின திருப்பணி ஜீர்ணமாகையாலே, ஶகாப்₃த₃ம் ஆயிரத்து முந்நூற்றுத்தொண்ணூற்றிரண்டில் கர வருஷத்திலே திருமலைராஜா அந்தத் திருக்கோபுரத்தை ஜீர்ணோத்₃த₄ாரணம் பண்ணிவைத்து, வெளியழகியானிலே கிழக்கே ஆலிநாடன் திருமதிளிலே ஆயிரக்கால் மண்டபத்துக்குச் செவ்வையாகப் போகும்படி திருக்கோபுரவாசலுமுண்டாக்கினபடியினாலே, அதுமுதலாக பெருமாள் திருவாய்மொழித் திருநாளுக்கு வெளியழகியானிலே எழுந்தருளி, அந்த வாசலாலே ஆயிரக்கால் மண்டபத்துக்கு எழுந்தருளுகிறது. அதுக்குமுன், ஆழ்வார்கள் பன்னிருவரும் பரமபத₃ வாசலிலே திருவோலக்கமிருக்க, திருக்காப்பு நீக்கினவுடனே பெருமாள் ஆழ்வார்களை ப்ரத₂மகடாக்ஷமாகக் கடாக்ஷித்துப் புறப்பட்டருளி, ஆழ்வார்களுக்கு அருளப்பாடு முதலான வரிசைகளை ஸாதி₃த்து, அரையர் உகப்புடனே முக்கண் வாசல்வழியாக அகளங்கன் திருவீதியாலே ஆயிரக்கால் மண்டபத்துக்குத் தெற்காலே எழுந்தருளி, படியேற்றங் கண்டருளி, திருக்காவணப்பத்தியிலும் உலாவியருளி, திருவந்திக்காப்பு கண்டருளி, திருமண்டபத்திலே ஏறியருளுவர். அதுமுதலாக, வெளியழகியானிலே ஆழ்வார்களுக்குக் காட்சியாய், புதிசான தட்டறைவாசலாலே ஆயிரக்கால் மண்டபத்தில் திருக்காவணப்பத்தியிலே உலாவியருளி, திருவந்திக்காப்பானபின்பு, திருமண்டபத்திலே ஏறியருளுவர்; அழகியமணவாளன் திருமண்டபத்திலே சந்த₃னமரத்தாலே மண்டப மேடையும், அதிலே செம்புமேல் பொற்பூச்சான மூன்று குடமும் கட்டுவித்து, அதிலே த₃ந்தசப்பரமும் மஞ்சமும் வைப்பித்தது **ஸாளுவ திருமலைராஜா.**

கந்தாடை ராமாநுஜதா₃ஸர் கைங்கர்யம்

ஶகாப்₃த₃ம் ஆயிரத்துநானூற்றுப்பதினென்றில், கந்தாடை ராமாநுஜன் வந்துபண்ணின கைங்கர்யத்துக்குவிவரம்:- ப்ரபண்டதேவராயரை **வீரநரசிங்கராயர்** ஜயித்து,கநகிகி₃ரிநகரத்திலேயிருந்து ராஜ்யபா₄ரம் வஹிக்கச்செய்தே, அவருடைய தமையனான **ராமராஜா** ஸ்த₂ல ஶாஸ்த்ரமும் படித்து, விரக்தராய், தீர்த்த₂யாத்ரைபண்ணி,ஹநுமது₃பாஸனைபண்ணி,திருவயோத்திக்குப் போய், ஸ்ரீராமமாடைகளையும் ஸ்பர்ஶவேதி₃யையும் லபி₄த்து, வைராகி₃ வேஷத்துடனே கநகிகி₃ரிக்குவந்து, தம்பியான வீரநரசிங்கராயரைக் கண்டு, ஒரு ஸ்ரீராமமாடையும் கொடுத்து, தனக்கு நூற்றெட்டுத் திருப்பதிகளிலேயும் தே₃ஶாந்தரிமுத்₃ரை நடக்கத்தக்கதாக ராயஶாஸநமும் நிருபமும் வாங்கிக்கொண்டு, திருமலை பெருமாள்கோயிலிலேயும் ஸ்ரீராமமாடை ஸமர்ப்பித்து, அவ்விடத்தில் ஸ்த₂லங்களையெல்லாம் ராயஶாஸநப்படிக்கு ஸ்வாதீ₄நம் பண்ணிக்கொண்டு, ஶகாப்₃த₃ம் ஆயிரத்துநானூற்றுப் பதினென்றில் ஸௌம்ய வருஷத்திலே திருவரங்கந் திருப்பதியிலே வந்து, பெருமாளுக்கு ஒரு ஸ்ரீராமமாடையும் ஸமர்ப்பித்து, கந்தாடையண்ணன் திருவடிகளிலே ஆஶ்ரயித்து, விஶேஷநிஷ்ட₂ராய் ஸகல ஶாஸ்த்ரங்களையும்படித்து,ஏகாங்கிவேஷம் த₄ரித்து, அண்ணன் ஸந்நிதி₄யிலே "**கந்தாடை ராமாநுஜ தா₃ஸர்**"என்று தா₃ஸ்யநாமமும் பெற்று,ராயஶாஸநப்படியே ஏகாங்கிகளுக்குத் தலைவராய், ஸத்த₂லத்திலேயிருந்த இலச்சினைகளுக்கு மேலே தே₃ஶாந்தரிமுத்₃ரை ஆஞ்ஜநேய முத்₃ரையைப் பெருமாள் ஸந்நிதி₄யிலும் லபி₄த்து, ஆராமங்களிலே ஆஞ்ஜநேய முத்₃ரையைத் தம் மநுஷ்யர் முகாந்தரத்திலே ப்ரவர்த்திப்பித்து, இவ்விடத்திலே தானே இருந்துகொண்டு, நித்யமாக ஏகாங்கிகளுக்கு உடையவர் கல்பித்த கட்டளைப்படிக்குத் திருவணுக்கன் திருவாசலிலேயும், பரிமளப்பெட்டிகளிலேயும், வ்யஞ்சனை அறைக்கும், ஆரியப₄ட்டாள் வாசலுக்கும், திருக்கொட்டார வாசலுக்கும், இது முத

ல்லனதுகளுக்கு ஹநுமார் முத்₃ரையிட்டு; கொறட்டுப்பாரபத்யக்காரருக்கு, புறப்பாடு முதலானவிடங்களிலே ஸேவையானவுடனே உத்தமநம்பிக்கு முன்னாக ஸேவை தீர்த்த₂ப்ரஸாத₃ விநியோக₃ாதி₃களும் உண்டுபண்ணிக்கொண்டிருக்கும் காலத்திலே; ஸர்வஜித்து வருஷத்திலே, திருக்காவேரி உடைப்பு எடுத்து நடுத்தோப்புக்கும் சூடிக்கொடுத்த நாய்ச்சியார் கோவிலுக்கும் நடுவே புறப்பட்டு, கிழக்கே ஆனைக்காவல் ஸமீபத்தில் எல்லை மதிளுக்கு மேற்காலே வடதிருக்காவேரியையடைந்து, முற்றிலும் பள்ளம் பறித்திருக்கையில்; அந்தப்பள்ளங்களைத் திருவெள்ளறை மண்ணினாலே தூர்த்து, அடையவளைந்தானுக்கு மேற்கே தெப்பக்குளத்தையும் ஜீர்ணோத்₃த₄ாரணம் பண்ணி, மையமண்டபமும் கட்டிவைத்திருக்கும் காலத்திலே; முன் கரவருஷத்திலே திருச்சிராப்பள்ளி சீர்மை முதலானதுகள் திருமலைராஜாவுக்கு நடந்தபின்பு, இந்த ராஜ்யத்துக்குக் கோனேரிராஜா கர்த்தராய், திருச்சிராப்பள்ளியிலே பாளையம்பண்ணிக் கொண்டிருக்கையில் ; ஆனைக்காவலாருக்கு கோனேரிராஜா ஸஹாயம்பண்ணி, மஞ்சள்பொடியிறைத்து விளையாடும்படி பண்ணுவித்தும், திருமலை சோலை எல்லையை அமைத்துக் கொள்ளும்படி பண்ணுவித்தும், கோட்டை சாமந்தனார் சென்றப்பநாயக்கர் உள்ளிட்டாருக்குக் குத்தகையாகத் திருவிடையாட்டச் சீர்மை அமைத்துக்கொண்டும், கோயிலிலேயும் "புரவரி, காணிக்கை, பட்டு, பரிவட்டம்" என்று அநேகம் பொன்களை எடுத்துக்கொண்டு, ஸ்த்த₂லத்தை நெருக்கி, ப₃ஹு ஈதிப₃ாதை₄ பண்ணுகையில்; இரண்டு ஜீயாளும் ஏகாங்கிகளும் கோபுரத்திலேயேறி ஶரீரத்தையுபேக்ஷித்தாலும் உபத்₃ரவம் பண்ணுகையில், கந்தாடை ராமாநுஜன் இந்த சேதிகளெல்லாம் பலகாலும் நரசாநாயக்கருக்கு அறிக்கை பண்ணினபடியினாலே ; தெற்குத்திசையில் ராஜகார்ய வ்யாஜமாக அநேக த₄னத்துடனே நரஸாநாயக்கர் வந்து கோனேரிராஜாவை ஸம்ஹரித்து, திருச்சிராப்பள்ளி உட்பட்ட ராஜ்யமும் ; நளவருஷம் ஐப்பசிமாஸம் பதிநாலாந்

தேதி நாக₃மநாயக்கரும் குமாரர் நரஸாநாயக்கரும் வந்து பெருமாளை ஸேவிக்க, கந்தாடை ராமாநுஜனும் அவர்களை ஸேவிக்கப் பண்ணிவைத்து, திருவிடையாட்டச் சீர்மையையும் பலரும் ஒத்திகையாக அநுப₄வித்த சீர்மையையும் பெருமாள் ஸ்ரீப₄ண்டா₃ரத்திலே கண்டுகொள்ளும்படி நரஸா நாயக்கர் ராயஸமும் வாங்கி, திருவிடையாட்டங்களும் விடுவித்துக்கொண்டு; திருவிடையாட்டச் சீர்மையிலே, வெட்டிவரியும் நாட்டுத்தலையாரிக்குமுட்படப் புரவரியும் ஸர்வமாங்யமாகக் கழிப்பித்துக்கொண்டு, முத்துக்கல் கண்டமாலை பதக்கம் முதலான பல திருவாப₄ரணங்களும், அறுவாணம் திருவெண்சாமரம் பட்டுவகை பலவும் ஸ்ரீப₄ண்டா₃ரத்திலே முதலிடுவித்து, கருவுகலத்திலே ஸ்த₂ாபிதமும் கட்டுவித்து, திருக்கொட்டாரம் நெல்லும் அமுதுபடியும் குத்தக்கொழிக்க நூறு கோயிலடியார் விழுக்காடு நரஸா நாயக்கன் உப₄யமாக என்றென்றைக்கும் நடக்கும்படி வாங்கிவிட்டு, பெருமாள் திருவாராத₄நக்கட்டளை சாத்தும்படி வர்க்கவகைக் கட்டளைகள் முதலானதுகளுக்கும் மாத₄வய்யங்காரைக் கட்டளையிட்டு, ஒன்றுலொன்று குறையில்லாமல் நடப்பித்தார்.

அதுமுதலாக, வீரஸுந்த₃ர ப்₃ரஹ்மாராயர் மதிளில் தெற்குவடக்குக் கோபுரங்களும் புதிதாகக் கட்டிவைத்து, ஆயிரக்கால் மண்டபத்திலே தளத்தில் காரைச்சாந்து பழகிப்போகையில் காரைபோட்டுச் சாந்துபணியும் பண்ணுவித்து, அகளங்கன் திருமதிள் கீழ்க்கோபுரத்திலே துலுக்காவணத்துக்கு முன்னே இடிவிழுந்து பழகிச் சேதமாயிருக்கையில் பழைய அடிப்பாரத்துக்குள்ளே மட்டமாக அடிப்பாரமும் மேலுமெடுத்துக்கட்டி, குடம் வரைக்கும் கோபுரமும் கட்டி, அதுக்குப்படியும் கட்டுவித்து, நிலைகாலிலே கோனேரிராஜா நாளையில் அந்த கோபுரத்தில் ஏறிவிழுந்த ஜீயர்களையும் ஏகாங்கிகளையும் உருக்களடிப்பித்து, எழுத்தும் வெட்டுவித்து, கோபுரங்கள் நாயகன் பழகிச் சரிவாகையில் நன்றாகக்கட்டி, புதிதாகப் பொற்

குடமும் கொடுங்கைகளும் வைப்பித்து, திருக்கொட்டாரத்திலே மூன்றுங்கூடும் நாலாங்கூடும் அஞ்சாங்கூடும் துலுக்காவணத்தில் தலையடையும் சரிந்து அடிப்பாரமும் பெருச்சாளி அறுத்துச் சேதமாகையில் இந்த மூன்று கூட்டிலுள்ள தளவரிசையுங் கட்டி, மலையிலும் பத்தடி உத்திரமுள்ள மரங்களுமழைப்பித்து உறுதியாகத் தலையடை ஸ்தூபியளவும் நலமாகக் கட்டுவித்து, அஞ்சு கூட்டிலும் பூர்வம் முதலாகவிருந்த மண்ணும் ஓடுகளும் குப்பைகளும் எடுப்பித்து, திருநடைமாளிகை உமிமண்ணு மெடுத்துப் புறம்பே போடுவித்து, திருநடைமாளிகையும் கட்டுவித்து, ஆயிரக்கால் திருமண்டபத்திலொழுங்கையில் மேடையும் திருமண்டபத்துமுன்னில் மண்ணுமெடுப்பித்து, வெளியழகியானில் மண்ணும் அகளங்கன் திருவீதித் திருமதிளுக்குட்பட்ட மண்ணுமெடுப்பித்துச் செப்பனிடு வித்தும், ஒட்டியன் கலகத்துக்குப்பின்பு, அகளங்கன் திருமதிள் சரிந்துபோகையில் அந்தச் சரிவைக் கட்டுவித்தும், அணியரங்கன் திருமுற்றத்தில் ஆக்₃நேய ப₄ாக₃த்திலே திருவூஞ்சல் மண்டபம் நேர்த்தியாகக் கட்டு வித்துத் திருநாள் நடப்பித்தும், தி₃வ்யவிமாநமும் வாஹநங் களும் ஸ்வர்ணமாகப் பூசுவித்தும், ஸந்நிதி₄யிலே அநேக திருவாப₄ரணங்களும் அநேக உபகரணங்களும் பண்ணு வித்தும், விட்டலேஶ்வரன்கோயில் ஜீர்ணோத்₃த₄ாரணம் பண்ணிப் பரக்கக் கட்டுவித்தும், இந்தப்படி திருத்தோப்பு களும் பலவகையில் கைங்கர்யங்களும் பண்ணுகையில்; பெருமாள் உகந்தருளி, **"குலஶேக₂ரப்பெருமாள்"** என்று திருவுள்ளம்பற்றியருளினர்.

அதுமுதலாக உடையவர் கல்பித்த தே₃ஶாந்தரி ஏகாங்கிகளிலே **கந்தாடை ராமாநுஜன்** அதீ₄நமாகப் பட்டமும், ஸ்ரீரங்க₃நாராயண ஜீயரைப்போலே, மட₂மும், ஸ்ரீரங்க₃ராஜர் திருவாராத₄நமும், தே₃ஶாந்தரி வைராகி₃களுக்கு முத்₃ரை போடுகிறதும், கோவிலிலே ப்ரஸாத₃ பணியாராதி₃

மட₂வரிசையாகப் பெற்றும் நடந்துவருகிறது. இவர் ராயருடைய தமயனுகையாலே, குல்லாவும், அதின்மேலே வைராக்₃யவேஷத்துக்குத் தகுதியாக ஶிரோவேஷ்டியும கட்டினபடியாலே அந்த அதீ₄நத்துக்கு வந்தவர்கள் அப்படி கட்டுகிறதாக நடக்கிறது.

இவர், கோட்டை சாமந்தனுர் சென்றப்பநாயக்கருள்ளிட்டார் குத்தகை கொண்டுநின்றதாய், கோனேரிராஜா அநுப₄வித்ததும் பலரும் ஒத்திப்பிடித்து அநுப₄வித்ததுமான ஊர்களை ஸ்ரீப₄ண்டா₃ரத்திலே சேர்த்த க்₃ராமங்கள் அறுபத்தொன்று.

தே₃வதா₃யம் ராயரதீ₄நமானது

பூர்வம் சேர சோழ பாண்டிய மண்ட₃லங்களுக்கு ஒரு ப்ரபு₄வாயிருந்த நாளிலும், அதின்பின்பு மூன்று மண்ட₃லத்துக்கும் மூன்றுபேர் ராஜாக்கள் ஆளுங்காலத்திலும், ஒருபடியாகத்தானே, ஶகாப்₃த₃ம் ஆயிரத்திருநூற்று நாற்பத்தொன்பதில் அக்ஷய வருஷம் வரைக்கும் ராஜாக்கள் தே₃வதா₃ய ப்₃ரஹ்மதா₃யங்களை ஆளாமற்படிக்கு ப்₃ராஹ்மணரதீ₄நமாகத்தானே நடக்க; அதிலே நடக்கிற ந்யாயாந்யாயங்களை மாத்ரம் விசாரித்து நிக்₃ரஹங்களைப் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அதின்பின்பு, துலுக்கர் வந்து தே₃வதா₃ய ப்₃ரஹ்மதா₃யங்களை அழித்து, பெருமாளும் தங்கு வேட்டையாக ஆராமங்களிலே எழுந்தருளி, ஶகாப்₃த₃ம் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூற்றுமூன்றில் பரீதாபி வருஷம் வைகாசி-மீ பதினேழாந்தேதியிலே திரும்பவும் கோயிலுக்கெழுந்தருளினபின்பு, இம்மண்ட₃லங்களெல்லாம் நரபதியான ராயரதீ₄நமானபடியினலே, தே₃வதா₃யமான திருவிடையாட்டங்களை, ராயரும் ராயமநுஷ்யரான பல து₃ர்க்கா₃தி₄பதிகளும் உத₃கதா₄ரா பூர்வகமாக க்₃ராமங்களை தா₃நம்பண்ணி, கோயிலுக்குத் தங்கள் மநுஷ்யராக மணியமும் ஸம்ப்ரதியும் கட்டளையிட்டு, அரண்மனைச் சீர்மையோடொத்ததாக ஆண்டுகொண்டிருந்தார்கள்.

உடையவர் கல்பித்த கட்டுக்கொலைந்தது

ஆனபடியினாலே, உடையவர் கல்பித்த கட்டுக் கொலைந்து; ராயர் முத்3ரையாக, செங்கோலதி4காரி ஒருத்தரும், கொறட்டுப்பாரபத்தியக்காரர் ஒருத்தரும், ஸ்த்த2லத்தில் பெரியவராக ஸ்ரீரங்க3நாராயணஜீயர் ஒருத்தரும், காலவிஶேஷத்திலே **இளங்கேள்வி** என்று உத்தமநம்பியும்; **ராயர்முத்3ரை** என்று சக்ரராயர் ஒருத்தரும், **தே3ஶாந்தரிமுத்3ரை** என்று கந்தாடை ராமாநுஜனும், இப்படி அதி4காரிகளும் பல முக2ங்களாய் ஸ்த்த2லத்திலே உடையவர் கல்பித்த பத்துக்கொத்து ப்3ராஹ்மண பரிகரங்களிலேயும் ப3ஹுமுக2ங்களாய், ஓரொரு கொத்தில் கைங்கர்யங்களைப் பலவித4மாகக் கொத்திலே சேராமல் ஸ்ரீப4ண்டா3ரத்திலேவிட்டு, இப்படி பலவித4மாக, உடையவர் கல்பித்த கொத்தும் மரியாதையும் அழிந்து, பெருமாள் தாமே ஸ்ரீபாஞ்சராத்ர முக2த்தாலே அருளிச்செய்த ஶாஸ்த்ர மர்யாதைத3ப்படியே உடையவர் கல்பித்த வரிசை குலைந்து, ஸ்வதந்த்ரமாக ஶாஸ்த்ரவிருத்3த4மாய் ஆசார்யபுருஷ ப3ஹுமாநங்களும், இவ்வனைத்துக் கொத்துப் பரிகரங்களும் ஸ்த்தா2ந ஸமயவிபா4க3மும், இதுக்குண்டான பேறுகளும், இது முதலானதுகளெல்லாம் நலமாக நடத்திக்கொண்டார்கள்.

நம்பெருமாள் கோயிலிலேயே எழுந்தருளியிருந்தது

ஶகாப்3த3ம் ஆயிரத்துமுந்நூற்று நாற்பத்தேழில் மணவாளமஹாமுனி எழுந்தருளி நம்பெருமாளை மங்க3ளாஶாஸநம் பண்ணினது முதலாக, பெருமாள் பூபாலராயனை விட்டுச் சலியாமல் எழுந்தருளியிருந்தார்.

விசுவநாதநாயக்கரைக்கொண்டு, நரஸிம்ஹாசார்யர் பண்ணின கைங்கர்யம்

ஶகாப்3த3ம் ஆயிரத்துநானூற்றிருபதுக்குமேல், மதுரை திருச்சிராப்பள்ளி விசுவநாதநாயக்கன் அதீ4நமாய்,

அவரைக்கொண்டு வாதூ4லதே3ஶிகர் குமாரர் நரஸிம்ஹாசார்யர் பெருமாளுக்கு ஸமர்ப்பித்தது:—தங்கபஞ்சபாத்ர வட்டில், கலசப்பானை, திருப்படிக்கம், ஸஹஸ்ரதா4ரை தட்டு, சில திருவாப4ரணங்களும் செய்வித்து; பன்னீராயிரம் திருமுடிக்குறையிலே ஸ்ரீரங்கராஜநாத2ன் அநுப4வித்த கொவணவர் வரிசைகளும் ஸ்ரீப4ண்டா3ரஞ் சேர்ந்திருந்ததைத் தாம் லபி4த்து, ஸ்வாமிக்கு அநேக கைங்கர்யங்களையும் நடப்பித்து, மூன்றுலக்ஷம் பொன் கைங்கர்யம் செய்வித்தார்.

அக்காலத்திலே, பெருமாள் புறப்பட்டருளி, ஸேனை முதலியார் ஸந்நிதி4 வாசலிலே திரும்பி, ஸேனைமுதலியாருக்குத் திருமாலைஸாதி3த்து கொவணவர் வரிசையான திருமாலையை முதலியாண்டான் வம்ஶ்யரான குமார நரஸிம்ஹாசார்யருக்கு ஸாதி3த்து, ஆசார்யபுருஷர்கள் திருவோலக்கத்துக்குப் பெரியநம்பி கந்தாடையண்ணன் க்ரமத்திலே நடந்தது. ஸ்த2ாநவட்டிலிலே ஜீயர் ப4ட்டர் வாதூ4லதே3ஶிகர் முறைவீதத்திலே தீர்த்த2ஶட2கோப மரியாதைகள் நடந்தது. ப4ட்டருக்கு, திருவாராத4நகாலத்திலே தீர்த்த2ம் நடந்தது ப்ராமாணிகம். வாதூ4லதே3ஶிகருக்கு ஸ்ரீகார்யதீர்த்த2ம் நடந்தது ப்ராமாணிகம். பெரிய நம்பி முதல் திருவோலக்கத்துக்கு ஸமயவட்டில்தீர்த்த2ம் நடந்தது ப்ராமாணிகம்.

க்ருஷ்ணப்பநாயக்கர் கைங்கர்யம்

ஶகாப்3த3ம் ஆயிரத்துநானூற்று நாற்பத்தேழில் க்ருஷ்ணப்பநாயக்கர் துரைத்தனத்தில் ஸ்வாமிக்கு அநேகம் திருவாப4ரணம் ஸமர்ப்பித்து, தன் பேருக்குத் தென்திருக்காவேரிக் கரையிலே படித்துறையும் மண்டபமும் கட்டி, குமார நரஸிம்ஹ வாதூ4லதே3ஶிகரைக்கொண்டு ஸ்வாமிக்கு அனைத்தழகும் கண்டருளப் பண்ணுவித்தார்.

குமாரக்ருஷ்ணப்பநாயக்கர் கைங்கர்யம்

பின்பு, குமார க்ருஷ்ணப்பநாயக்கரும் ராஜ்யம் பண்ணுகையில், ஸ்வாமிக்கு ரத்நாங்கி3 ரத்நகிரீடம் முதலானது

லக்ஷத்தைம்பதினாயிரம் பொன் கைங்கர்யம், அந்த நரஸிம்ஹ தே₃ஶிகரைக்கொண்டு ஸமர்ப்பித்தார்.

உத்தமநம்பிக்கும் ப₄ட்டர் திருமலாசார்யருக்கும் உண்டான கலஹம்

ஶகாப்₃த₃ம் ஆயிரத்தைந்நூற்றொன்றுக்குமேல் முத்து வீரப்பநாயக்கர் துரைத்தனத்தில், முன் ப₄ட்டர் ஶிஷ்யன் **அழத்திவாழ்வித்தவன்** என்கிற சோழியன் கோயிலிலே காணிமுத்₃ரையும் உடையனாய், அபுத்ரபத்நீகனாய், காணி முத்₃ரைகள் மேலே ப₄ட்டர்கையிலே கடன்பட்டு கால த₄ர்மமடைந்தபின்பு, அவன் பெண் சீரங்கநாய்ச்சியார் அபுத்ரவிதந்துவாய், தன் காணிகளைத் திருமாளிகைக்குக் கொடுக்கவிருக்கிறவளை, உத்தமநம்பி அநுஸரித்து மித்ர பே₄த₃ம் பண்ணி, தனக்கு ஒருபெண்ணும் ஒருபிள்ளையும் இருக்கிறதை ரஹஸ்யமாக ஸ்வீகாரம் பண்ணுவிக்க; இதறிந்து ப₄ட்டர் மநுஷ்யர்கள் அவளை அழைக்கவருகையில், அவர்களைத் தள்ளிவிட்டு, அவள் காணிகளையும் லபி₄த்து, ப₄ட்டர் கையிலே முத்₃ரை அகப்பட்டுப்போனபடியினாலே வேறே க₃ருட₃முத்₃ரை பண்ணிக் கோயிலிலே போடுகையில்; ப₄ட்டர் திருமலாசார்யரும் அந்த முத்₃ரையைப் போடுவர்; ஒருத்தருக்கொருத்தர் கலஹமுண்டாய், உத்தமநம்பி முத்து வீரப்பநாயக்கரைக் கண்டு திருமலாசார்யரை அழைப்பித்து, வர சரிசொல்லி, அவர் முத்₃ரையை நிறுத்திப்போட்டார்.

சில காலத்துக்குப் பின்பு, த்ரிசிரபுரத்தின்மேலே ராயர் படையெடுத்து வருகையில், துரை, திருமலாசார்யரை அழைத்து, ஸ்வாமி ஸொத்தெல்லாம் தன் அதீ₄நத்துக்குக் கோட்டையிலே சேர்க்கச்சொல்ல; ப₄ட்டர் திருமலாசார்யரும், 'நாம் ஸமயம் கூட்டி வந்தபேருக்கு ஸ்வாதீ₄நமாகாமல் ஸ்த₂லத்தை நிர்வஹித்து, பின்பு உம் வசம் பண்ணுகிறோம்' என்று ப்ரமாணம்பண்ணி, ஸ்த₂லத்தில் வந்து, அநேக த்ரித₃ண்ட₃ காஷாயங்கள் ஸேக₂ரித்து ராமாநுஜகத்தியுடன் அநேகம்பேருக்கு ஸந்யாஸி வேஷமாகவும் ஏகாங்கிகளு

மாகப் பண்ணி, கொம்மைக்கு ஒருத்தர் விழுக்காடுவைத்து, ‘ஸ்ரீமத்3ரங்க3ம் மஹாத்3தா4ம’ என்று கூப்பிடச்சொல்ல; தோகூரிலே ராயர் படையிறங்கி, இது அறிந்து, ராயர் உத்தரவின்படி ரகு4நாத2நாயக்கரும் ஒரு அடப்பக்காரனுமாய் உள்ளேவந்து ஸ்வாமியை ஸேவிக்க; திருமலாசார்யரும், “உமக்கு ஜயம் வந்தாப்போலே ஸ்த்த2லம் உம் வசம் பண்ணுகிறோம்” என்று விநயவாக்கினாலே ரஞ்ஜிப்பிக்க; அவன் ஸந்துஷ்டனாய்ப் போனான்.

அந்த ஸமயத்திலே, உத்தமநம்பி, ப4ட்டர் ராயருக்கு எழுதினதாக ஒரு தப்போலையை முத்துவீரப்பநாயக்கனுக்குக் கொடுக்க; அவனும், நமக்கு “ஹிதராயிருக்கிறவர் த்3ரோஹம் பண்ணுவரோ?” என்று ஸம்ஶயப்பட; “அந்த ரகு4நாத2 நாயக்கரைப்போலே நீரும் வந்தால் நாம் பிடித்துத் தருகிறோம்” என்று சொல்ல; அந்தப்படி ஸ்வாமியை ஸேவிக்க; உத்தமநம்பியும் அண்ணனண்டையிலே வந்து “ப4ட்டர் மேலே தோ3ஷங்களை துரைக்குச் சொல்லவேணும்” என்று கேட்கையில்; அவர் அஸம்மதராகையாலே, மிகவும் நிர்ப்ப3ந்தி4த்து, “உத்தமநம்பி சொன்னது ஸரி” என்று சொல்லச்சொல்லி ஸம்மதிபண்ணுகையில்; துரையை அழைத்துவந்து, அண்ணங்காரை துரை கேட்கையில், அவரும் அப்படி சொன்னதினாலே துரைக்கு மநஸ்ஸிலே பட்டு, வாசலிலே ப4ட்டரைப் புரஸ்கரியாமல், வெளியிலே போய் ராயரை ஸமாதா4நம்பண்ணி அனுப்பி, தண்டு போகையில்; உத்தமநம்பி, “ப4ட்டர்கையில் லக்ஷாந்தரம் அறுவிட்டுத் தருகிறோம், அவர் ஶிஷ்யன் கத்திவால் நாயக்கனைக்கொண்டு ஆகவேணும்” என்று உபாயம் சொல்ல; துரையும் அவனையழைத்து, “ஒரு காரியம் அகத்தியமாய்ப் பண்ணித்தரவேணும்” என்று கேட்க; அவனும், “உங்களுக்கு த்3ரோஹம் பண்ணுகிறதில்லை, தாய்தலையைக் கொண்டுவரச் சொன்னாலும் கொண்டு வருகிறேன்” என்ன; திருமலாசார்யரைக் கொண்டுவரச் சொல்ல; “ஆகட்டும்” என்று, அநேக ஜட்டிகளையும்

ஆனைகளையும் கூட்டிக்கொண்டுவந்து, "ஶிஷ்யன் வருகி றேன்" என்று ஐயங்காருக்குச் சொல்லியனுப்பிவைக்க; அவரும், உள்ளே அழைத்துவரச் சொல்லி, பரஸ்பரம் ப்ரீதர்களாகவிருக்கையில்; ஒரு ஸமயத்தை உத்தமநம்பி நாயக்கருக்குச் சொல்ல; அந்தவேளையில், நாயக்கரும் பெருமாளை ஸேவித்து, ப₄ட்டர் வாசலிலே வர; ப₄ட்டரைக் கண்டு ஸேவித்து; வாசலிலே தனித்துநிற்கிற ப₄ட்டரை ஆனையைப் படுக்கவைத்து, க்ருதஸங்கேதர்களான மல்லரைக்கொண்டு, ப₄ட்டரை ஆனைமேலே பிடித்துப்போட்டுக் கொண்டு, துரை உத்தரவின்மேலே து₃ர்க்க₃த்திலே ஆறு மாஸம் போட்டு, உத்தமநம்பியைக்கொண்டு வீடு கொள்ளை யிட்டு, மநுஷ்யர்களையும் பிடித்துக்கொண்டு, அவரதீ₄நத்தை ஶ்ரீரங்க₃ம் தாதாசார்யருக்கு அதீ₄நம் பண்ணிப்போட்டான். அவர் குஞ்சுகுழந்தைகளும் துறையூருக்குப் போனார்கள்.

அவ்விடத்து ரெட்டி இருபதினாயிரம் பொன் அரண்மனைக்குக் கொடுத்து, அவரை விடுவித்து, துறையூர் சீமையிலே ஏழுவருஷம் வைத்துக்கொண்டிருக்கையில்; அந்த துரைக்குப்பின்பு **திருமலை சௌரி** ராஜ்யம் பண்ணுகையில், அந்த ப₄ட்டர் அவரை அநுஸரித்து; "இந்த அநர்த்த₂ மெல்லாம் உம்முடைய பெரியவர்கள், உத்தமநம்பி அண்ணங்கார் இவர்கள் வார்த்தையைக் கேட்டு நம்மை இப்படி பண்ணினார்கள்" என்று சொல்லுகையில்; துரையும், ப₄ட்டரை உபசாரோக்திகளினாலே ஶமிப்பித்து ப₃ஹுமாநம் பண்ணி, அவரதீ₄நமர்யாதை₃களை யதா₂ப்ரகாரம் கொடுத்தனுப்ப; உத்தமநம்பியும், பூர்வத்₃வேஷபீ₄தனாய், அவரை ஸ்நேஹித்திருக்கையில். சிலநாளைக்குப் பின்பு, துரை து₃ர்பு₃த்₃தி₄யாலே தம்முடைய ஆசார்யரான ப்ரணதார்த்திஹர வாது₄லதே₃ஶிகரை அதிக்ரமித்து; அவரை தே₃ஶாந்தரம் போம்படிபண்ணி, ஶவ்யதீ₃க்ஷையில் ப₄ண்டா₃ரம் மநுஷ்யன் அய்யகளையனிடத்தில் ஶிஷ்யனாய், முன் ஆசார்ய ஜ்ஞாதிகளென்கிற அபி₄மாநமும் அண்ணங்

காரிடத்தில் தப்பினதுக்கு ஸ்தத₂லத்திலே செங்கோல் கொடாததினுலே த்₃வேஷம் பிறந்து, அர்த்த₂ாசையினுலே ப₄ட்டரைக் கைப்பிடித்து, "உமக்கு ஸ்தத₂லத்திலே விரோதி₄ யார்? அர்த்த₂வான்களார்? காரியக்காரர் ஆர்?" என்று கேட்க; "அண்ணங்காரும், உத்தமநம்பியும்" என்று சொல்ல; "அவர்களுக்கு பு₃த்₃தி₄ சொல்லுகிறேம்" என்று ஒருக்கால் ஸ்ரீரங்க₃த்துக்கு வந்தான்.

x கோயிலொழுகு ஸம்பூர்ணம்

x 1888-ம் ஞு பதிப்பில் 'கோயிலொழுகு முதல் பாகம் ஸம்பூர்ணம்' என்று உள்ளது

ஸ்ரீ:

ஆழ்வாராசார்யர்களின் அருளிச்செயல்களுக்கு எளிய தமிழ் விரிவுரைகளுடன் வெளிவரும் சிறந்த

ஸ்ரீ வைஷ்ணவ மாதப்பத்திரிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

வேதம், ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள் முதலியவற்றிலிருந்து ஸ்ரீமந் நாராயணனின் பெருமையை விளக்கும் விஷ்ணுசித்த விஜயம் என்னும் சிறந்த க்ரந்தமும், தமிழில் கீதா வ்யாக்யானமும், திவ்ய ப்ரபந்தங்களுக்கு எளிய விவரணங்களோடு கூடிய பூர்வாசார்ய வ்யாக்யானங்களும், கு₃ருபரம்பராப்ரப₄ாவத்தை விளக்கும் ப்ரபந்நாம்ருதமும், விசிஷ்டாத்வைத ப்ரகரணக்ரந்தமான விவரண ஸஹித ஶாரீரககாரிகாவளியும் மற்றும் பல விஷயங்களும் வெளிவருகின்றன.

ஆசிரியர்:—

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

28-வது வருடச் சந்தா ரூ. 8-00.

ஸர்வஜித் மார்கழி 28உ (12—1—1948) முதல் தொடர்ந்து நடைபெறுகிறது.

ஸ்ரீஸூக்திமாலா வெளியீடுகள்

பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு
முதலானவற்ரோடு கூடிய பெரியவாச்சான்பிள்ளை முதலான
பூர்வாசார்யர்களின் க்$_3$ரந்த$_2$ங்கள்

	க்$_3$ரந்த$_2$ங்கள்	விலை	தபால்
1.	பரந்த ரஹஸ்யம் முதலிய எட்டு ரஹஸ்யங்கள்	1-50	-40
2.	ஸ்தோத்ரரத்நசது:ஶ்லோகீ ஜிதந்தே வ்யாக்யானங்கள் [அச்சில்]		
3.	திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	1-50	-40
4.	முதல் திருவந்தாதி வ்யாக்யானம்	1-88	-50
5.	பெருமாள் திருமொழி வ்யாக்யானம் [அச்சில்]		
6.	திருமாலை வ்யாக்யானம் [அச்சில்]		
7.	திருவாசிரியம் பெரிய திருவந்தாதி வ்யாக்யானம்	1-63	-45
8.	சது:ச்லோகீ வ்யாக்யானம் [நாயனாராச்சான்பிள்ளை]	1-50	-40
9	கத்ய வ்யாக்யானங்கள் [அச்சில்]		
10.	நாச்சியார் திருமொழி வ்யாக்யானம் [அச்சில்]		
11.	திருச்சந்தவிருத்த வ்யாக்யானம்	3-00	-65
12.	நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம் [அச்சில்]		
13.	ஸ்ரீராமாயண தனிச்லோகம் [விவரணத்துடன்] *part* I	3-50	-75
	ஷை இரண்டாம் பாகம் [விவரணத்துடன்]	7-00	1-35
14.	திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம்	0-50	-20
15.	பாசுரப்படி ராமாயணம் [விலையில்லை தபால்கூலி 0-10]		
16.	அமலனாதிபிரான் வ்யாக்யானங்கள் [அச்சில்]		
17	கண்ணிநுண் சிறுத்தாம்பு வ்யாக்யானம்	2-75	-70
18.	சிறியதிருமடல் வ்யாக்யானம் [அச்சில்]		
19.	முமுக்ஷுப்படி வ்யாக்யானம்	3-00	-65
20.	பெரியதிருமடல் வ்யாக்யானம் [அச்சில்]		
21.	முதல் திருவந்தாதி, அப்பிள்ளையுரை	3-00	-65
22.	இரண்டாந்திருவந்தாதி வ்யாக்யானம்	4-00	-85
23.	ஆறுயிரப்படி கு$_3$ருபரம்பராப்ரப$_4$ாவம்	12-00	1-50
24.	ஸ்ரீவசநபூ$_4$ஷண வ்யாக்யாநம் 4-அரும்பதவுரைகளுடன் முதல் பாகம்	6-00	1-20
25.	மூன்றாந்திருவந்தாதி வ்யாக்யானம் [விவரணத்துடன்]	4-00	-85
26.	அருளிச்செயல் ரஹஸ்யம் [பூ$_4$ஷணத்துடன்]	2 50	-65
27.	திருவெழுகூற்றிருக்கை வ்யாக்யானம் (விவரணத்துடன்)	1-00	-35
28.	கைசிகபுராணம்	1-00	-35
29.	பகவத் விஷயம் (முதலிரண்டு திருவாய்மொழிகள்)	25-00	5-00

P. T. O

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடுகள்

(ஸுதர்ஶன பத்ரிகையில் வெளிவந்த எளியநடை நூல்கள்)

1.	திருப்பாவை வ்யாக்யானம்	4-00	-85
2.	[போதாயந] ஸந்த்யாவந்தநம் பதவுரையுடன்	0-50	-25
3.	[போதாயந] உபாகர்மவிதி	0-50	-25
4.	புருஷஸூக்த வ்யாக்யானம்	0-75	-30
5	நாராயண ஸூக்த வ்யாக்யானம்	0-75	-30
6.	ஸ்ரீஸூக்த வ்யாக்யானம்	2-00	-50
7.	பூ நீளா விஷ்ணுஸூக்த வ்யாக்யானங்கள்	1-75	-45
8.	தேஹளீஶ ஸுப்ரபாதம்	0-25	-20
9.	ராமாநுஜதேசிக ஸ்தோத்ரங்கள்	1-00	-40
10.	விசிஷ்டாத்வைதவிஜயம் [முதல் பாகம்]	10-00	1-50
	ஷை இரண்டாம் பாகம்	5-00	1-00
11.	சாதிமத ஆராய்ச்சி	2-00	-50
12.	ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹஸ்தவம்	0-50	-20
13.	ஸந்மதகாரிகாவளீ	1-75	-45
14.	விஷ்ணுசித்தவிஜயம் முதல் பாகம்	5-00	1 00
	ஷை இரண்டாம் பாகம்	7-00	1-50
15.	கம்பனின் சமயம் முதல் பாகம்	1-00	-40
16.	சாரீரககாரிகாவளீ [முதல் பாகம்]	3-00	-65
17.	பெரியாழ்வார் ப்ரபாவம்	4-00	-85
18.	ஸாத்விகவிஜய ஸர்வஸ்வம் [தபால் உள்பட]	0-75	—
19.	ஸந்த்யாவந்தநபாஷ்யம்	3-00	-75
20.	திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	2-00	-50
21.	மகரநெடுங்குழைக்காதர் பாமாலையந்தாதி	1-50	-45
22.	ஸ்ரீகேசவமணிமாலை	0-75	-35
23.	மாமுனிகள் அறுநூருவது ஆண்டு மலர்	1-50	-50
24.	சங்கரரும் வைணவமும் [தபால் உள்பட]	0-75	—
25.	ஸித்தோபாய விஜயம் [ஸ்ரீரங்கராஜ விஜயம்]	3-00	-80
26.	திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி மூலம் மட்டும்	0-20	-10
27.	கத்யத்ரயம் மூலம் மட்டும்	0-25	-15
28	கீதா வ்யாக்யானம் முதல் ஷட்கம்	10-00	1-50
29.	அக்நிஹோத்ரியும் வைணவமும்	2-50	-85
30.	காட்டுமன்னார்கோவில் வீரநாராயணப்பெருமாள், நாதமுனிகள், ஆளவந்தார் வைபவம்	0-50	-20
31.	சோலைமலைக்குறவஞ்சி	3-50	-75

கிடைக்குமிடம்:-

ஸ்ரீ. உ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம் திருச்சி-17.